

# வில்லன் என்கிற கதாநாயகன்



பட்டுக்கோட்டை பிரபாகர்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# வில்லன் என்கிற கதாநாயகன்

## *Villan Engira Kadhanayagan*

Author:

பட்டுக்கோட்டை பிரபாகர்

Pattukottai Prabakar

For more books

http://www.pustaka.co.in/home/author/pattukottai-prabakar

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

முன்னுரை

1. ஆகஸ்ட் 15

2. இதுவரை...

3. காரப்பா! பழனியப்பா!

4. குகை

5. இறக்கப் பிறக்க வேண்டும்

6. காதல் - சில காட்சிகள்

7. நடக்கும் என்பேன், நடக்கும்!

8. புலி வருது!

9. காதல்னா என்ன பிரகாஷ்?

10. எங்கே போனாய்?

11. அனாமிகா

12. தேடல்

13. எனக்குள் எதிரி!

14. இது ஒரு முற்றும் துறந்த கதை

15. பூப்பூத்தல் அதன் இஷ்டம்

16. பரத் vs சுசிலா

17. வில்லன் என்கிற கதாநாயகன்

# முன்னுரை

அன்புள்ள உங்களுக்கு...

வணக்கம்.

இந்தத் தொகுப்பில் என்ன விசேஷம்?

இந்த பதினேழு சிறுகதைகளும் ஒரே வகையினைச் சேர்ந்த கதைகள் அல்ல. ஒரே கால கட்டத்தில் எழுதியவையும் அல்ல. 'அசார்ட்டட்' என்ற ஆங்கிலத்திலும், கலவை என்ற தமிழிலும் சொல்லலாம்.

புரூ ்ப் பார்க்கும்போது மறுபடி படித்ததில் தள்ளி நின்று ஒரு வாசகனாக சில கதைகளுக்கு சிலிர்த்துக் கொண்டேன். சில கதைகளுக்கு சிரித்துக் கொண்டேன். 'குகை' கதைக்கு வந்த ஏராளமான பாராட்டுக்களும், 'எங்கே போனாய், எப்போ வருவாய்?" கதைக்கு வந்த ஏராளமான கடிதங்களும் (உனக்கு எல்லாம் ஏன்யா சயின்ஸ் ்பிக்ஷன் முயற்சி?) நினைவுக்கு வந்தன.

தலைப்புச் சிறுகதையில் ஒரு தமிழ் சினிமாவுக்கான கரு ஒளிந்திருக்கிறது என்ற என் நண்பர் ஒருவர் சொன்னதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். காரணம்... வேறென்ன... அவ்வப்போது பொய் பேச எல்லோருக்கும் ஏற்படும் ஆசைதான்.

ஒரு சிறுகதை என்னவெல்லாம் செய்யும்?

இதழ்களை விரிய வைக்கும். இதயத்தை வருடும். தொண்டையைப் பிடிக்கும். முகத்தைச் சுளிக்க வைக்கும். புருவங்களை உயர்த்த வைக்கும். புத்தகத்தையே கிழிக்க வைக்கும். இந்தத் தொகுப்பின் கதைகள் சுளிக்கிற, கிழிக்கிற காரியங்களை கண்டிப்பாக செய்ய வைக்காது என்று கியாரண்டி கொடுக்கலாம்.

உள்ளடக்கம் எதுவாய் இருந்தாலும் தடையில்லாமல் படிக்க வைக்கும் 'ரீடபிளிட்டி' இருக்கிறதா என்று நான் ஒவ்வொரு கதையையும் எழுதி முடித்துவிட்டு சோதனை செய்து விட்டுத்தான் கவரில் போடுகிறேன்.

மேலும்... மன்னிக்கவும் மிக நீளமான முன்னுரைகள் படிக்க எனக்குப்

பிடிப்பதில்லை. ஆகவே எழுதவும் பிடிப்பதில்லை.

**பிரியங்களுடன்,**

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

# 1

# ஆகஸ்ட் 15

போக்குவரத்தின் நெரிசல் அதிகமாக இருந்ததாலும், தனது சைக்கிளின் பிரேக் மேல் அவ்வளவாக நம்பிக்கை இல்லாததாலும், இறங்கி ஓரமாக தள்ளிக் கொண்டு நடந்தார் விநாயகம்.

ஆற்றுப் பாலத்தின் மேல் தள்ளியபோது, ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு இரும்புக் கிராதிகள் மேல் கையூன்றி பாலைவனமாய் மணல்வரிகள் கொண்ட காவிரியைப் பார்த்தார். இதென்ன நதியா, மைதானமா? எப்படி இருந்த காவிரி ஏன் இப்படி வாடிப் போனாள்? பெருமூச்சின் வெளிப்பாடு. மனம் கலங்கியது.

இரண்டு கரைகளையும் அணைத்துக் கொண்டு, நுரைத்தபடி தாளலயத்துடன் பாய்ந்தோடி.... பார்க்கிற படைப்பாளிகளின் மனங்களில் எல்லாம் கதையாக, கவிதையாக, கட்டுரையாக எவ்வளவு தந்த காவிரி! சின்ன அழுக்குத் தேக்கத்தில் துவைத்து உலர்த்தப்பட்ட வெள்ளைத் துணிகள் வரிசையாகத் துடித்துக் கொண்டிருந்தன.

விநாயகம் தன் மேல்துண்டால் நெற்றியில் பொடித்த வியர்வைத் துளிகளை ஒற்றிக் கொண்டு, மீண்டும் சைக்கிளைத் தள்ளினார்.

மலைக்கோட்டைக்கு எதிரே சென்ற பரபரப்பான வீதியில் பிரிந்த அல்லிமால் தெருவில் தனது கடையின் வாசலில் ஓரமாக சைக்கிளை நிறுத்தினார். அதில் மாட்டியிருந்த மஞ்சள் நிற ஜவுளிப் பையிலிருந்து சாவி எடுத்து எண்கள் போட்ட எட்டு மரப்பலகைகளையும் தொட்டுக் கொண்டிருந்த குறுக்கு இரும்புப் பட்டையின் இரண்டு பக்கங்களிலும் பூட்டுகளைத் திறந்தார்.

பட்டையைக் கழற்றிக் கீழே போட்டுவிட்டு ஒவ்வொரு பலகையாகக் கழற்றினார். நான்கை இந்தப் பக்கமும், நான்கை அந்தப் பக்கமுமாகச் சார்த்தி வைத்துவிட்டு, குனிந்து கடையின் வாசல்படியைத் தொட்டு உதட்டில் வைத்துக் கொண்டு கண்மூடி ஏதோ சுலோகம் உச்சரித்தார்.

உள்ளே வந்தார். சுவாமிப் படத்தில் காய்ந்திருந்த பூச்சரத்தை நீக்கிவிட்டு, கொண்டு வந்திருந்த புதிய சரத்தை இலை பிரித்தெடுத்து மாட்டினார். இரண்டு ஊது பத்திகளைக் கொளுத்தி, ஆட்டி அணைத்து, படத்தின் இடுக்கில் சொருகினார்.

பழைய துணி எடுத்து ஒவ்வொரு ராக்கிலும் இருந்த புத்தக

வரிசைகளை மேலாகத் தட்டினார். முக்கியமான புத்தகங்கள் மட்டும் இருந்த கண்ணாடி பீரோவைத் துடைத்தார். பிறகு தரையில் ஒரு பக்கமாய் போட்டிருந்த மரப் பலகை மேல் தன் துண்டால் தட்டிவிட்டு சம்மணம் போட்டமர்ந்து குள்ளமான கணக்கு மேஜையை தன் பக்கம் இழுத்துக் கொண்டார்.

நேற்றைக்கு உறுப்பினர்கள் திருப்பிக் கொடுத்த புத்தகங்கள் ஒரு பக்கம் இருக்க... அவற்றை பக்கத்தில் இழுத்து வைத்துக் கொண்டார். நோட்டுப் புத்தகத்தைப் புரட்டினார். ஒரு நூலில் கட்டி வைத்திருந்த பென்சிலை எடுத்தார். பாக்கெட்டிலிருந்து கண்ணாடி எடுத்தணிந்து கொண்டு ஒவ்வொரு புத்தகமாகப் பெயர் பார்த்து நோட்டில் வரவு வைக்க ஆரம்பித்தார்.

புதுமைப்பித்தனின் அன்று இரவு.

அடடா! என்ன ஒரு எழுத்தாளன்! நவீன சிந்தனையை அந்தக் காலத்திலேயே வசீகரமாகச் சொன்னவராயிற்றே.

விநாயகம் அந்தப் புத்தகத்தைப் புரட்டி அதில் தனக்குப் பிடித்த ஒரு பகுதியைப் படிக்கத் துவங்கினார். இது இருபதாவது தடவையோ, முப்பதாவது தடவையோ...

'மூன்று நாள் தாடியைப் புறங்கையினால் பலமாகத் தேய்த்துப் பிறகு சிக்குப் பின்னிப் பறந்து கொண்டிருந்த சிகையைக் கோதி விட்டுவிட்டு, உள்ளே நுழைந்தார் வி.பி. 'அரைமணி நேரத்துக்கு மேல் உட்காரக் கூடாது அவனிடம் இருக்கிறதை வாங்கிக் கொண்டு கடைசி பஸ் புறப்படுமுன் புறப்பட்டுவிட வேண்டும்' என்ற வைராக்கியத்துடன் மனசு தனது நாட்டத்தின் பலன் காயா, பழமா என்பது பற்றி அலமந்தது. சற்று அழுக்குப் பிடித்த நீண்ட கதர் ஜிப்பா, கரையோரத்தில் கால்பட்டு கிழிந்த வேஷ்டி, கீழே விழுவோமா வேண்டாமா என தோளில் தொத்திக் தொங்கும் கதர் மேல் வேஷ்டி அவருக்கு தேச பக்தர் என விலாசம் ஒட்டின.'

இந்த வர்ணனையைப் படித்ததும் விநாயகம் வழக்கம் போல தன்னை ஒருதரம் பார்த்துக் கொண்டார். கதர் ஜிப்பா, கரையோரம் கால் பட்டு கிழிந்த வேஷ்டி, தோளில் தொத்திக் கொண்டு மேல் வேஷ்டிக்குப் பதிலாக மேல்துண்டு! அதுதான் மாற்றம்.

புத்தகத்தில் அடுத்த வரியாக 'குதிகாலடியில் அர்த்தசந்திர வட்டமாகத் தேய்ந்து போயும் விடாப் பிடியாகச் சேவை வைராக்கியத்துடன் மிளிரும் மிதியடி...' என்பதைப் படித்துவிட்டு கடைவாசலில் தான் விட்டிருந்த செருப்புகளைப் பார்ததார்.

புதுமைப்பித்தன் எப்போது எப்படி தன்னைப் பார்த்தார் என்று எப்போதும் போல இப்போதும் ஆச்சரியம் ஏற்பட்டது. புத்தகத்தை வரவு செய்து விட்டு, அடுத்த புத்தகத்தை எடுத்தார்.

சுந்தரராமசாமி - ஒரு புளியமரத்தின் கதை.

உடனே சாக்லேட்டைப் பார்த்த குழந்தையின் குதூகலம் ஏற்பட்டுப் புரட்டினார்.

‘ஆசாரிப்பள்ளம் ரோட்டில் ஜோசப்பின் லாண்டிரியைத் தாண்டி ஏறத்தாழ ஒரு மைல் செல்கிற போது புதியபாதசாரி ஒருவனுக்கு ரோடு அந்த இடத்தில் முடிவடைகிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவது ராணித் தோட்டத்தின் பிரம்மாண்ட வாசல்தான். எதிர்முகமாக முன்னேறிக் கொண்டிருப்பவனுக்கு ராணித் தோட்டத்தின் அகண்ட நுழைவாயிலும் அதையொட்டி வடபுறம் செங்குத்தான மலையில் ராக்ஷஸக் குழுந்தைகள் மாக்கோலம் போட்டு விளையாடியதைப் போல காட்சி தரும் கருங்கல் மதிற்சுவரும்தான் புலப்படும். வாசலையொட்டி தென்புறம் தெரிவதெல்லாம் ராக்ஷஸ மரமொன்று; அதை அடுத்து மரங்கள்; மரக்காட்டம் ரோடு முடிவடைந்து விட்டது என ஏமாந்து நிற்கிறவன் இயற்கையாகவே அவனைத் தாண்டி முன்னேறும் பஸ்ஸைக் கவனிக்கிறேன்.’

மூடிவைத்து விட்டு, அந்த ஆசாரிப்பள்ளம் ரோட்டில் இப்போதுதானே நின்று ராணித் தோட்டத்தின் அகண்ட நுழை வாயிலையும், கருங்கல் மதிற்சுவரையும் பார்ப்பதாகக் கற்பனை செய்து கொண்டார்.

அடுத்த புத்தகத்தை எடுத்தார்.

ஆதவன் - இரவுக்குப் பிறகு வருவது மாலை.

ஒரு அற்புதமான எழுத்தாளர் மறைந்து விட்டாரே என்று அவருக்குள் துக்க அலை ஒன்று பொங்கியது. புரட்டி அவர் வழக்கமாகப் படிக்கும் அந்த வசனப் பகுதிக்கு வந்தார்.

“காதல் மிக அழகானது - நமக்கு அது கிடைக்கும்பட்சத்தில்".

“எப்போது அல்லது எங்கே அது கிடைக்கும்."

“எப்போதும் எங்கு வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் கிடைக்கக்கூடும். அதே சமயத்துல எல்லாருக்கும் கிடைத்து விடுவதுமில்லை. கிடைத்தவர்கள் பலர் அதை உணர்வதில்லை. உணர்ந்தவர் பலர் அதைப் பெறுவதில்லை."

“கடவுளைப் பற்றி ஆஸ்திகர்கள் சொல்வது போல அல்லவா இருக்கிறது".

“ஆமாம். இரண்டுக்கும் ஒற்றுமைகள் உண்டு."

“கடவுள் வழிபாட்டை ஒரு ரொமான்டிக் எஸ்கேப்’பாகச் சொல்பவர்கள் இருக்கிறார்கள். அல்லது ஏதோ ஒன்றுக்காக ஸப்ஸ்டியூட்டாக..."

“மிகவும் சர்ச்சைக்குரிய விஷயம்."

விநாயகம் புத்தகத்தை மூடி வைத்து விட்டு இந்த வசனங்களை அந்த இளைஞனும், இளைஞியும் எந்த முகபாவனை வைத்துக் கொண்டு பேசியிருப்பார்கள் என்று கற்பனையில் ஆழ்ந்தார்.

“சார், நூறு ரூபாய்க்கு சில்லறை இருக்கா?"

பக்கத்து பெட்டிக் கடைப் பையன் வந்து அவர் கற்பனையைக் கலைத்ததில் எரிச்சல் ஏற்பட்டது. இல்லை என்பதை தலையாட்டலிலேயே தெரிவித்து விட்டு மற்றொரு புத்தகத்தை எடுத்தார்.

விநாயகம் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் ஆக்ஸிஜன் இல்லை. இந்தப் புத்தகங்கள்தான் அவருக்குப் புத்தகங்கள் மேல் அதீத ஆர்வம், மாறாத வெறி, தீராத காதல் என்று எத்தனை அடைமொழி கொடுத்து சொன்னாலும் அது அவரின் நிஜ உணர்வில் கால் பாகத்தையே வெளிப்படுத்தியதாகும்.

பள்ளி நாட்களில் ஒரு தமிழ் வாத்தியார்தான் அவருக்குப் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தினார். விநாயகத்திற்குள் விழுந்த தீப்பொறி பற்றிக் கொண்டது. ‘பண்டிகைக்குப் புதுத் துணி எடுத்துத் தரவேண்டாம். அந்தக் காசைக் கொடுத்து விடுங்கள் புத்தகம் வாங்கிக் கொள்கிறேன்’ என்று வீட்டில் அடம் பிடித்தவர். வீட்டுக்கு வருகிற உறவினர்கள் ‘உனக்கு விளையாட என்ன பொம்மை வேண்டும்?’ என்றபோது ‘புத்தகம் வாங்கித் தாருங்கள்’ என்ற கேட்டவர். பழைய புத்தகக் கடையில் பொட்டலம் மடிக்க எடைக்குப் போடப்பட்ட புத்தகங்களை இவர் எடைக்கு வாங்கி வந்து விடுவார். எந்த ஊருக்குப் போனாலும் எல்லோரும் ‘இங்கே கோவில் எங்க இருக்கு, சினிமா தியேட்டர் எங்க இருக்கு’ என்று விசாரிக்க இவர் மட்டும் ‘புஸ்தகம் விக்கிற கடை எங்க இருக்கு?’ என்று விசாரிப்பார்.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்த புத்தகங்கள் வீட்டின் ஓர் அறையை அடைத்துக் கொள்ள... அடிக்கடி வீடு மாற்றும் அப்பா திட்டித் தீர்ப்பார். தாம் நடத்தும் பலசரக்குக் கடையில் பொட்டலம் கட்டிப் போட்டு விடு என்பார்.

இந்த விஷயத்தில் விநாயகத்திற்கும் அப்பாவுக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். விநாயகம் தன் புத்தகங்களை யாருக்காவது இரவல் கொடுத்தால் ஒரு நோட்டில் பெயர், கொடுத்த தேதி எழுதி வைத்து விடுவார். ஒரு வாரம் பார்ப்பார். திரும்ப வரவில்லை என்றால் தேடிச் சென்று, பாதிதான் படித்திருக்கிறேன் என்றாலும் கேட்காமல் பிடுங்கிக் கொண்டு வந்து விடுவார். வாங்கிச் சென்ற புத்தகத்தில் யாராவது பிடித்த பகுதியை அடிக்கோட்டிருந்தாலோ, படித்த பக்கத்தின் நினைவுக்கு மூலை மடக்கியிருந்தாலோ கோபப்பட்டு கண்டபடி திட்டுவார். அடுத்து அந்த நபரின் பெயர் புத்தக இரவல் கும்பலின் பட்டியலில் நீக்கப்பட்டு விடும். ஒரு சமயம் வாங்கிச் சென்ற ஆசாமி அட்டை கிழிந்து விட்டது என்ற அலட்சியமாகச் சொல்ல, அவர் சட்டையைப் பிடித்துச் சண்டைக்குப் போய்விட்டார்.

அப்பா இறந்த பிறகு அவரின் பலசரக்குக் கடையை நிர்வகிக்கும் பொறுப்பு விநாயகம் மேல் விழுந்தது. அப்போது வீட்டில் இவரும், இவரது மனைவியும், இவரின் ஒரே மகள் ஆனந்தியும்தான்.

பத்துப் பைசாவுக்கு மிளகு, கால் ரூபாய்க்குப் பொட்டுக் கடலை என்கிற சில்லறை வியாபாரத்தில் இவரால் படிப்பதற்காக நேரம் ஒதுக்க முடியாமல் போக... கடையை இழுத்து மூடி விட்டார்.

அப்புறம் பிறந்த யோசனைதான். இந்த வாடகை நூல் நிலையம். பாரதியாரை அவருக்கு ரொம்பப் பிடிக்கும் என்பதால் பாரதி வாடகை நூல் நிலையம் என்று போர்டு மாட்டினார். பலசரக்குக் கடையின் ராக்கைகளை, தச்சன் கொண்டு புத்தக ராக்கைகளாக மாற்றி, தம்முடைய சேகரிப்புகளைக் கொண்டு வந்து வைத்து, மேலும் புதிதாகப் புத்தகங்கள் வாங்கிப் போட்டார்.

இது துவங்கி இருபது வருடங்களாகிறது. ஐந்நூறுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள். இருந்தாலும் லாபம் கொடுக்கிற தொழில் இல்லை இது.

விநாயகத்திற்கு மனைவி காலமாகி, மகளுக்கு நான்கு வருடங்கள் முன்பு திருமணமாகி இப்போது தனியாளாக இருப்பதால் தேவைகள் குறைவு. எந்த காலத்திலும் அவர் அதிக வருமானத்திற்கு ஆசைப்பட்டதில்லை.

வாழ்க்கையில் அவருக்குப் பிடித்த விஷயம் நினைத்த போதெல்லாம் நினைத்த புத்தகத்தைப் படிப்பது. அதற்கு அனுமதிக்கும் இந்தத் தொழில் திருப்தியாகி விட்டது. அதனால் எத்தனையோ பேர் ஏதேதோ தொழில் செய்ய ஆர்வமூட்டியபோதெல்லாம் கண்டிப்பாக அந்த யோச்னைகளை நிராகரித்து விட்டார்.

ஆனால்... விநாயகத்திற்கு தன் மருமகனை சமாளிப்பதுதான் இப்போது பெரிய பிரச்சனையாக இருக்கிறது.

தீர விசாரித்து, பக்கத்திலேயே இருக்கிற ஸ்ரீரங்கம் என்பதால் மகளை அடிக்கடி பார்த்து வரலாம் என்கிற செ்கரியமெல்லாம் யோசித்து சந்தோஷப்பட்டுத்தான் ஆனந்தியைக் கட்டிக் கொடுத்தார்.

ஆனால் ஆனந்தி இந்த நான்கு வருடங்களில் புருஷனோடு இருந்த நாட்களை விட அப்பாவோடு இருந்த நாட்கள்தான் அதிகம். மருமகன் சிவராமுக்கு நிரந்தர வேலை இல்லை. உழைக்கிற ஆர்வமும் இல்லை. மனைவியைக் கன்னத்தில் அறைந்து அப்பா வீட்டுக்கு அனுப்பினால் இரண்டாயிரத்தோடு வருவாள், இடுப்பில் உதைத்து அனுப்பினால், ஐயாயிரம், சூடு போட்டு அனுப்பினால் பத்தாயிரம் என்று ஒரு கணக்கு வைத்திருக்கிறான்.

விவாகரத்து வாங்கிக் கொடுக்கச் சொல்லி ஆனந்தி பல தடவை கேட்டு விட்டாள். ‘இந்தத் தடவை திருந்தி விடுவார், பொறுமையாகப் போகலாம்’ என்று இவர்தான் நம்பிக்கை வார்த்தை சொல்லி அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

இந்தப் போக்குவரத்தில் ஆனந்தி தற்சமயம் இவரோடு இருக்கிறாள்.

மருமகனின் புதிய கோரிக்கை என்ன வென்றால்...

கால் காசுக்குப் பெறாத இந்தப் புத்தகக் கடையை காலி செய்து மருமகன் பெயருக்கு மாற்றி விட வேண்டுமாம். அவர் இங்கே ஜட்டி, பிரா விற்கிற ரெடிமேட் கடை ஆரம்பித்து பொறுப்பாகத் தொழில் நடத்தி ஆனந்தியைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்கிறாராம்.

இன்றைக்குக் காலையில் கடைக்குப் புறப்பட்ட போது கூட, வீட்டில் ஆனந்தி இந்தப் பேச்சை எடுத்த போது, விநாயகம் தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

“இதோ பாரும்மா, எங்கிட்ட சொத்துன்னு இருக்குறது அந்தக் கடை மட்டும்தான். என் காலத்துக்கப்புறம் அது உனக்குத்தான் வந்து சேரப் போகுது. புத்தகத்தை எல்லாம் பப்ளிக் லைப்ரரில போட்டுட்டு நான் செத்தப்புறம் உன் புருஷனை அங்க எந்த கடை வேணுமானாலும் வெச்சி நடத்தச் சொல்லு."

“அதுக்கில்லைப்பா. அந்த இடம் பஜார்ல முக்கியமான இடம். பக்கத்துப் பக்கத்து கடைக்காரங்க ஆயிரக் கணக்கு வியாபராத்துல சம்பாதிக்கிறாங்க. ரெடிமேட் கடை வெச்சா எப்படியும் மாசம் ஆறாயிரம், ஏழாயிரம் சம்பாதிக்க முடியும்னு இவர் சொல்றார். வாடகைக்கு விட்டாக் கூட ஒரு லட்சம் அட்வான்சும், மூவாயிரம் வாடகையும் தரத் தயாரா இருக்காங்களாம். நீங்க பண்றது முட்டாள்தனமாம்."

“எல்லாம் எனக்குத் தெரியும்மா. லாபத்தையும் வருமானத்தையும் பார்த்திருந்தா நான் இத்தனை வருஷம் இதை நடத்திட்டிருக்க மாட்டேன் ஆனந்தி. இது மக்கள் சேவைக்காவும், என் சந்தோஷத்துக்காகவும் செய்துட்டிருக்கேன். எவ்வளவு பேருக்கு அறிவு விருத்திக்கு உதவுது தெரியுமா? தமிழ்ல டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி பண்ற எத்தனை மாணவர்கள் தேடி வந்து அவங்களுக்கு வேண்டிய புத்தகங்களை எடுத்துப் போறாங்க தெரியுமா? எங்கேயும் கிடைக்காத அபூர்வமான புத்தகம் எவ்வளவு வெச்சிருக்கேன் தெரியுமா?"

“தெரியும்ப்பா ஒவ்வொரு புஸ்தகமும் உங்களுக்கு ஒரு புள்ளை மாதரின்னு நல்லாத் தெரியும். இந்த மனுஷனுக்குத் தெரிய மாட்டேங்குதே!"

“அவருக்குத் தொழில் நடத்தற ஆர்வம் எல்லாம் கிடையாதும்மா. எத்தனை தடவை எவ்வளவு கொடுதாச்சு. எல்லாத்தையும் சீட்டுக் கட்டுல தோத்தாச்சு. புதுசா தோக்கறதுக்குப் பணம் வேணும். பணம் எதாச்சும் ஏற்பாடு பண்ண முடியுமான்னு பார்க்கறேன்."

“வேணாம்ப்பா. அங்க போய் அடி, உதை வாங்கி நரகவேதனை படறதுக்கு நான் இங்கேயே இருந்துடறேன். இதான் எனக்கு நிம்மதியா இருக்கு."

என்னதான் ஆனந்தி வெறுப்பில் அப்படிச் சொன்னாலும் அதெப்படி அவளைக் கணவனோடு சேர்த்து வைக்காமல் இருக்க முடியும்?

ஒரு பத்தாயிரம் ஏற்பாடு செய்து கொடுத்தனுப்பினால் மாப்பிள்ளை சமாதானமாவார். எப்படி ஏற்பாடு செய்வது.

கடையில் உட்கார்ந்து கொண்டு யோசனையில் ஆழ்ந்த விநயாகத்தற்குத் தாம் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் எடுத்து பணம் கட்டி வருவது நினைவுக்கு வந்தது. அதில் கடன் போட்டு எடுத்துத் தரலாமே. இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் ஆறுமுகம் லால்குடியில் இருக்கிறார். அவரிடம் சொன்னால் எல்லா ஏற்பாடுகளும் செய்து விடுவார்.

விநாயகம் யோசனையில் இருக்கும்போது, “என்ன மாமா, பலமான யோசனை?" என்று குரல்கொடுத்தபடி உள்ளே வந்தான் சிவராம். சலவை வேட்டி, சலவை சட்டை ஜவ்வாது மணத்தது.

“வாங்க மாப்பிள்ளை, உக்காருங்க."

புறங்கையால் மீசையைத் தள்ளி விட்டபடி தன் கர்சீப்பை போட்டு, அதன்மேல் அமர்ந்தான். அவன் முகம் கிட்டே வந்த போது சிகரெட் நாற்றம். விநாயகம் இருமினார்.

“என்ன மாமா, யோசனை செஞ்சீங்களா?"

“என்ன சாப்பிடறீங்க? ஜில்லுன்னு மோர் கொண்டு வரச் சொல்லட்டுமா?"

“தொழில் ஆரம்பிக்க கை கொடுங்க மாமா? மெயின் தெருவுல நம்ம சொந்தக் கடை சும்மா இருக்குறப்ப ஸ்ரீரங்கத்தில் அட்வான்ஸ் கொடுத்து கடை எடுக்கறது முட்டாள் பண்ற வேலை மாமா."

“இங்க கடை சும்மா இல்லையே மாப்பிள்ளை."

“நானும் பல தடவை ஜாடை மாடையா சொல்லிட்டேன். ஆனந்தி மூலமாவும் சொல்லிவுட்டுட்டேன். இது ஒரு தொழில்னு உக்காந்து பண்ணிட்டுருக்கீங்களே... நாலு பாக்கெட் சிகரெட் வாங்கி வெச்சிக்கிட்டு வியாபாரம் செஞ்சாலாவது கொஞ்சம் காசு பார்க்கலாம். இந்தக் காலத்துல எவன் படிக்கிறான் இலக்கியமும், நாவலும்! வீட்டுக்கு வீடு டீ.வி. வந்துடுச்சு. ஆயிரத்தெட்டு சேனல் வந்துடுச்சு. பேப்பர் படிக்கிறதுக்கே நேரம் இல்லை. நீங்க சேர்த்து வெச்சிருக்கிற இந்த செல்லரிச்ச புத்தகத்தை எல்லாம் எவன் படிக்கிறான்?"

“உங்களுக்குத் தெரியாது மாப்பிள்ளை. அதுக்குன்னு ரசனை உள்ள கூட்டம் தனியா இருக்குது."

“அப்ப எனக்கெல்லாம் ரசனை இல்லைய?"

“புஸ்தகம் படிக்கிற ரசனையைச் சொன்னேன்."

“சரி, இப்ப உங்களுக்கு இதில என்னதான் வருமானம் வருது?"

“ஐந்நூறு, எழுநூறு வருது."

“பேத்தலா இல்லையா? இதே வரிசைல பத்து கடை தள்ளி புதுசா ஒரு பேப்பர் ஸ்டோர்ஸ் வந்திருக்கு. ஒரு லட்சம் அட்வான்சாம். மூவாரயிரம் வாடகையாம். ரெண்டு வட்டி கணக்கு பார்த்தாலும் லட்ச ரூபாய்க்கு மாசம் ரெண்டாயிரம் வட்டி வரும். வாடகை சேர்த்தா அஞ்சாயிரம் வருமானம் வரும். கடையைக் காலி பண்ணி ஒப்படைச்சிட்டு வீட்ல சும்மா உக்காந்திருந்தாலே அஞ்சாயிரம் வர வாய்ப்பிருக்கிறப்ப எதுக்கு இப்படி பைத்தியக்காரத்தனம் பண்றீங்க மாமா?"

“மாசம் அஞ்சாயிரம் எனக்கு அவசியமில்லையே மாப்பிள்ளை."

“உங்களுக்கு வேணாம்னா எல்லாருக்கும் வேணாமா? எனக்கு வேணுமே. உங்க ஒரே பொண்ணுக்குச் சேரப் போற சொத்துதானே இது."

“வாஸ்தவம். ஆனா அதுக்கு நான் சாகணும் மாப்பிள்ளை."

“நீங்க உயிரோட இருக்கிற வரைக்கும் உங்க மாப்பிள்ளையும், பொண்ணும் சுகப்படக்கூடாதா? என்ன மனசு இது?"

“அப்படி யாராச்சும் நெனைப்பானா? என் பொண்ணைக் கட்டிக் கொடுத்துட்டேன். அவளை சுகமா வெச்சிக்க வேண்டியது என் மாப்பிள்ளையோட பொறுப்பு. அதுக்கு ஓரளவு உதவிட்டேன். இன்னும் கொஞ்சம் உதவுறேன். ஆனா நான் சாகற வரைக்கும் இந்தக் கடைல நான் இந்தத் தொழில்தான் செய்ய விரும்புறேன். மாப்பிள்ளை என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க."

சிவராம் கொஞ்ச நேரம் முறைப்பாகப் பார்த்தான்.

“என்னமோ உதவுறேன்னு சொன்னீங்களே..."

“ஒரு பத்தாயிரம் ஏற்பாடு பண்ணித்தர்றேன். ஸ்ரீரங்கத்திலேயே ஒரு கடை பாருங்க மாப்பிள்ளை."

வேறு திசை பார்த்தபடி, “கொடுக்கறதைச் சீக்கிரம் கொடுத்தா செ�கரியமா இருக்கும்” என்றான்.

“என்னோட இன்ஷ்யூரன்ஸ் பாலிசி மேல கடன் போட்டுத்தான் எடுத்துத் தரப்போறேன். லால்குடில ஏஜெண்டைப் பார்க்கணும். கடைப் பையன் ரெண்டு நாளா வரலை. அவன் வந்ததும்..."

“நான் பாத்துக்க மாட்டேனா மாமா? அந்தளவுக்கு கூட பொறுப்பு இல்லாதவனா உங்க மருகமன்? நோட்ல பதிவு பண்ணிட்டு புக்கு தரணும். வர்ற புக்கை பதிவு பண்ணி வைக்கணும். என்ன, கம்பசித்திர வேலை? நீங்க இப்பவே போய்ட்டு வாங்களேன். இங்க இருக்கிற லால்குடி போய்ட்டு வர்றதுக்கு நாள், நட்சத்திரம் பார்க்கணுமா?"

விநாயகம் தலையசைத்து துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டார்.

மாலை ஐந்து மணிக்குத்தான் லால்குடியிலிருந்து திரும்ப முடிந்தது. பஸ் பிடித்து மெயின்கார்ட் கேட் வந்து, போஸ் ரோட்டில் வீட்டுக்குக் காய்கறி, பழம் வாங்கிக் கொண்டு தம் கடையை நோக்கி நடந்தார்.

மாப்பிள்ளையை வீட்டில் சாப்பிடச் சொல்ல வேண்டும். தங்கச் சொல்ல வேண்டும். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு 'சும்மா நடந்துட்டு வரலாம் வாங்க' என்று கூட்டிக் கொண்டு காவிரிப் பாலத்திற்கு வந்து மென்மையாக அவரின் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

அவர் மனத்தில் எதிர்காலம் பற்றி என்னதான் திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு டீ.வி. கடை வாசலில் பத்து டீ.வி. பெட்டிகளில் ஒரு பெண் செய்தி வாசித்துக் கொண்டிருக்க... வெளியே இருபது முப்பது பேர் நின்று பார்த்தார்கள். இவரும் நின்றார்.

'நாளை நமது தேசத்தின் ஐம்பதாவது சுதந்தர தின விழா நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது'.

சட்டென்று விநாயகத்தின் உடலெங்கும் ஒரு சிலிர்ப்பு ஓடியது. விநாயகம் ரொம்ப வருடங்களாக சுதந்தர தினத்தன்று முழுக்க மௌனம் அனுஷ்டித்து வருகிறார். அன்றைய தினம் காலையில் வீட்டில் செய்தித் தாள்கள் படித்து விட்டு, மகாத்மா காந்தியின் சத்திய சோதனை புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவார்.

பல வரிகளுக்கு கண்கள் கசியும், நிறுத்தி அடையாள விரல் வைத்துப் புத்தகம் மூடி சுதந்தரப் போராட்ட நிகழ்வுகளை யோசித்து மனத்திற்குள் பதறுவார்.

சுதந்திரம் கிடைத்தபோது அவர் பத்து வயதுச் சிறுவன். ஆனந்தியிடம் பலமுறை சொல்லியிருக்கிறார். 'இன்னும் பத்து வருஷம் முன்னாடி பொறந்து காந்தியோட சுதந்தர போராட்டத்தில் ஒரு வீரியமான இளைஞனாக நான் கலந்துக்க முடியாம போச்சேன்னு ஒரு வருத்தம் இருக்கும்மா. நாட்டோட விடுதலைக்கு நான் எதுவுமே செய்யலையே...'

அஹிம்சை வழியில் வந்த சுதந்தரம் என்றாலும்... எத்தனை உயிர்ச் சேதங்கள்! வேதனைகள்! ரத்தச் சிதறல்கள்! நினைத்தாலே உடம்பெல்லாம் நடுங்கும் ஜாலியன் வாலாபாக் சம்பவம் ஒன்று போதாதா? எத்தனை ஆவேசக் கவிதைகள்! எத்தனை புரட்சி பேச்சுக்கள்! மதம், மொழி, இனம் எல்லாம் தூக்கி வைத்துவிட்டு எத்தனை கோடி பேர் ஒற்றுமையாக ஓரணியில் திரண்டார்கள்!

விநாயகத்திற்கு, டீ.வி. பெண் யார் எங்கே கொடி ஏற்றுவார் என்ற சொல்கிற செய்தி எல்லாம் முக்கியமாகப்படவில்லை. விலகி மெதுவாக நடக்கத் துவங்கினார். உள்ளம் ஏனோ கனத்துப் போனது.

தமது கடையைச் சமீபித்தார். இலேசாகத் தலை சுற்றியது. நடப்பதை நிறுத்தி மேல் துண்டால் முகம் துடைத்துக் கொண்டு நடந்து கடைக்கு

வந்தவர்... திகைத்துப் போனார்.

சிவராம் கடையில் நின்று உத்தரவிட்டுக் கொண்டிருக்க, இரண்டு தச்சர்கள் புத்தக ராக்கைகளைக் கழற்றிக் கொண்டிருந்தார்கள். கடையில் ஒரே ஒரு புத்தகம் கூட இல்லை.

பதறிப் போய், "மாப்பிள்ளை, இதெல்லாம் என்ன?" என்று கத்தி விட்டார் விநாயகம்.

சிவராம் புன்னகைத்து பாக்கெட்டிலிருந்து சிகரெட் எடுத்து நிதானமாகப் பற்றவைத்து, "மாமா, இதமாகச் சொன்னா நீங்க கேக்கலை. அதான் அதிரடி நடவடிக்கை எடுத்துட்டேன். இந்தக் கடை உங்கப்பா உங்களுக்கு விட்டுட்டுப் போனது. நியாயமா தாத்தா சொத்து பேத்திக்கு வரணும். இங்க என் இஷ்டப்படி கடை வைக்கப் போறேன். சம்மதம்னா வாழ்த்துங்க. சம்மதமில்லைன்னாலும் கோர்ட்டுக்குப் போய்க்கங்க - கேஸ் போட காசு வேணும், மறந்துடாதீங்க!" என்றான்.

விநாயகத்திற்குப் பதற்றத்தில் உடல் முழுதும் நடுங்கியது.

"அடப்பாவி! புஸ்தகம் எல்லாம் என்னடா செஞ்சே?"

"எடைக்குப் போட்டுடலாம்னுதான் நினைச்சேன். திருப்பி நீங்க வாங்கிட்டு வந்துவிடுவீங்களேன்னு... அதோ பாருங்க..."

எதிர்ப்புறம் சற்றுத் தள்ளி இருந்த ஒரு காலிமனையின் மூலையைச் சுட்டிக்காட்ட... அங்கே கறுப்பாக ஒரு சாம்பல் மலை இருந்தது. இலேசாக புகை வந்து கொண்டிருந்தது.

விநாயகம் அலறியடித்துக் கொண்டு அங்கே ஓடினார். ஒரு புத்தகத்தின் ஒரு பக்கம் கூட மிச்சமில்லாமல் எழுத்தெழுத்தாய் எரிந்து முடிந்திருந்தது.

விநாயகத்திற்கு ரத்தம் கொதித்தது. ஆவேசமாக மறுபடி கடைக்கு ஓடி வந்தார். சிவராமின் சட்டையை ஆக்ரோஷமாகப் பிடித்து உலுக்கி கத்தினார், "டேய்! நீ எவ்வளவு பேரை அவமானப்படுத்திட்டே தெரியுமாடா? பாவி! சண்டாளா! உன்னை...." என்று பரபரத்தவர் கண்களில் தச்சனின் உளி கண்ணில் பட... பாய்ந்து எடுத்தார். முற்றிலும் நிதானமிழந்த நிலையில், என்ன செய்கிறோம் என்று யோசிக்க அவகாசம் இல்லாமல்...

மத்திய சிறைச்சாலை. நூலகப் பகுதியில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த விநாயகத்தை வார்டன் அழைத்தார்.

"உங்க பொண்ணு உங்களைப் பார்க்க வந்திருக்கா"

விநாயகம் பார்வையாளர் பகுதிக்கு வந்தார். அங்கே நின்றிருந்த ஆனந்தியை முகம் பார்க்க இயலாமல் அமைதியாக நின்றார்.

அதிகாரி அனுமதியுடன் அவள் கொண்டு வந்திருந்த சில புத்தகங்களை அவரிடம் நீட்டினாள்.

“அதே கடையில அதே வாடகை நூல் நிலையம் ஆரம்பிச்சிருக்கேன்பா. பேர்தான் மாத்திருக்கேன். விநாயகம் வாடகை நூல் நிலையம்!"

விநாயகம், வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு பெருமிதத்தோடு அவளைப் பார்த்தார்.

------------------

2

# இதுவரை...

அழுகை எல்லாம் எப்போதோ தீர்ந்து போயிருந்தது.

ஆக்ஸிஜன் சிலிண்டரின் உபயத்தால் சுவாசித்துக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தாள் விமலா. திரவ உணவு உள்ளே செலுத்த ஒரு ட்யூப் கழிவை வெளியே எடுக்க ஒரு ட்யூப்.

மூடியிருந்த அவர் இமைமேல் அமர்ந்த ஈயை புத்தகம் விசிறித் துரத்தினாள்.

உள்ளே வந்த நர்ஸ் கருவியின் மானிட்டரில் உயர்ந்து தாழ்ந்து - ஓடிக் கொண்டிருந்த அவரின் இதயத் துடிப்பின் கோடுகளை சற்று நேரம் மௌனமாக கவனித்தாள்.

“ஏம்மா, டாக்டர் என்ன சொல்றாரு?"

“உங்க தம்பி கூட பேசிட்டிருக்காரு. அவர் வந்து விபரமா சொல்வாருங்க."

“பரவால்லைம்மா, உனக்குத் தெரிஞ்சதை சொல்லேன். இனிமே அவரு பிழைக்கிறதுக்கு வாய்ப்பே இல்லையா?"

நர்ஸ் தயங்கினாள். விமலாவை நேராகப் பார்ததாள்.

“உங்களுக்கு எத்தனைக் குழந்தைங்கம்மா?"

“ரெண்டு பொண்ணுங்க. ரெண்டு பேரையும் கட்டிக் கொடுத்தாச்சு. ஒருத்தி விருத்தாசலத்தில் இருக்கா. ஒருத்தி டெல்லில இருக்கா"

“மாப்பிள்ளைங்க வசதியா இருக்காங்களா?"

“சௌகரியமா இருக்காங்க. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லாம, நீ என் குடும்பத்தைப் பத்தி விசாரிச்சிட்டிருக்கியேம்மா?"

“தைரியமா இருங்கம்மா. ரெண்டு பொண்ணுங்க இருக்காங்கன்னு சொல்றீங்க. அப்புறம் என்ன கவலை? இங்க ஆறுமாசம் அங்க ஆறுமாசம்னு இருக்கலாமே..." மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க, எதுவும் நம்ம கைல இல்லை."

நர்ஸ் போய்விட, மீண்டும் ஈயை விரட்டினாள்.

தொண்டையை அடைத்தது. இதைவிட நாசூக்காக சொல்ல முடியாது. அவ்வளவுதானா?

உங்கள் இந்த செயற்கை சுவாசம் நம் தாம்பத்யத்தின் கடைசி இழைகளா? இப்போது நம் இல்லற வாழ்வின் இறுதி அத்தியாயம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறதா?

முப்பத்து இரண்டு வருடங்களா? நிஜமாகவா? நமக்கு திருமணமாகி அத்தனை வருடங்களா ஆகி விட்டன? நிச்சயதார்த்தத்தின் போது நீங்கள் ரகசியமாக என் தொடையைக் கிள்ளியது நேற்று இல்லையா?

அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் அமர்ந்து, "ஏய், விமலா, நிஜமா சொல்லு, உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?" என்று மைசூர்பாகு உடைத்துச் சாப்பிட்டபடி நீங்கள் கேட்டதும்...

அப்போது உதிர்ந்து உங்கள் பட்டுச்சட்டையில் விழுந்த துணுக்கை கறையாகிவிடப் போகிதே என்று அவசரமாக நான் தட்டி விட்டதும் விநாடி விநாடியாக ஞாபகத்தில் ஓடுகிறதே...

"கேக்கறனில்ல? சொல்லு"

"ம்."

"பொய் சொல்றே. உனக்கு கொஞ்சம் வருத்தம்தான்"

"ஐயோ, இல்லை!"

உங்கப்பா உனக்கு பேங்க்ல உத்தியோகம் பார்க்கிற மாப்பிள்ளையாதான் ரெண்டு வருஷமா தேடிட்டிருந்தாராமே. நீதானே அப்படிப் பார்கச் சொன்னியாம். கடைசில ஒரு மளிகைக்கடை நடத்தறவன் மாப்பிள்ளையா அமைஞ்சுட்டேன். மனசுல ஏமாற்றம் இருக்காதா?"

"உத்தியோகத்தை விட குணம்தான் முக்கியம்"

"அப்படீன்னு எடுத்துச் சொல்லி உன்னை சமாதானப்படுத்திட்டாங்க. அப்படித்தானே? சரி, போகட்டும். பேங்க் வேலை பார்க்கற மாப்பிள்ளைதான் அதிகம் சம்பாரிப்பானா?"

"அதுக்காக இல்லை."

"வேறு எதுக்காக அப்படி ஆசைப்பட்ட?"

"நிறைய லீவு கிடைக்கும். வெளியூர் சுத்தலாம். சாயங்கலாம் சீக்கிரமே வீட்டுக்கு வந்துடுவாங்க. அப்புறம் நிறைய நேரம் இருக்கும். சினிமா, டிரமான்னு அடிக்கடி கூட்டிட்டுப் போவாங்க."

"அதென்னமோ நியாயம்தான். நான் சினிமா பார்த்தே ஆறு மாசம் ஆச்சு. இது சம்பாரிக்கிற வயது. எனக்கு வியாபாரத்துல ஆர்வம் ஜாஸ்தி. நம்ம ஊர்ல கடை போட்டா தெரிஞ்ச மூஞ்சிகளுக்கு கடன் இல்லைன்னு சொல்ல முடியாமல் போயிடும். லாபம் எல்லாம் வசூல்

ஆகாத கடன்லேயே கிடக்கும். அதனாலதான் முப்பத்தஞ்சு கிலோ மீட்டர் தள்ளி டவுன்ல பார்த்து கடை பிடிச்சேன். ஆரம்பிச்சு இரண்டு வருஷம் ஆச்சு. தினம் இங்க வீட்லேர்ந்து ஏழரை மணிக்கெல்லாம் புறப்பட்டுடுவேன். பஸ் பிடிச்சுப் போயி கடை திறந்தா, மறுபடி கடை கட்டிட்டு வீட்டுக்கு வர்றப்போ மணி ஒம்போது ஒம்பதரை ஆய்டும்."

"ஞாயிற்றுக்கிழமை?"

"ஞாயிற்றுக்கிழமை லீவுதான். எங்கடா இவன் இருபத்து நாலு மணி நேரமும் கடையே கதின்னு இருந்துடுவானோன்னு பயந்துட்டியா? ஞாயிற்றுக்கிழமை பூரா உன்னோட தான் இருப்பேன். சினிமா, டிராமா எங்க வேணாலும் போகலாம். இன்னும் நல்லா உழைச்சு தொழிலை விருத்தி செஞ்சிட்டேன்னு வெச்சுக்க. அப்புறம் ஆளுங்களைப் பார்த்துக்கச் சொல்லிட்டு ஒரு வாரம், பத்து நாள்னு வெளியூர் டூர் எல்லாம் போகலாம். சரியா?"

"சரிங்க"

"கொஞ்சம் முன்னேறி தலையெடுக்கிற வரைக்கும் பொறுமையா இருக்கணும். நாலு காசு இருந்தாதான் நம்மளை மதிப்பாங்க. புரிஞ்சுதா?"

"புரியுதுங்க."

அதன் பிறகு கொட்டாவி வரும் வரை மளிகைக் கடையில் உள்ள தொழில் சூத்திரங்களையும், வியாபாரத் தந்திரங்களையும் கண்கள் பளபளக்க எத்தனை ஆர்வமாகப் பேசினீர்கள்.

முதலிரவில் மளிகைக்கடையின் வரவு செலவு கணக்கைப் பற்றிப் பேசிய முதல் நபர் நீங்களாகத்தான் இருப்பீர்கள்.

தொழிலில் தான் உங்களுக்கு எத்தனை ஆர்வம்!

அந்த ஆர்வத் தீ இந்த முப்பத்து இரண்டு வருடங்களில் ஒருநாள் கூட சுடர் மங்கி நான் பார்த்ததில்லை.

மூன்று மாதங்களுக்கு முன்பு சரக்கு கொள்முதலுக்கு போன இடத்தில் திடீரென்னு மயக்கம் போட்டு விழுந்து, தகவல் வந்து, ஆஸ்பத்திரியில் சேர்த்து...

எல்லா சோதனைகளும் முடித்து உங்கள் மூளையில் கட்டி என்று டாக்டர் சொன்னபோது கூட நீங்கள் வருத்தப்பட்டது உங்கள் உடலுக்காக இல்லையே...

"என்ன விமலா, டாக்டர் ஏதோ ஆபரேஷன் அது இதுன்றார். மாப்பிள்ளைங்களுக்கும் பண்ணிக்கச் சொல்றாங்க. எனக்கு ஒண்ணும் ஆகாது. புதுசா ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனியோட ஏஜென்சி எடுக்கலாம்னு பேச்சுவார்த்தை நடத்திட்டிருக்கேன். இப்பப் போயி..."

"இப்பக்கூட உங்களுக்கு வியாபாரத்திலதான் சிந்தனையா? ரெண்டு

பொண்ணுங்களையும் கட்டிக் கொடுத்தாச்சு. சொந்த வீடு இருக்கு. கடை இருக்கு. பேங்க்ல பணம் இருக்கு. இன்னும் யாருக்காக சம்பாரிக்கணும் நீங்க?"

“இன்னும் எவ்வளவோ கடமைகள் இருக்கு விமலா?"

“என்ன கடமை?"

“கட்டிக் கொடுத்துட்டா சரியாப்போச்சா. ஒண்ணொண்ணுக்கும் செய்ய வேணாமா? வேற செலவுகளே இல்லையா? என்ன பெரிசா சாதிச்சுட்டேன்? உழைப்புல சலிப்பே வரக் கூடாது விமலா. போதும்னு எப்ப நினைக்கிறமோ அப்பவே சோம்பேறித்தனம் வந்துடும்“ என்றீர்களே...

தொடர்ந்து ஒரு மணிநேரம் நீங்கள் ஓய்வாக உட்கார்ந்திருந்து நான் பார்த்ததேயில்லை. எப்போதும் காலில் சக்கரங்கள்.

கல்யாணமான புதுசில் ஒரு வருடத்திற்கு மட்டும் நேரத்திற்கு வீட்டுக்கு வந்தீர்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியே அழைத்துச் சென்றீர்கள். அப்புறம்?

வீட்டுக்கு வர பனிரெண்டு மணி, ஒரு மணி கூட ஆகும். ஞாயிற்றுக்கிழமைகளில் கடை திறக்கப் போய் விடுவீர்கள். சில சமயம் கடைக்கு மாடியில் உள்ள அறையிலேயே தங்கியும் விடுவீர்கள்.

உங்களோடு பேசும் நேரம் குறைந்தபோது, நல்ல வேளையாக குழந்தைகள் பிறந்தார்கள். எனக்கு ஒரு புதிய உலகம் கிடைத்தது.

‘ஏன் இப்படி அசுரத்தனமாக உழைக்கிறீர்கள்?" என்று நான் அலுத்துக் கொள்ளும்போதெல்லாம் குழந்தைகளின் படிப்புச் செலவு, அவர்களின் கல்யாணச் செலவு என்று நியாயமான காரணங்களைச் சொல்லி விடுவீர்கள்.

உங்கள் நேரம் எனக்கு முழுமையாகக் கிடைக்காமல் போகிறதே என்று ஏக்கம் ஏற்படும் போதெல்லாம், நம் குடும்பத்திற்காகத்தானே இப்படி உழைக்கிறார் என்று யோசித்து நானே சமாதானப்படுத்திக் கொண்டுள்ளேன்.

இரண்டு பெண்களுக்கும் கல்யாணமான பிறகு நீங்கள் நிதானப்பட்டு, ஓய்வெடுப்பீர்கள், எப்போதும் என்னோடு இருப்பீர்கள் என்ற நினைத்திருந்தேன்.

ஆனால் இப்போது... நிரந்தரமான ஒரு ஓய்வை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறீர்களே... தாங்க முடியவில்லை.

சிகரெட், மது என்று எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாத உங்கள் உடம்புக்கு ஏன் இப்படி நோய் வந்தது? குடும்பத்திற்காக உழைப்பதைத் தவிர வேறு எதுவுமே தெரியாதே உங்களுக்கு... யார் செய்த பாவத்திற்கு நீங்கள் இப்படி மூன்று மாதம் ஆஸ்பத்திரியில்

ரணகளப்பட்டீர்கள்?

இனி காலையில் யாருடைய முகத்தில் விழிப்பேன்? யாருக்காக சமையல் செய்து டி்ஃபன்பாக்ஸில் அடைத்துக் கொடுப்பேன்? துவைக்க உங்கள் சட்டை, வேட்டி இருக்கப் போவதில்லை. இரவு சமையல் சூடாக செய்து வைத்துவிட்டுக் காத்திருந்தால் நீங்கள் வரப்போவதில்லை. நாம் இருவரும் சேர்ந்து டி.வி. பார்க்கப்போவதில்லை. கடையில் நடந்த சம்பவங்களை நீங்கள் சுவாரசியமாக சொல்லப் போவதில்லை. ஏதாவது புரியாமல் கேட்டால் 'அசடு!' என்று திட்டப் போவதில்லை.

விமலா உதடுகளைக் கடித்து கொண்டாள். பார்வையைத் திருப்பி ஜன்னல் வழியாக விரையும் வாகனங்களைப் பார்த்தாள்.

“அக்கா!"

முந்தானை முனையில் விழிகளை ஒற்றிக்கொண்டு திரும்பிப் பார்த்தாள்.

சண்முகம் கையில் காகிதங்களுடன் நின்றிருந்தான். ஒன்று விட்ட தம்பி.

“டாக்டர் என்னப்பா சொல்றாரு?"

“இப்போ இதயம் இயந்திரத்துலதான் துடிச்சிட்டிருக்காம். பிழைக்க வாய்ப்பே இல்லை என்றார். மூளை இறந்துடுச்சாம். இனிமே இங்கே கண்ட்டினியூ பண்றது அநாவசியச் செலவுன்றார். நீ சரின்னு சொன்னியின்னா அனிதாவுக்கம், நந்தினிக்கும் தகவல் கொடுத்துட்டு ஊருக்கு எடுத்துட்டுப் போக ஏற்பாடு செஞ்சிடுவேன்."

விமலா கட்டில் பக்கம் திரும்பாமல், “செஞ்சிடு" என்றாள்.

வாடகைக்கு எடுத்த நாற்காலிகள் மடக்கி மினி லாரியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. தற்காலிகப் பந்தல் பிரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஊதுபத்திகள் புகைந்து கொண்டிருக்க, புதுமாலை போடப்பட்ட புகைப்படத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் விமலா.

மாப்பிள்ளைகள் மீண்டும் கருமாதிக்கு வருவதாய் சொல்லி புறப்பட்டுப் போயிருக்க, இரண்டு மகள்களும் எஞ்சிய முக்கிய உறவினர்களை கவனித்து முடித்து விட்டு அம்மா அருகில் வந்து அமர்ந்தார்கள்.

“அம்மா, கருமாதி முடிஞ்சதும் டெல்லி வந்துடும்மா. என்னோடயே இருந்துடு" என்றாள் அனிதா.

“அம்மாவுக்கு குளிர் ஒத்துக்காது. உன்னோட நிரந்தரமா இருக்க முடியாது. என்னோட இருந்துட்டும்" என்றாள் நந்தினி.

“நான் எங்கயும் வரலை. இங்க தான், இதே வீட்ல தான் இருக்கப் போறேன்" என்றாள் விமலா.

“என்னம்மா பேசறே? இங்க இனிமே யார் இருக்கா உனக்கு?"

“அவரோட ஞாபகங்கள் இருக்கு"

வாசலில் நிழலாட நிமிர்ந்து பார்த்தாள் விமலா. ஆஸ்பத்திரியில் அவரை கவனித்துக் கொண்ட நர்ஸ்! புடவையில் இருந்ததால் உடனே புரியவில்லை. நர்ஸ் துக்கம் விசாரிக்கக் கூட வருவாளா?

அவள் வந்து விமலா அருகில் அமர்ந்தாள்.

சற்று நேரம் ஆறுதல் சொல்லிவிட்டு, கொடுக்கப்பட்ட காபியைக் குடித்துவிட்டு, “உங்ககிட்ட கொஞ்சம் தனியாப் பேசணுமே, அந்த ரூமுக்குப் போயிடலாமா?" என்றாள்.

விமலா புரியாமல் பார்த்து, அவளோடு நடந்து தனியறைக்கு வந்ததும், “என்ன பேசணும்?" என்றாள்.

“பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி உங்க கணவர் கொஞ்சம் தெம்பா இருந்தப்போ என்கிட்ட ஒரு கவர் கொடுத்தார். அவர் பிழைச்சிட்டா அவர்கிட்டேயே திரும்ப ஒப்படைச்சிடணும்னும், இறந்துட்டா உங்ககிட்ட ஒப்படைக்கணும்னு சொல்லியிருந்தார். அதை ஒப்படைக்கத்தான் வந்தேன். இந்தாங்க"

நர்ஸ் கொடுத்த கவரை நடுங்கும் விரல்களால் வாங்கினாள். நர்ஸ் போனதும் கிழித்து உள்ளிருந்த கடிதத்தைப் படித்தாள்.

‘அன்பு மனைவி விமலாவுக்கு...’

இறந்த பிறகு என் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்றால் என் மனதில் பாரமாக அழுத்திக் கொண்டிருக்கும் ஒரு பெரிய ரகசியத்தை நான் இறக்கி வைத்தாக வேண்டும்.

என்னை மன்னித்து விடு விமலா. நான் உன்னை ஏமாற்றி விட்டேன். உனக்கு துரோகம் செய்துவிட்டேன். நம் திருமணத்திற்கு முன்பே டவுனில் டீச்சராக வேலை பார்க்கும் ரோஸியை நேசித்தேன். மதம் விட்டு மதம் திருமணம் செய்ய அப்பா சம்மதிக்கவில்லை.

அவசரமாக உன்னை எனக்கு கட்டி வைக்க முயன்றார். இந்தத் திருமணத்திற்கு நான் சம்மதிக்கவில்லை என்றால் விஷம் சாப்பிட்டு விடுவேன் என்று மிரட்டினார். வேறு வழியில்லாமல் உன்னை திருமணம் செய்து கொண்டேன்.

நான் டவுனில் கடை ஆரம்பித்ததே ரோஸியை அடிக்கடி சந்திக்கத்தான். அவளை என்னால் மறக்க முடியவில்லை. பிரியவும் முடியவில்லை. அவளாலும்தான். எனவே டவுனில் ஒரு வீடு பிடித்து நாங்கள் ரகசியமாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தோம்.

இன்று வரை இந்த ரகசிய வாழ்க்கை தொடர்கிறது. அவளுக்கு ஒரு பையன், இரண்டு பெண்கள். பையன் படித்து விட்டு வேலை தேடிக்கொண்டிருக்கிறான். பெண்கள் கல்யாண வயதில் இருக்கிறார்கள்.

விமலா, என்னை நீ மன்னிப்பாயா?

ஊடல் நலம் மோசமானதும் நமது வக்கீலை அழைத்து உயில் எழுதிவிட்டேன். அதில் கடையை என் பையன் பெயருக்கும், டவுனில் என் பெயரில் வாங்கின கிரவுண்டையும், பேங்க் கணக்குகளையும் ரோஸி பெயருக்கும் எழுதி உள்ளேன். உனக்கு ஊரில் உள்ள வீட்டை எழுதியிருக்கிறேன்.

வேண்டா வெறுப்பாக உன்னை திருமணம் செய்து கொண்டிருந்தாலும் உனக்கு நான் எந்தக் குறையும் வைத்ததில்லை. உடைகள், நகைகள், சாப்பாடு, இரண்டு குழந்தைகள் என்று நிறைவாக வைத்திருந்தேன்.

என்னைப் புரிந்து கொண்டு மன்னிப்பாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு

உன் கணவன்

விமலா தொய்ந்து உட்கார்ந்தாள்.

கடவுளே! முப்பத்திரண்டு வருடங்களாக நான் ஏமாளியாக இருந்திருக்கிறேனே? ஒரு நாளில்லை. இரண்டு நாளில்லை. முப்பத்திரண்டு வருஷங்கள்!

இத்தனை வருஷமும் ஒரு நாடகக் கணவனாகவே வாழ்ந்தீர்களா? உழைக்கிறேன் பேர்வழி என்ற அங்கே அந்த வீட்டில் வாழ்ந்தீர்களா?

எப்போதாவது அபூர்வமாக அன்பாகப் பேசின வார்த்தைகள் கூட ஒத்திகை பார்க்கப்பட்ட வசனங்களா?

எனக்கு நீங்கள் கொடுத்தது வாழ்க்கை அல்ல; ஒரு அகதிக்கு கொடுக்கப்படும் அடைக்கலம்!

அனிதா உள்ளே வந்தாள், “என்னாச்சும்மா... உனக்கு ஒண்ணும் இல்லையே? ஏன்மா இப்படி உக்காந்திருக்கே? வக்கீல் வந்திருக்காரும்மா, வா", என்றாள்.

விமலா கூடத்திற்கு வந்தாள்.

வக்கீல் வணக்கம் சொல்லிவிட்டு, “உங்க வீட்டுக்காரர் உயில் எழுதியிருக்காரும்மா" என்றார்.

“தெரியும். எனக்கு இந்த வீடு தேவையில்லை. அதையும் அங்கேயே கொடுத்திடுங்க. எங்க கையெழுத்துப் போடணுமோ போட்டுடறேன்." என்றாள்.

“அம்மா, என்னாச்சு? யாருக்கு கொடுக்கச் சொல்றே?" என்றாள் நந்தினி. விமலா அமைதியா அந்தக் கடிதத்தை நீட்டினாள்.

நந்தினியும், அனிதாவும் ஒரு சேரப் படித்து அதிர்ந்தார்கள்.

“உங்க கோபம் ரொம்ப சரிதான். அதுக்காக ஒரு சொத்தை எதுக்காக

இழக்கணும்?" என்றார் வக்கீல்.

“அவர் செஞ்ச கொடுமைக்கு அபராதமா இந்தச் சொத்தை வசூல் பண்ணிக்கச் சொல்றீங்களா? என்னோட முப்பத்திரண்டு வருஷ வாழ்க்கையை இழந்திருக்கேன் ஸார் இந்த மனுஷன்கிட்டே! சொத்து என்ன? ஆனா இந்த மனுஷனுக்காக ஒரு விஷயத்தை இழக்க நான் தயாராக இல்லை.”

விமலா விடுவிடுவென்று எழுந்து சாமி மடத்திற்குச் சென்றாள். குங்குமம் எடுத்து தன் வெற்று நெற்றியில் வைத்துக் கொண்டாள். பூச்சரம் எடுத்துத் தன் கூந்தலில் செருகிக் கொண்டாள்.

மறுபடி வக்கீலிடம் வந்தாள்.

“இந்த வீட்ல இருக்கிற பாத்திரம், பண்டம் எல்லாம் அந்தாள் பணத்தில வாங்கினது. எதுவும் எனக்கு வேணாம். அந்தத் தையல் மிஷின் எங்கப்பா எனக்குக் கொடுத்தது. அது மட்டும் எனக்குப் போதும். எங்கே கையெழுத்துப் போடணும்?" என்றாள் அதிகாரமாக.

-------------------------

# 3

# காரப்பா! பழனியப்பா!

பெங்களூரில் இருந்து கார் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. வேங்கட கிருஷ்ணனை என்னோடு டூருக்கு அழைத்தமைக்காகப் புதிதாக ஒரு ஜோடி செருப்பு வாங்கி என்னையே அடித்துக் கொள்ள வேண்டும். போட்டிருக்கும் பழைய ஜோடியால் ஏற்கனவே அடித்துக் கொண்டாயிற்று.

சுத்தியல் பிடித்தவன் கையும், சொறி சிரங்கு வந்தவன் கையும் சும்மாவே இருக்காது என்பார்கள். புதிதாகக் கார் வாங்கியவன் வாயும் சும்மா இருக்காது என்று இனிமேல் சேர்த்துக் கொள்ளவேண்டும். எப்படா கார் வாங்குவோம் என்று தயாராகக் காத்திருந்த என் மனைவி சுந்தரி, (சத்தியமாகக் காரணப் பெயரில்லை) உடனே மளிகைக் கடை ரோக்கா போல பிள்ளையார் சுழிபோட்டுத் துவங்கி ஒரு பெரிய லிஸ்ட்டே கொடுத்து விட்டாள்.

1. டிரைவ்-இன் ரெஸ்ட்டாரெண்ட், 2. டிரைவ்-இன் சினிமா தியேட்டரில் படம், 3. கடற்கரை, 4. மாங்காடு அம்மன் தரிசனம். 5. நட்சத்திர அந்தஸ்து பெற்ற வி.ஜி.பி. தங்கக்கடற்கரை, 6. விமான நிலையம், 7. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, 8. பெங்களூர் டூர்.

“ஏண்டி இதெல்லாம் என்ன ஏதாச்சும் குறுக்கெழுத்துப் போட்டி விடைகளா?” என்றபோது அவளுக்குக் கோபம் வந்து முகம் இன்னும் அசிங்கமாகி விட்டது.

“விளையாடறீங்களா? கார் வாங்கினதும் எங்கெங்கே போகலாம்னு நான் போட்டு வெச்சிருக்கிற பிளான் இது."

பெரிய என்ஜினியர்! பிளான் போடுகிறாளாம். பெட்ரோல் செலவுக்கு யார் அழுவது? “புதுசா கார் வாங்கியிருக்கேன் மாமா" என்று காட்டியதும், என் மரியாதை தர வேண்டாத மாமனார் என்னமோ சந்தையில் மாடு வாங்குவது போல சுற்றி வந்து பார்த்து, கதவுகளைத் திறந்து பார்ததது, பெயிண்ட் உறுதியாய் இருக்கிறதா என்று சுரண்டிப் பார்த்து, சின்னக் குழந்தை போல ஹாரன் அடித்துப் பார்த்து கடையில், ‘இப்ப வர்ற தயாரிப்புல தரம் இவ்வளவு தான் எதிர்பார்க்க முடியும்’ என்றார்.

எனக்கு எரிச்சலென்றால் எரிச்சல். என்னவோ இவர் வீட்டுக் கொட்டடியில் உரித்த தேங்காய் மட்டைகளைப் போல கார்களைக் குவித்து வைத்திருப்பது போல என்ன ஒரு அகம்பாவம். எனக்குத் திருமணமாகி பன்னிரெண்டு வருஷமாகப் பார்க்கிறேன். அதே சைக்கிள், சீட் கவர் கிழிந்து தொங்கும். டயருக்கடியில் வைத்து நசுக்க எலுமிச்சைப் பழம்கூட வாங்கித் தரவில்லை. இதில் பேச்சு மட்டும் கொடிகட்டிப் பறக்கும்.

ஆனால் இந்தக் குமுறல்களை எல்லாம் சுந்தரியிடம் சொல்ல முடியாது. உடனே ரவுடி சுந்தரியாகி விடுவாள்.

சட்டையைப் பிடிக்காத குறையாக சண்டை போடுவாள். என்றைக்கோ ஒருநாள் என் அம்மா வெள்ளெழுத்து தடுமாற்றத்தால் காப்பிப் பொடிக்கு பதிலாக மூக்குப் பொடியைப் பாலில் போட்டுவிட்ட ஒரு சம்பவத்தை எடுத்துக் கொள்வாள். ஷேக்ஸ்பியர் கொட்டேஷன் போல அதை வைத்துக் கொண்டு பரம்பரை முழுக்க நாறடித்து பேசுவாள். எனவே...

“இவ்வளவு பெரிய லிஸ்ட் போட்டுருக்கியே. இந்த வருஷத்துக்குள்ளே நடக்கற காரியமா இது. பெட்ரோல் எவ்வளவு செலவாகும் தெரியுமா?"

“என்னது, இந்த வருஷமா? இதெல்லாம் இந்த மாசத்துக்கு லிஸ்ட் அடுத்த மாசத்துக்கு வேற லிஸ்ட் தயார் பண்ணிட்டிருக்கேன். யானை வாங்கிட்டு அங்குசம் வாங்கத் தயங்கினா எப்படி?"

“அங்குசம் ஒரு தடவை வாங்கினால் போதும்டி. பெட்ரோல் அடிக்கடி போடணும். ஓட்ட ஓட்ட தீர்ந்துடும்."

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. ரேடியோல விளம்பரம் மட்டும்தான் கொடுக்கலை. மத்தபடி பக்கத்து வீட்ல, எதிர்த்த வீட்ல, என் சொந்தக்காரங்ககிட்டே எல்லாம் லிஸ்ட்டையே காட்டிச் சொல்லிட்டேன். இது என் மானப் பிரச்சினை."

“எனக்குப் பணப் பிரச்சினைடி."

“வேணும்னா உங்க வாட்சை வித்துடலாமா? அதான் காருக்குள்ளேயே ஒரு எலெக்ட்ரானிக் வாட்ச் இருக்கே. அதுல டைம் பார்த்துக் கிட்டாப்

போச்சு."

“ஆபீசுக்குள்ளே போறப்ப அதைக் கழட்டி எடுத்துக்கிட்டுப் போகச் சொல்றியா?"

“அதெல்லாம் தெரியாது. நாம லிஸ்ட்படி எல்லா இடத்துக்கும் போறோம்."

பேட்ஸ்மேன் எல்.பி.டபிள்யூ. இல்லை எப்படி வேண்டுமானாலும் கத்தட்டுமே. அம்ப்பயர் விரலை உயர்த்தி அவுட் என்று சொல்லிவிட்டால் அவுட்தானே?

என் வீட்டு அம்ப்பயர் தீர்மானமாக முடிவெடுத்ததும் நான் மௌனமாக ஆபீஸ் என்கிற பெவிலியனுக்குத் திரும்பினேன்.

நான், சுந்தரி, என் இரண்டு வாண்டுகளுடன் லிஸ்ட்டில் ஏழு வரைக்கும் பதினைந்து நாட்களில் டிக் செய்து முடித்தோம். என் போனஸ் பணம் சோப்புக் கட்டி போல கரைந்து ஒல்லியானது.

“எப்பங்க லிஸ்ட்ல எட்டாவது அயிட்டத்தை டிக் பண்றோம்?"

இரண்டு நாட்களுக்கு முன்பாக இரவில், குறை வெளிச்சத்தில், கட்டிலில், என் அருகில், மெல்லிசான நைட்டியில் என் சுந்தரி கேட்டாள். சாகசக்காரி. சூழ்நிலை அறிந்து சாதிப்பவள். லைட் அண்ட் ஷேட் எஃபெக்டில் சுந்தரி கூட அழகாய் தெரிகிற நேரத்தில் கேட்டால் ‘நோ' என்கிற பதிலுக்கே இடம் ‘நோ'.

“வர்ற சனி, ஞாயிறு போகலாம் சுந்தரி. வெள்ளி சாயங்காலம் ஆபீஸ் முடிஞ்சு வந்ததும் புறப்படலாம். ஆனா... பெங்களூர் பயணம். அதனால பெட்ரோல் செலவு அதிகமாகும். கார்ல அஞ்சி பேர் வரைக்கும் போகலாம். இன்னொரு ஃபேமிலியோட சேர்ந்து போனா ஜாலியாக இருக்கும். கம்பெனிக்கு கம்பெனியாச்சு. காசும் பாதி ஷேர் கணக்குப் பண்ணி கறந்துடலாம்“ என்றேன்.

“ஐடியாங்க" என்று பல் குத்த முத்தம் தந்தாள். முதலிரவுக்கப்புறம் நானாக ஒரு தடவைகூடக் கேட்டதே இல்லை. சன்ஷேட் மாதிரி துருத்தின பல்லோடு முத்தம் பெற்றவர்களுக்குத்தான் சுகமான ‘சுருக்' தெரியும்.

எந்த ஃபேமிலியை அழைக்கலாம் என்று விவாதிக்கப்பட்டது. எடுத்த எடுப்பில், “உங்க பக்கத்து சொந்தக்காரங்க யாரும் வேணாம்!" என்று வீட்டோ பவரை வீசி வாயடைத்து விட்டு அவள் பக்கத்து சொந்தக்காரர்களாக அலசத் துவங்கினாள்.

அவ வாயாடி, பாத்ரூமுக்குள்ளேர்ந்து கூட பேசிக்கிட்டே இருப்பா. வேணாம். இவ தின்னிப் பண்டாரம். மத்தவங்களுக்குக் கொடுத்தாலும், பரவாயில்லை. தானே திம்பா. இவ வேணாம். அவ ரொம்ப குண்டு. மூணு பேர் இடத்தை அடைச்சுக்குவா. ஒவ்வொரு தடவை அவ இறங்கி வர்றதுக்குள்ளே நாம அந்த இடத்தைப் பார்த்துட்டே

வந்துடுவோம். வேணாம். இவ தூங்குமூஞ்சி. சாய்ஞ்சி என் தோள்ல விழுவா, ஜாக்கெட் எல்லாம் எண்ணெய் ஆய்டும். வேணாம்...

இப்படியாக சுந்தரிக்கு யாரையும் பிடிக்காமல் போய், பார்ட்னர் குடும்பத்தை தேர்வு செய்யும் முழுப் பொறுப்பும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது - ஒரே ஒரு நிபந்தனையோடு, அது - அவர்கள் என் பக்கத்து சொந்தக்காரர்களாக இருக்கக் கூடாது.

இந்தக் காலகட்டத்தில்தான் சலூனில் நான் என் பழைய நண்பன் வேங்கட கிருஷ்ணனைச் சந்தித்தேன். டோக்கன் நம்பர் என்று எதுவும் தரப்படவில்லை. என்றாலும் முன்னால் வந்து சேர்ந்த வரிசையில் அவன் நான்காவது நபராகவும், நான் ஐந்தவாது நபராகவும் இருந்தோம்.

“இங்க உக்காந்துகிட்டிக்கிறதுக்கு வா ஒரு காபி சாப்பிட்டுட்டு வரலாம்“ என்றான் வெங்கி. அப்படித்தான் அழைப்பது.

காபி சாப்பிட்டபடி என்னமோ என் மனசை எக்ஸ்ரே எடுத்தவன் மாதிரி வெங்கி சொன்னான். “லீவு விட்டாச்சா? ரெண்டு நாளைக்காவது எங்கேயாச்சும் டூர் அழைச்சுட்டுப் போங்கன்னு பொண்டாட்டியும் பசங்களும் தொணப்பறாங்க! ரயில்லயோ, பஸ்லயோ போனா பெரிய அவஸ்தை மூடே போய்டும். பிரைவேட் டாக்ஸி எடுத்துட்டுதான் போகணும். எவ்வளவு ஆகும்னு விசாரிச்சா மயக்கம் போட்டு விழற மாதிரி சார்ஜ் சொல்றான். என்ன பண்றதுன்னு தெரியலை."

“எங்க போறதுக்கு பிளான் போட்டே?"

“ரெண்டு நாளைக்கு எவ்வளவு ஊர் போக முடியும்? சும்மா பெங்களூர் மட்டு போய்ட்டு வரலாம்னு நினைச்சேன்."

ஆகா! பார்ட்டி கிடைத்தது!

“வெங்கி, நீ கேட்டதால எனக்க ஒரு யோசனை வருது. நான் புதுசா கார் வாங்கியிருக்கேன். ரெண்டு ஃபாமிலியா போய்ட்டு வந்துடலாமா? வாடகை எல்லாம் வேணாம். பெட்ரோல் செலவை மட்டும் ஷேர் பண்ணிக்கலாம். என்ன சொல்ற?"

“வொண்டர்ஃபுல்" என்ற வெங்கி வெளிநாட்டு அதிபரை ஏர்போர்ட்டில் வழியனுப்பும் நம் பாரத பிரசிடெண்ட் போல இதமாக என்னைத் தழுவி விலகினான். வெங்கிக்கு ஒரே ஒரு மனைவி. இரண்டே இரண்டு குழுந்தைகள். ஆக, பயணத்தில் நான்கு பெரிசுகள், நான்கு சிறிசுகள், நான் டிரைவர் ஸீட்டில் அமர, மிச்ச இடம் மற்றவர்களுக்கு தாராளம் என்று குதூகலித்தாள் சுந்தரி.

பயணத் திருநாள் வந்தது. பயணத்தேர் மின்னலடித்து நின்றது. வெங்கி ஆட்டோவில் வந்து இறங்கியபோது திக்கென்றது. அவன் மனைவி, குழந்தைகள் தவிர ஒரு தாத்தா கைத்தடியுடன் இறங்கினார்.

“என் மாமனார்டா, ரிடையராகி இப்ப எங்களோட தான் இருக்கார்" என்று அறிமுகப்படுத்த நான் கட்டாயமாகச் சிரித்தேன். என் மனைவி

தனியாய் அழைத்துப் பேச, “என்ன பண்றது சுந்தரி? பொண்டாட்டி, குழுந்தைங்களோட மட்டும்தான் வருவான்னு நினைச்சேன். சரி, அழைச்சுட்டு வந்துட்டான். அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்." என்றேன்.

வெளியே வந்த நான், “வெங்கி, தூள்டா, ஒரே சூட்கேஸ்ல குடும்ப மொத்தத்துக்கும் வேண்டியதை அடிக்கிட்டியே" என்றேன்.

“கிழிஞ்சது போ. ஆறு பெட்டியையும், டிக்கில வெச்சிட்டேன்" என்றான். வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டதும், “மைலாப்பூர் போய்ட்டுப் போய்டலாம்“ என்றான் வெங்கி.

“எதுக்கு"

“என் தங்கச்சி ஈஸ்வரியையும் அவ புருஷனையும் அங்கே தான் பிக்கப் பண்ணிக்கிறதாப் பேச்சு"

“என்னப்பா இது. இடம் எங்கே இருக்கு?"

“அம்பாஸிடர்ல ஏழு பேர் தாராளமா போகலாம்ப்பா. முன்னாடி மூணு பேர். பின்னாடி நாலு பேர். நாலு குழந்தைகளையும் மடியில வச்சிக்கிட்டாப் போக்சு."

என் மனைவியின் உஷ்ண முறைப்பை நான் முதுகில் உணர்ந்தாலும் ஆஸ் யூஷ்வல் எதுவும் செய்ய இயலாதவனாகி மைலாப்பூரில் அவர்களை ஏற்றிக் கொண்டேன்.

கொஞ்சம் இருமுவார், ஓர சீட்தான் துப்ப வசதி என்று தாத்தாவை ஒரு ஓர சீட்டில் உட்கார வைத்து விட்டான். நான் வெத்தலை போடறவன் என்று வெங்கி ஒரு ஓர சீட்டில் உட்கார்ந்து கொண்டான். நடுவில் இரு மனைவிமார்கள். முன்புறம் டிரைவர் சீட்டில் நான். எனக்கு அருகில் ஈஸ்வரி கணவன், முன்புற ஓர சீட்டில் ஈஸ்வரி. பிராயணத்தின் போது வாந்தி வருமாம். அதனால் தயாராய் கையில் எலுமிச்சைப் பழம்.

புறப்பட்டபோதே எனக்கு நொந்து போய் விட்டது. பிரயாணம் முழுக்க அவஸ்தையோ அவஸ்தை. வரிசை எண் போட்டுப் பட்டியலே இடலாம்.

1. தாத்தா இருமினார் என்றால் கார் நடுங்கியது. கல்கியின் பொன்னியின் செல்வன் போல ஆரம்பித்தால் பாகம் பாகமாக இருமிக் கொண்டே இருந்தார். அவருக்கு அடுத்து அமர்ந்திருந்த சுந்தரி முக மூடிக் கொள்ளைக்காரி மாதிரி மூக்கை மூடி துணிகட்டி டஸ்ட் அலர்ஜி என்று பொய் சொல்லிவிட்டாள்.

2. வெங்கி வெற்றிலை டப்பாவைத் திறந்து மடியில் வைத்தபடி, மாடு அசை போடுவது போல போட்டபடி இருந்தான். முன் சீட் முதுகு முழுக்க அவன் விரல் பதித்த சுண்ணாம்பு முத்திரைகள், எங்கே நிறுத்தினாலும் தஞ்சாவூர் வெத்தலை!

3. வெங்கியின் மனைவிக்கு இறை பக்தி இருக்க வேண்டியதுதான்.

அதற்காக சாலையோரமாக வரை போட்ட, கூரை போடாத ஏதாவது கோயில் அல்லது கோயில் மாதிரி தெரிந்தால் நிறுத்தச் சொல்லி இறங்கிப் போய் துணி முடிச்சி தொங்க விடுவாள். மூன்றாவது குழந்தை ஆணாகப் பிறக்க வேண்டும் என்றால் வேண்டிக் கொண்டு மஞ்சள் துணியில் முடிச்சிட்டு மரத்தில் கட்ட வேண்டும் என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள். அனால் அப்படி எல்லா கோயில்களிலும் கட்டக்கூடாது என்று தெளிவாகச் சொல்லவில்லை போலிருக்கிறது. அங்கங்கே அவள் மடித்துக் கொண்ட விபூதிப் பொட்டலங்கள் தனி லக்கேஜாக வளர்ந்தது.

4. வெங்கியின் தங்கை ஈஸ்வரியிடம் எலுமிச்சைப் பழத்தின் பாச்சா பலிக்கவில்லை. முப்பது கிலோ மீட்டருக்கு ஒரு தடவை உவ்வே என்று அவள் ஜன்னல் வழியாக வாந்தியெடுப்பாள். காரை நிறுத்தி அவளையும், கார் ஜன்னலையும் சுத்தப்படுத்தி தொடர்வோம். வெங்கி சிரித்தபடி 'பித்த உடம்பு' என்பதோடு நிறுத்திக் கொள்வான்.

5. ஈஸ்வரி கணவன் ஒரு தடவை 'குருவி'யாக இன்னொருவன் செலவில் சிங்கப்பூர் போய் பதினைந்து நாட்கள் இருந்து திரும்பியிருக்கிறான். அதனால் வலிய தப்புத் தப்பாக இங்கிலீஷில் தத்துவம் பேசுவான். ஃபாரின்ல இப்படி இல்லை' என்பான். இவன் போன ஒரே ஃபாரின் சிங்கப்பூர். யாரின் அனுமதியும் கேட்காமல் செயின் செயினாக சிகரெட் பிடித்தபடி வந்தான். காருக்குள் கனவுக் காட்சி ஷூட்டிங் எடுக்கலாம் போல அவ்வளவு புகை மிதக்கும்.

6. போற வழிலதான் என் மச்சினின் வீடு என்று சொல்லி வெங்கி தன் மச்சினன் வீட்டுக்கு எங்களையும் அழைத்துச் சென்று விட்டான். மூன்று மணிநேரம் அதில் வேஸ்ட். இரண்டே முக்கால் மணிநேரம் வீட்டைப் பூட்டிக் கொண்டு சினிமா போயிருந்த மச்சினன் குடும்பம் திரும்பி வரக்காத்திருந்தோம்.

7, 8, 9, 10 என்று நூறு தாண்டி சொல்லிக் கொண்டே போகலாம். சென்னை வந்து அவர்களை வெங்கி வீட்டில் இறக்கிவிட்ட போது வெங்கி என் கையைப் பிடித்துக் கொண்டு, "இந்த ட்ரிப்பை என்னால மறக்கவே முடியாதுப்பா" என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

அதையே நான் தமிழில் சொன்னேன். காது அருகில் வந்து, "செலவு பூரா கணக்கெழுதி நான் எவ்வளவு தரணும்னு போன்ல சொல்லு. மாசா மாசம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து மூணு வருஷத்தில கணக்கை முடிச்சிடறேன்" என்று அவன் சொன்னபோது... எனக்கு கொலை வெறி வந்தது. என் மனைவியின் மங்கல நெற்றி ஞாபகம் ஞாபகம் வர அடக்கிக் கொண்டேன்.

வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் நான் சொன்னேன். "சுந்தரி, ரெண்டு வாரம் கழிச்சி பாலக்காடு, குருவாயூர்னு நாலு நாள் சேர்ந்து போய்ட்டு வரலாமான்னு கேக்கறான் வெங்கி."

சுந்தரி என்னைக் கோபமாகப் பார்த்தாள்."

'நாளைக்கு ஹிண்டு பேப்பர்ல விளம்பரம் கொடுத்துடுங்க." என்றாள்.

"என்னன்னு?"

"புதிய கார் விற்பனைக்குன்னு" என்றாள்.

"கூடவே ஒரு வரி சேர்க்கணும் சுந்தரி. கொஞ்சம் சிகரெட் நாற்றமும், வாந்தி நாற்றமும் லேசாக வீசும்" என்றேன் நான்.

சுந்தரியிடமிருந்து இன்னும் கொஞ்ச தினங்களுக்கு பல் குத்தும் முத்தம் கூடக் கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

--------------------------

4

# குகை

என் குறிப்பு - இந்தக் கதையை தன்னிலையில் எழுதுவதில் ஒரு செ□கரியம் இருக்கிறது, படித்து முடித்தபின் அந்த செ□கரியம் புரியும்.

'திருப்பட்டி 7 கி.மீ. என்று அறிவித்துவிட்டு சாலையோர கல் ஓடியதும் நான் படித்து கொண்டிருந்து புத்தகத்தை மூடினேன். பஸ்சின் ஜன்னல் வழியே சுவாரசியமாகப் பார்க்கத் துவங்கினேன்.

திட்டுத் திட்டாகப் பாறைகள் சூரிய வெளிச்சம் வாங்கி ஜுரமாக அனல் வீசின. சாலையோரச் செடிகள் தண்ணீர் கோரிக்கையுடன் முகம் வாடியிருந்தன. கடந்து சென்ற, கருங்கல் க்ரஷர் தூவின கறுப்பு துசி மரங்களில் படிந்திருந்தன. மேகங்கள் கும்பலாக யாத்திரையில், 'இதை எல்லாம் ரசிக்காமல் என் பக்கத்து சீட்காரன் நித்திரையில்.

திருப்பட்டிக்கு நான் முதல் முறையாக வருகிறேன். அங்கே எனக்குத் தெரிந்த ஒரே முகம் நடேசன். அவனுடைய போதாத காலம் ரூரல் டிரைனிங் என்று அவனுடைய பாங்க் தனது திருப்பட்டி கிளைக்கு அனுப்பி வைத்தது. ஒரு வருடமாயிற்று. திருப்பட்டி கிளையில் இவனும் இன்னொரு கிளார்க்கும் மட்டும்தானாம். பாதி நேரம் பகோடா சாப்பிட்டு சினிமா பத்திரிகை படிப்பார்களாம். எப்போதாவது ஒரு ஆசாமி தோளில் ஆட்டைத் தூக்கிப் போட்டுக் கொண்டு வந்து நேரம் என்ன என்று வாட்ச் கட்டின இவர்களை விசாரித்து விட்டுப் போவானாம்.

'நகர வாழ்க்கையில் இருந்து விலகி ஒரு மாற்றத்துக்காக நாலு தினங்கள் என்னோடு வந்து தங்கேன்' என்று எல்லா கடிதங்களிலும் கடைசி வரியாக நடேசன் எழுதியிருந்தான் என்றாலும்...

நான் புறப்பட்டது அந்த மாற்றத்தைத் தேடி அல்ல. திருப்பட்டியில் உள்ள ஒரு குகையைப் பற்றி அவன் எழுதியிருந்த விஷயம்தான்

என்னை ஈர்த்தது.

அதற்கு முன்...என்னைப்பற்றி கைகுலுக்கி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை - பெயர் - சுந்தர், இருபத்தி ஒன்பதே கால் வயது. சென்னையில் ஒரு உயர்நிலைப் பள்ளியில் பி.டி. மாஸ்டர். தமிழில் விளையாட்டு வாத்தியார். மிகப் பிடித்தவை - சாகஸங்கள். உதாரணமாக.... பள்ளிக்கூட கிணற்றில் தவறி விழுந்த எருமை மாட்டை தனி நபராகப் போராடி காப்பாற்றியது. பொழுதுபோக்கு - மலையேறுதல். நேரமும், சூழ்நிலையும் அனுமதித்தால் எவரெஸ்ட்டின் உச்சிமுடியை உலுக்கிப் பார்த்து விட்டு வரும் லட்சியத்தை உள்ளே ஒரு ஓரத்தில் வைத்திருக்கிறேன்.

குகையைப் பற்றி ஆரம்பித்தேனில்லையா?

திருப்பட்டியில் ஒரு மலை இருக்கிறதாம். சறுக்கு மலை என்று வழங்கு பெயராம். அந்த மலையில் ஒரு குகை. அதற்கு ஆள் விழுங்கி குகை என்றும் பெயராம். ரொம்ப நாளாக அந்த குகை இருப்பதே மக்களுக்குத் தெரியவில்லையாம். மேய்ச்சலுக்கு போன ஒரு ஆடு குகைக்குள் சென்று காணாமல் போனதும், அதன் மேய்ப்பன் இரண்டு பேரைத் துணைக்கழைத்துக் கொண்டு ஸ்தலத்திற்கு விரைந்தானாம். டார்ச் லைட், அரிக்கேன் விளக்கு எல்லாம் எடுத்துக் கொண்டு மூன்று பேரும் படிப்படியாய் இறங்கிச் சென்ற குகைக்குள் சென்றார்களாம். உடனே குகை அவர்களை ஜீரணம் செய்து விட்டதாம்.

ஊரில் பெரிய மனுஷன் என்கிற நரைத்த தலையொன்றை உடனே மற்ற நரைத்த தலைகளைக் கூப்பிட்டு ஆலோசித்து, "ஊர்ல தெய்வகுத்தம் ஏதோ நடந்திருக்கு. அதனாலதான் குகை ஆளை விழுங்குது - மூணு வருஷம் தொடர்ந்து அம்மனுக்கு திருவிழா எடுத்தா சரியாப் போய்விடும்" என்று தீர்ப்பெழுதியதாம்.

டைனமைட் வைத்து உடைத்துப் பார்க்க விரும்பிய போலீசை ஊர் பஞ்சாயத்தின் உத்தரவு வழி மறித்ததாம்.

மக்கள் சேர்ந்து ஒரு முரட்டு பாறாங்கல்லை உருட்டி வந்து குகை வாசலில் நிறுத்து 'குகைக்குள் யாரு செல்ல வேண்டாம். எச்சரிக்கை!" என்று போர்டு எழுதி வைத்து விட்டார்களாம்.

இந்த சமாச்சாரங்கள் பூராவும் பாங்க் செலான் காகிதத்தின் பின்புற வெள்ளைப் பகுதியில் பல கடிதங்களில் நடேசன் எழுதியவை.

பள்ளி விடுமுறை துவங்கியதுமே என்னைப் புறப்பட வைத்தது அந்த குகையின் சுவாரசியமே.

"திருப்பட்டிக்கு யாரோ டிக்கெட் வாங்கினாங்களே"

கண்டக்டரின் குரலில் கலைந்து நான் எழுந்து கொண்டேன். அவசரமாக ஒரு சின்ன பெட்டி, ஒரு பெரிய பெட்டியுடன் என்னை உதிர்த்து மூஞ்சியில் செம்மண் வீசிவிட்டு பஸ் புறப்பட்டது. சின்னப் பெட்டியில் என் உடைகள். பெரிய பெட்டியில் - பலவகையான உபகரணங்கள்,

அவைகளில் ஒன்று, ஆக்ஸிஜன் நிரம்பிய சிலிண்டரும், அதனுடன் இணைந்த மாஸ்க்கும்.

எனக்காச்சு, அந்த குகைக்காச்சு!

நான் போனபோது நடேசன் கைலி கட்டின தொடையை ஆட்டிக் கொண்டே ஏழும், மூணும் எத்தனை என்று கால்குலேட்டரில் கணக்கு போட்டுக் கொண்டிருந்தான். அந்த மற்றொரு கிளார்க் வெள்ளரிப் பிஞ்சு கடித்துக் கொண்டு கிரிக்கெட் கேட்டுக் கொண்டிருந்தான்.

“ஏனப்பா இது என்ன பேங்கா? இல்லை வீடா?"

“வாடா, வாடா, உக்காரு" என்ற நடேசன், ரோமாபுரியில் இருக்கும் போது ரோமானியனாக இரு என்ற ஆங்கிலப் பழமொழி சொன்னான்.

“நடேசா, முதல்ல நான் அந்த குகையைப் பார்க்கணும்."

“என்ன அவ்வளவு அவசரம்?"

“உண்மையைச் சொல்லணும்னா அந்தக் குகையைப் பத்தி நீ எழுதலைன்னா நான் இங்கே வந்திருக்கவே மாட்டேன். எனக்கு உடனே அதைப் பார்க்கணும்."

“சரி வா. சக்திவேல், தூங்கிடாதீங்க வந்துடறோம்“ என்ற புறப்பட்டான் நடேசன். “இதென்ன இவ்வளவு பெரிய பெட்டி?"

“சொல்றேன்."

டாக்குமெண்டரி படங்களில் ஷெனாய் பின்னணியில் வறட்சியைப் பற்றி காட்டும் காட்சிகள் வழியில் தெரிந்தன. ஒவ்வொரு வீடும் சுதந்திரமாக காற்று வாங்கியது. ஆலமரத்தில் பக்கத்து ஊர் டாக்கீசில் பெரிய இடத்துப் பெண் என்று தட்டி தொங்கியது - ஒண்ணிலிருந்து பத்து எண்ணுவதற்குள் ஒரு மளிகைக் கடை, ஒரு பெட்டிக் கடை, ஒரு டீக்கடை, ஒரு சலூன் கொண்ட பஜார் கடந்து போய் விட்டது. மர நிழலில் ஒரு தைல வியாபாரி ‘கால் ஆணி’ எடுத்துக் கொண்டிருக்க, அந்த ஆசாமி பிரசவம் போல அலறினான். அம்மன் கோவில் சாத்தியிருந்தது. வாசலில் அரச மரம். அதன் ஒரு கிளை பாக்கிவிடாமல் மஞ்சள் துணியில் சுற்றின சின்னச் சின்ன மூட்டைகள் கட்டிவிடப் பட்டிருந்தன. (அநேகமாக பிள்ளை வரம்)

சறுக்குப் பாறை மனித நடமாட்டமில்லாததால் புதர் மண்டின வெடிப்புகளுடன், வாகன இடங்களில் சுண்ணாம்பில் எழுதின தீப்பெட்டி விளம்பரத்துடன் இருந்தது. குறிப்பிட்ட குகை வாசலுக்கு மேலேறி வருவதற்குள் நடேசனுக்கு மூச்சு முழுக்க வெளிவந்து விட்டது.

“இதுதான் பார்த்துக்கப்பா? என்றான்.

தன் இடுப்புயரத்திற்கு அந்தப் பாறாங்கல் குகை வாசலுக்கு முன்னால் முழுக்க மூடாமல் இடைவெளி விட்டு நின்றது. அருகே தரக போர்டு பாறாங்கல்லுடன் கட்டி வைக்கப்பட்டிருந்தது. அதில், ‘இது ஆள்

விழுங்கி குகை. உள்ளே யாரும் செல்லக் கூடாது. எச்சரிக்கை!" என்று சிவப்பு மையில் எழுதியிருந்தது.

“இந்த விஞ்ஞான யுகத்திலயும் மூட நம்பிக்கையைப் பார் நடேசா" என்றேன்.

“அப்படிச் சொல்லாதே சுந்தர். நானும் முதல்ல சிரிச்சேன். ஆனா நான் உனக்கு லெட்டர்ல எழுதின அத்தனைத் தகவல்களும் உண்மை. முதல்ல மூணு பேர் காணாமல் மீட்டரில் தொலைந்து போனது.

வேணாம்டா இந்த விஷப் பரிட்சை" என்றான் நடேசன் கவலையாக.

‘பயப்படாதே. ஏதோ ஒரு விஞ்ஞான பூர்வமான காரணம் உள்ளே ஒளிஞ்சிருக்கு. அதைக் கண்டு பிடிக்காமல் பின் வாங்கக் கூடாது. சரியா பதினெட்டாவது மீட்டர்ல கல் மறையுது. அதனால்" என்று என் இடுப்பில் கயிற்றைக் கட்டிக் கொண்டேன். “நீ எண்ணிக் கிட்டே வா. பதினேழாவது மீட்டர் அடையாளம் குகைக்குள்ளே நுழைஞ்சதும் கயித்தைப் பிடிச்சி இழு. அது எனக்கு சிக்னல். அந்த இடத்திலேர்ந்தே அலசிப் பார்த்துட்டுத் திரும்பிடறேன். என்ன?"

அரைகுறை மனதோடு சம்மதித்தான். சுற்றி நின்ற மக்களைப் பார்த்துக் கையசைத்துவிட்டு குகைக்கு உள்ளே செங்குத்தாக இறங்கின. சின்னப் படிகளில் நிதானமாக இறங்க ஆரம்பித்தேன்.

சிறிது நேரத்தில் வெளி உலக வெளிச்சமோ, சத்தமோ இல்லாமல் போய், என் நெற்றியில் அணிந்த டார்ச் வெளிச்சத்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் நடப்பவன் போல மெதுவாக இறங்கினேன். என் முதுகில் அந்த இணைப்புக் கயிறு தொடர்ந்து வந்தது. என் கணக்கில் நான்கு படிகள் ஒரு மீட்டர். அதன்படி 60 படிகள் இறங்கினதும் பதினைந்து மீட்டர் கடந்து வந்துவிட்டதை உணர்ந்தேன். அதன் பிறகு இன்னும் மெதுவாக இறங்கினேன். கறுப்பு! கறுப்பு! கறுப்பு!

மேலும் எட்டு படிகள் இறங்கியதும் 17வது மீட்டர் இங்கும் கறுப்பு! கறுப்பு! கறுப்பு! முதுகில் கயிறு இழுக்கப்பட்டு சிக்னல் கிடைத்த போது, நான் கால் வழுக்கி அடுத்த நான்கு படிகளில் சறுக்.

-------------------------

# 5

# இறக்கப் பிறக்க வேண்டும்

எனதருமை குஞ்சுப் பையா!

அப்பா அழைக்கிறேன்.

கேட்கிறதா?

இது குரலின் அழைப்பு அல்ல. உணர்வின் அழைப்பு. அதனால்

ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி நீ இருந்தாலும் உனக்குக் கேட்கும்.

காஷ்மீரப் பனிமலைகளின் அடிவாரத்தில் ஸ்ரீநகரிலிருந்து லடாக் வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கோனேமார்க் அருகில் ஒரு பள்ளிக்கூடம் ஒன்று அவசரமாக காலி செய்யப்பட்டு, தற்காலிக இராணுவ மருத்துவமனை ஆக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்துதான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன் குஞ்சுப் பையா!

உட்கார்ந்து விளக்கமைத்து எழுதவில்லை. படுக்கையில் விழிமூடி எழுதுகிறேன். இது காகிதத்தில் எழுது கோலால் எழுதும் கடிதம் அல்ல மனதில் உணர்வால் எழுதும் கடிதம்.

சாரதாவும் நானும் சேர்ந்து உனக்கு பலவிதமான பெயர்களை யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் யுத்தம் வந்து எனக்கு அழைப்பு வந்து நான் விடுமுறையை ரத்து செய்து புறப்பட்டேன்.

அதனால் உன் அம்மாவின் கர்ப்பபைக்குள் சிரசாசனம் செய்து கொண்டிருக்கும் ஒன்பது மாத சிசுவான உன்னை குஞ்சுப் பையா என்றுதான் அழைக்க வேண்டியிருக்கிறது.

நீ பையன்தான் என்று ஸ்கேனிங்கில் உன் பிறப்புறுப்பு பார்த்துச் சொல்லிவிட்டார்கள். அன்றைய தினம் உன் அம்மா அடிக்கடி பார்க்கும் காலண்டர் குழந்தைக்கு நானே மீசை வரைந்தேன்.

குஞ்சுப் பையா இப்போது நாமிருவரும் விளிம்புகளில் இருக்கிறோம்.

நீ ஜனனத்தின் விளிம்பில்.

நான் மரணத்தின் விளிம்பில்.

உன் உதயத்திற்கு உத்தேசமாக தேதி குறித்து விட்டார்கள்.

என் அஸ்தமனத்திற்கு உத்தேசமாக நேரம் குறித்து விட்டார்கள்.

இன்னும் ஆறு மணிநேரம் மட்டுமே என் உடம்பை வாடகைக்கு எடுத்த உயிர் தங்கியிருக்குமாம்.

நான் பேச முடியாமல் தவிக்கிறேன். தொண்டையில் கட்டுப் போட்டிருக்கிறார்கள். எழுதிக் காட்டவும் முடியாது. முந்தா நாள் என் இடது காலை தொடைக்கு அருகில் துண்டித்து எடுத்து கட்டு போட்டார்கள் அல்லவா நேற்று என் வலது கையை மணிக் கட்டருகில் துண்டித்துவிட்டார்கள். ஆனாலும் என் விழிகள் சுழல்கின்றன. மூளை விழித்திருக்கிறது. காதுகள் கேட்கின்றன. எல்லாம் புரிகின்றது.

மருத்துவர்கள் கூடி என் அருகில் நின்று என்னைக் காட்டி இந்தியில் பேசுகிறார்கள். எனக்கு இந்தி தெரியும். ஏராளமாக ரத்தம் வெளியேறி விட்டதாம். ஒரு காலையும், கையில் ஒரு பதியையும் நீக்கியும் பிரயோஜனமில்லையாம். மற்றும் பல பாகங்களிலும் நிறைய பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிறதாம்.

ஆகவே, இன்னும் ஆறு மணி நேரம்! குஞ்சுப் பையா எனக்கு அழுகை

வருகிறது.

உன் பிஞ்சு முகத்தைப் பார்க்காமலேயே நான் மடியப் போகிறேன் என்று யோசித்துப் பார்க்கிறேன்.

தாத்தா இராணுவத்தில் கர்னலாக இருந்ததால் அப்பா இராணுவத்தில் மேஜராக இருந்தததால் பள்ளிப் பருவத்திலேயே உன் அப்பாவுக்கு இராணுவம் என்றால் அத்தனை பிரியமடா கண்ணா...

ஒரு தீபாவளிக்கு அடம்பிடித்து கரும்பச்சையில் இராணுவச் சீருடைப் போல உடை தைத்துப் போட்டுக் கொண்டாராம் கண்ணா...

பொம்மைக் கடைக்குச் சென்றால் ரப்பர் குழந்தை, ஓடும் ரயில், துள்ளும் நாய், கரடி என்ற ஆர்வப்படாமல் பொம்மைத் துப்பாக்கி கேட்டு வாங்கி வீட்டுக்கு வருகிற விருந்தினரையெல்லாம் சுட்டு தள்ளி விடுவாராம் கண்ணா.

இராணுவத்தில் சேருவதற்காகவே தினமும் பள்ளி மைதானத்தில் ஓடி நீரோடாத ஆற்று மணலில் ஓடி பக்கத்துக் குன்றுகளில் பாதம் சிவக்க ஏறி உடலைத் தயார் செய்வாராம் கண்ணா...

ஆசைப்பட்டபடியே இராணுவத்தில் ஜவானாகச் சேர்ந்து பயிற்சிகள் மேற்கொண்டு வீரனாக உருவான பிறகு, உறவினர்களின் வற்புறுத்தலால் திருமணத்திற்கு சம்மதித்து... என்னை பெண் பார்க்க வந்த போது, தனியாக பேச வேண்டுமென்று சொன்னார். அப்போது,

“சாரதா வெளிப்படையாப் பேசறேன். மத்தப் பொண்டாட்டிகளுக்கும், இராணுவ வீரனோட பொண்டாட்டிக்கும் வித்தியாசம் இருக்கு. உன் கழுத்துல நான் கட்டற தாலிக்கு எந்த நிமிஷமும் ஆபத்து வரும். அப்படி ஒரு நாள் வர்றப்போ, உன் கண்ல கவலைக் கண்ணீர் வரக்கூடாது. பெருமிதக் கண்ணீர்தான் வரணும். அந்த தைரியம் உன் மனசுல இருக்கா சாராதா?"

“இருக்கு. தேசத்துகாக உயிரையே விடச் சம்மதிச்சுதான் நீங்க இராணுவத்திலே சேர்ந்தீங்க. தேசத்துக்காக எப்ப வேணும்னாலும் பெருமையோட குங்குமத்தை விட நானும் தயாரா இருக்கேங்க"

“என் மனசுக்கேத்த மனைவி நீதான் சாரதா"

இப்படியெல்லாம் உரையாடினோம் கண்ணா.

பின்னொரு நாளில் விடுமுறையில் வந்த போது என் மடி மீது தலை வைத்து படுத்திருந்த போதும் பாரதச் சிந்தனையில்...

‘சாரதா, ஏழு வருஷமாச்சு நான் இராணுவத்துல சேர்ந்து தினம் தினம் எல்லையில் ரோந்து போயிட்டிருக்கேன். என் பயிற்சிக்கும் என் துடிப்புக்கும் தீனி கிடைக்கலை இன்னும் சிகரெட் நிறைய ஊதினதால வயித்து வலி வந்து போன மாசம் டாக்டர்கிட்ட போனப்போ குடல்ல அல்சர்ன்னு சொன்னார். பகீர்னு ஆயிடுச்சு. உடனே சிகரெட்டை விட்டேன். பத்தியமா சாப்பிட்டேன். மூச்சுப் பயிற்சி செஞ்சேன்.

ஒழுங்கா மருந்து சாப்பிட்டேன்... ஏன் தெரியுமா? உயிர் மேல உள்ள ஆசையால இல்லை... என் மரணம் கௌரவமானதா இருக்கணும் சாரதா. அதுக்காக

ஒரு இராணுவ வீரன் நோய் வந்து சாகறது கேவலம்!

போர் முனையில மார்ல குண்டு வாங்கி சாகணும். அதுதான் பெருமை. ஒரு பத்து எதிரிகளையாவது அழிச்சுட்டுத்தான் சாகணும். அதுதான் அவனுக்குத் தரப்பட்ட பயிற்சிக்கு மரியாதை. அதான் தேசத்துக்கு அவன் செய்ற சரியான வணக்கம்.

என் மரணமும் அப்படித்தான் கம்பீரமா அமையணும் சாரதா! யுத்த களத்துல என் திறமை எல்லாம் காட்டணும். சாகசம் எல்லாம் செய்யணும். என் உடல்ல எத்தனைக் குண்டுகள் பாஞ்சாலும் உயிரை தேக்கி வெச்சி 'ஜெய்ஹிந்த்' சொல்லிவிட்டு சாகணும். கடைசி மூச்சு இந்தியக் காற்றுலேர்ந்துதான் சுவாசிக்கணும். என் காது கேட்கிற கடைசி ஓசை பீரங்கிகளோட குண்டு வெடிப்புச் சத்தமா இருக்கணும்.

என்ற உன் அப்பா கம்பீரமாக முழங்கினார் கண்ணா...

இப்படியெல்லாம் என் சாரதா உன்னிடம் ஏராளம் சொல்வாள் குஞ்சுப் பையா!

எல்லாம் கேட்டுக் கொண்டிருந்து விட்டு அகலமாக உன் கண்களை விரித்து வைத்து நீ கேட்பாய்!

'அப்புறம் அப்பா எப்படி செத்துப் போனாரும்மா?'

இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் சாரதா தன் உதடுகளில் அழுகை பூசிக் கொள்ளப் போகிறாள் குஞ்சுப் பையா!

ஆறு மணி நேரத்தில் நான் இறக்கப் போகிறேன்.

இந்த நிமிஷம் என் கையையும் காலையும் பிய்த்துப் போட்டு விட்டார்கள். உடம்பு பூரா பேண்டேஜ் போட்டிருக்கிறார்கள்.

அதோ தூரத்தில் திராஸ் சிகரத்தில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் என்ற பெயரில் அனுப்பிய இராணுவத்தினர் மற்றும் கூலிப் படைக்கும் நமது இந்திய இராணுவத்திற்கும் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

யுத்த முனையில் குண்டடி பட்ட வீரர்களை குற்றுயிரோடு கொண்டு வந்து சேர்க்கிறர்கள். சிகிச்சையளிக்கிறார்கள்.

அவர்களைப் பார்க்கும்போது எனக்கு ஆதங்கம் பொங்குகிறது குஞ்சுப் பையா!

இதோ எனக்கு இடதுபுறக் கட்டிலில் தொடையில் பாய்ந்த குண்டை எடுத்து விட்டு படுக்க வைக்கப்பட்டிருக்கும் இராணுவ வீரன் மற்றொருவனிடம் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

தோலாலிங்கில் பாய்ண்ட் 4590 சிகரத்தில் இவன் தலைமையில்

ஒன்பது பேர் முதல் பேட்சாகப் போய் அங்கிருந்த முகாமை அழிக்கையில் இவன் மட்டும் பதினெட்டு பேரைச் சுட்டு வீழ்த்தினானாம்.

எனக்கு கை தட்ட வேண்டும் போலிருக்கிறது. அவனைக் கட்டியணைத்து முத்தமிட வேண்டும் போலிருக்கிறது.

எனக்கு வலதுக் கட்டிலில் சிகிச்சை பெற்று வரும் வீரன் டைகர் குன்றில் பீரங்கி இயக்கி தான் புரிந்த சாதனைகளைச் சொல்லும் போது என் மனதால் அவனுக்கு மண்டியிடுகிறேன்.

இன்றைக்கு காலையில் மத்திய மந்திரி ஒருவர் இந்த மருத்துவ முகாமிற்கு வந்து சிகிச்சை பெறும் வீரர்களுக்கு ஆறுதல் சொன்னார்.

அவரை ஒவ்வொரு கட்டிலாக அழைத்து வந்து உயரதிகாரி 'இந்த வீரன் யார் என்ன செய்தான் எதனால் அடிப்பட்டான்' என்று விரிவாக அறிமுகப்படுத்தியபோது என்னிடம் வராமல் போனால் நல்லது என்ற மனம் கெஞ்சியது தெரியுமா?

ஆனாலும் வந்தார்கள். அறிமுகம் செய்தார். விபரம் சொன்னார்.

"அடடா! பாவமே! என்று உச்சு கொட்டினார் அமைச்சர்.

அந்த இரக்கப் பார்வை என்னை சாட்டையால் அடித்தது.

நான் என்ன செய்வேன், குஞ்சுப் பையா!

எத்தனை துடிப்புடன் தோள்தட்டிப் புறப்பட்டு வந்தேன். ரயில் நிலையத்தில் கண்ணீர் சிந்தின சாரதாவை எத்தனைக் கோபமாகக் கடிந்து கொண்டேன்.

போரில் கணவனை இழந்து அந்த கம்பீர நினைவுகளை மட்டும் சுமந்த உன் பாட்டி, என் தாய் எத்தனை நெஞ்சுரத்துடன் என் நெற்றியில் திலகமிட்டு வாழ்த்துச் சொன்னாள்.

'உன் தந்தையின் மரணம் நினைவிருக்கிறதா மகனே? பங்களாதேஷ் யுத்தத்தில் நாற்பத்தி இரண்டு எதிரி நாட்டுச் சிப்பாய்களைக் கொன்று உளவு விமானத்தைச் சுட்டு வீர மரணம் அடைந்தார். அவரின் உடல் நம் வீட்டிற்கு வந்த தினம் ஊர் திருவிழா கூட்டம் கண்டது. உனக்கு நினைவிருக்கிறதா? எத்தனை பெரிய வரிசையில் மக்கள் வந்து மாலை போட்டு மண்டியிட்டார்கள். பெருமிதத்தில் என் நெஞ்சடைத்தது மகனே. போய் வா! அப்பாவுக்குக் குறையாமல் சாகசம் செய்து வா! சாதித்துவிட்டு வா! உயிரோடு வந்தாலும் சரி உடலாக வந்தாலும் சரி எனக்குப் பெருமை சேர்க்கும் விதமாக சாதித்துவிட்டு வா.

நரம்புகளில் உத்வேகம் ஊட்டிய வாழ்த்து அது குஞ்சுப் பையா!

அந்த உத்வேகத்தோடுதான் ஸ்ரீநகர் வந்தேன். பணியில் சேர்ந்தேன்.

திராஸ் நோக்கி இராணுவ டிரக்கில் தேசிய நெடுஞ்சாலையில் பயணம் செய்தேன். என்னோடு சேர்த்து பதினேழு பேர்!

சிகரம் நோக்கி மலைப் பயணம் அது! அபாயகரமான வளைவுகள் கொண்டது. அதிக அகலமில்லாத சாலை.

அதிகாலை நான்கு மணிக்கு எங்கள் டிரக் புறப்பட்டது. சாலையை கிட்டத்தட்ட மூடிவிட்ட பனிக் கம்பளம் மேல் தடதடத்து விரைந்தது டிரக்.

சாலையின் ஒரு பக்கம் மலை. மறுபக்கம் தடால் சரிவுகள். தூரத்தில் பனி உருகி ஓடும் சிற்றாருகள்.

உணர்ச்சியூட்டும் தேசப் பாடலை நாங்கள் அனைவரும் பாடிக் கொண்டிருந்த அந்த நிமிடம் திடீரென்று டிரக் டிரைவர் பனியில் சரியாக பார்வை புரியாமல் டிரக்கை தப்பான அனுமானத்தில் திருப்ப...

சரிவில் எங்கள் டிரக் பனிரெண்டு முறை உருண்டு விழுந்ததாக இங்கே முகாமில் சொல்லித்தான் தெரியும்.

குஞ்சுப் பையா என் வேதனை உனக்குப் புரிகிறதா?

எத்தனையோ சாதிக்கும் கனவுகளோடு சின்ன வயது முதல் காத்திருந்தேன். இராணுவத்தில் சேர்ந்தேன். எத்தனைப் பயிற்சிகள். வீரனாக உருவானேன். என் தாய்த்திருநாட்டிற்கு நான் செலுத்த வேண்டிய வீர மரியாதைக்குத் தயாரானபோது இப்படி ஒரு விபத்தில் சிக்கி... இதோ சில மணி நேரங்களில் மரணம்.

எனக்கு வெட்கமாக இருக்கிறது குஞ்சுப் பையா! இந்த மரணத்தை நான் வெறுக்கிறேன். இப்படி ஒரு மரணத்தையா நான் எதிர்ப்பார்த்தேன்? ஒரு எதிரியைக் கூட சுடாமல் ஒரு குண்டு கூட என் உடம்பைத் துளைக்காமல்... ச்சே!

இந்த அசிங்கமான மரணத்தை என்னால் தவிர்க்க முடியாது. ஆனால் குஞ்சுப் பையா நான் கம்பீரமாக இறக்க மறுபடி பிறக்க வேண்டும். அந்த மரணமாவது என் விருப்பத்திற்கிணங்க வீர மரணமாக இருக்க வேண்டும்.

என் ஆத்மாவுக்கு உன் உடலில் இடம் கொடு குஞ்சுப் பையா! உன் மூலம்தான் என் விருப்பம் நிறைவேற வேண்டும். ஜெய் ஹிந்த்!

--------------------------

# 6

# காதல் - சில காட்சிகள்

**கா**தல் -
முட்டாள் செய்கிற

புத்திசாலித்தனமான காரியம்.

# புத்திசாலி செய்கிற

# முட்டாள்தனமான காரியம்!

- ரூ சாமுவேல் ஜான்சன்

சுவாமிநாதன் ஸ்கூட்டரை நிறுத்தினார். ஜிப்பா உயர்த்தி பல்லால் கடித்துக் கொண்டு தளர்ந்திருந்த வேட்டியை இறுக்கிக் கட்டினார். படிகள் ஏறி இரண்டாவது மாடியில் இருந்த தனது ஃபிளாட்டுக்கு வந்தார். அழைப்புமணியை ஒலிக்கச் செய்துவிட்டு, கண்ணாடியைக் கழற்றி ஊதித் துடைத்தார்.

கதவைத் திறந்த மனைவியிடம் உற்சாகமாக, “ஒரு சந்தோஷமான விஷயம் ஆனந்தி..." என்றார்.

செருப்புகளை விலக்கிவிட்டு, நைலான் வயர் பின்னிய சோபாவில் அவசரமாக அமர்ந்து, “வா, இப்படி வந்து உக்காரு... சொல்றேன்..."

“என்னங்க விஷயம்...? என்று அருகில் அமர்ந்தாள் ஆனந்தி.

“வித்யா எங்கே...?"

“கம்ப்யூட்டர் கிளாஸ் போயிருக்கா. முடிச்சுட்டு வர்றதுக்கு லேட்டாகுமே..."

“வரட்டும்... வந்ததும் அவவாய்ல சர்க்கரை போடு..."

“விஷயத்தைச் சொல்லுங்களேன் முதல்ல..." என்றாள் ஆனந்தி.

“கண்ணுக்கு தெரியற ஒரு நல்ல மாப்பிள்ளையை விட்டுட்டு, ஊரெல்லாம் வித்யாவோட ஜாதகத்தை அனுப்பிட்டிருந்தோம் பாரு..." இன்னிக்கு நாடகம் முடிஞ்சதும் துரைசாமி ரொம்பத் தயங்கி, என்கிட்ட பேச்சை ஆரம்பிச்சான்..."

“எந்த துரைசாமி...?"

“எத்தனை துரைசாமியை உனக்குத் தெரியும்...? இருபது வருஷமா என்னோட நாடக ட்ரூப்புல நடிச்சிட்டிருக்கான். ரெண்டு மூணு தடவை வீட்டுக்கு வந்து, உன் கையால சாப்பிட்டிருக்கான்... கேள்வி கேக்கறே...?"

“சரி, சொல்லுங்க..."

“அவனோட பையன் ராஜேஷ் எலெக்ட்ரிகல்ஸ் கடை வெச்சு நல்லா வியாபாரம் பண்ணிட்டு இருக்கான். எனக்கு நல்லா தெரியும். ரொம்ப மரியாதையான பையன். ஒரு பல்பு வாங்கினா கூட அவன் கடையில்தான் வாங்குவேன். ரொம்ப நேரம் ஏதேதோ பேசிட்டு, ‘உன் பொண்ணை என் பையனுக்குக் கொடுக்கிறியா?’ன்னு கேட்டான் துரைசாமி...’

“நீங்க என்ன சொன்னீங்க...?"

“அவன் கேட்டதும் சந்தோஷமாயிடுச்சு. இப்படி ஒரு யோசனை எனக்கு வராம போச்சேன்னுதான் நினைச்சேன். ‘வீட்ல கலந்துகிட்டுச் சொல்றேன். நல்ல நாள் பார்த்து உன் குடும்பத்தோட வா... அவங்க ரெண்டு பேருக்கும் பிடிச்சுப் போச்சுன்னா, சந்தோஷமா பண்ணி வெச்சிடலாம்னு சொன்னேன்..."

“ஏங்க... துரைசாமி என்ன சாதி...?"

“எந்த காலத்தில இருக்கே நீ...? சத்தியமா சொல்றேன்... இருபது வருஷமா பழகறோம். அவன் என்ன சாதின்னு எனக்குத் தெரியாது. சாதியை எதிர்த்து மூணு நாடகம் போட்டிருக்கேன் ஆனந்தி. நீ கேட்கலாமா இப்படி...?"

“அப்போ ஜாதகம்..."

“உன்னோட வற்புறுத்தலுக்காகத்தான் வித்யாவோட ஜாதகத்தை எடுத்தேன். மனசு பொருந்திப் போச்சுன்னா, வேற எதுவும் தேவையில்லைம்மா..."

“ராஜேஷ் நல்ல பையன்தானா...?"

“தங்கமான பையன். நான்தான் பழகிட்டு இருக்கேனம்மா... ஒரே பையன். அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. இவனுக்கு வெளிநாட்டுல ஒரு வேலை கிடைச்சது. துரைசாமி கூட ‘போறியாப்பா?ன்னுதான் கேட்டான். ‘அம்மாவுக்கு முடியலை. உங்களுக்கும் வயசாயிடுச்சு. உங்க ரெண்டு பேரையும் தனியா விட்டுட்டு நான் போகலைப்பா’னு சொல்லிட்டு, இங்கேயே தொழில் ஆரம்பிச்சவன்மா... சொல்லப்போனா, வித்யா கொடுத்து வெச்சிருக்கணும். ஆளும் சும்மா செவசெவன்னு ஜம்முன்னு இருப்பான்..."

“பின்னே என்னங்க... எனக்கும் சம்மதம். வித்யாகிட்ட பேசுங்க, என்றாள் ஆனந்தி.

“என்னை மன்னிச்சிடுங்கப்பா..." என்றாள் வித்யா.

சுவாமிநாதன், ஆனந்தி இருவரும் அதிர்ந்து போனார்கள்.

தன் பின்னலின் முனையைத் திருகியபடி தரையைப் பார்த்துக் கொண்டிருந்த வித்யாவின் அருகில் வந்தார் சுவாமிநாதன்.

“இவ்வளவு பிளஸ் பாய்ண்ட்ஸ் நான் எடுத்துச் சொன்னேனம்மா... அப்புறம் ஏன் ராஜேஷை வேணாங்கறே...? நேர்ல பார்த்துட்டு அப்புறம்..."

“இல்லைப்பா... என்னை மன்னிச்சுங்க. இனிமேயும் மறைக்கிறது தப்பு. நான்... நான்... விவேக்குன்னு ஒருத்தரை விரும்புறேன்ப்பா..."

தளர்ந்துபோய் நாற்காலியில் அமர்ந்தார் சுவாமிநாதன்.

ஆத்திரமான ஆனந்தி, வித்யாவின் தோள்களைப் பற்றி உலுக்கி, “ஏண்டி, உன்னை கரெஸ்பாண்டன்ஸ் கோர்ஸ், கம்ப்யூட்டர் கிளாஸ்னு

சுதந்திரமா வெளில அனுப்புனதுக்கு... எங்களுக்குத் தண்டனையாடி இது...? யாருடி அவன்...? எத்தனை நாளாக நடக்குது இந்தக் கூத்து...? என்றாள்.

“ஆனந்தி, அவளை விடு!" என்று உத்தரவாகச் சொன்ன சுவாமிநாதன். “வித்யா, இப்படி வாம்மா... உக்காரு..." என்றார்.

தயங்கி நடந்து வந்து அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

“எங்களைக் கல்யாண வேலைகளைப் பார்க்கச் சொல்லிட்டு, முகூர்த்தத்துக்கு முதல் நாள் ஓடிப்போகாம, கல்யாணப் பேச்சை எடுத்ததுமே தைரியமா சொன்னியே... ரொம்ப நிம்மதியா இருக்கும்மா..."

எச்சில் விழுங்கிய வித்யாவுக்கு வியர்த்தது.

“நான் காதலைப் பத்தியும் பல நாடகங்கள் போட்டிருக்கேன். காதலிக்கிறது ஒண்ணும் தப்பான விஷயம் இல்லை. காதலிக்கிறவன்தான் தப்பா இருந்துடக் கூடாது..,"

“விவேக் ரொம்ப நல்லவருப்பா..."

“விவரமா சொல்லும்மா... என்ன பன்றான் அவன்...?

‘பாங்க்ல கிளார்க்ப்பா..."

பரவால்ல... நல்ல உத்தியோகம் தான். குடும்பம்...?’

சுமாரான குடும்பம்தான். ஒரு தம்பி, ஒரு தங்கை, அப்பா, அம்மா இருக்காங்க. அவங்க எல்லாம் தஞ்சாவூர் பக்கத்துல, ஒரு கிராமத்துல இருக்காங்க. கொஞ்சம் நிலம் இருக்கு. அங்கே சொத்து வீடு இருக்கு. அப்பா விவசாயம் பார்த்துக்கறார். இவர், இங்கே மூணு பேரோட சேர்ந்து ஒரு வீடு எடுத்துத் தங்கியிருக்கார்..."

“எவ்வளவு நாளா பழக்கம்...?"

“ஆறு மாசமாதான்... ரொம்ப டீசண்டா பழகிட்டிருக்கோம். என்மேல உயிரையே வெச்சிருக்காருப்பா..."

“அப்பா... எனக்கு அசைவம் சாப்பிடற பழக்கமில்லைனு தெரிஞ்சதுலேர்ந்து, இந்த ஆறு மாசமா அவர் முட்டை கூட சாப்பிடறதை நிறுத்திட்டார். இவ்வளவுக்கும் அவர் ஒரு ஸ்போர்ட்ஸ்மேன்... அவ்வளவு ஸ்டெமினா வேணும். ஆனாலும், இனி ஜென்மத்துக்கும் அசைவம் தொடறதில்லைன்னுட்டார்..."

“எல்லா ஸ்டெமினாவும் சைவ உணவுல இருக்கும்மா... அதுசரி, அவர் எந்த ஸ்போர்ட்ஸ்ல இருக்கார்...?

“கிரிக்கெட்டர்... தமிழ்நாடு அணில இருக்காருப்பா. ரஞ்சி ட்ரோபிக்கு விளையாடிருக்கார். கூடிய சீக்கிரம் இந்தியன் கிரிக்கெட் டீம்ல செலக்ட் ஆகிடுவாரு. அப்புறம் அவரோட அந்தஸ்தும் புகழும்

எங்கேயோ போயிடும். அவரோட லட்சியமும் அதுதான். எங்களைச் சேர்த்து வெச்சிடுங்க அப்பா..."

சுவாமிநாதன் சிந்தனையில் ஆழ்ந்தார்.

தவிப்புடன் தன் பதிலுக்குக் காத்திருக்காம் மகளின் முகத்தைப் பார்த்தார். தள்ளி நின்ற மனைவியைப் பார்த்தார்.

"நீங்க பேசிட்டு இருக்கீங்களேனு நான் எதுவும் பேசலை! அவளுக்கு என்ன தெரியும்னு இப்படிச் சரிசமமா உட்கார வெச்சு, உலகப் பிரச்னையைப் பேசற மாதிரி விவாதம் பண்ணிட்டிருக்கீங்க...? அவ கிடக்கறா! அவளுக்கு என்ன தெரியும்? காதல் மயக்கத்துல எல்லாமே நல்லதா படும். இதெல்லாம் சரியா வராதுங்க... நீங்க ரொம்ப வருஷமா பார்த்துப் பழகின அந்த ராஜேஷுக்குக் கட்டி வைக்கிறதுதான் சரின்னு எனக்குப் படுது..." என்றாள் ஆனந்தி.

"இல்லை ஆனந்தி... நான் பார்த்துப் பழகின ஒரு பையனை, நான் சிபாரிசு பண்றேன். அவ பார்த்துப் பழகின ஒரு பையனை, அவ சிபாரிசு பண்றா.. இதுல வறட்டுப் பிடிவாதம் அவசியம் இல்லை. பள்ளிக்கூடம் போற பொண்ணுன்னா பருவச்சலனம்னு சொல்லலாம். இது பக்குவப்பட்ட வயசு. புரிஞ்சுக்கற வயசு. உலகம் தெரியாதுன்னு சொல்லாதே... உன்னையும் என்னையும் விட அவளுக்கு அதிகமாகவே தெரியும்..."

"அதுக்காக யாரு, என்னனு தெரியாம கண்ணை மூடிக்கிட்டு சரின்னு சொல்லப்போறீங்களா...?"

"யாரு, என்னன்னுதான் சொல்லிட்டாளே ஆனந்தி... எல்லாத் தகுதியும் இருக்கே. வாழப்போறது அவ. அவ மனசு முக்கியம் இல்லையா...? காரணம் இல்லாம எதுக்கு எதிர்க்கணும்? வித்யா, அந்தப் பையனுக்கு எப்ப செௌகரியமோ, அப்ப வீட்டுக்கு கூட்டிட்டு வாம்மா... பேசலாம்..." என்ற அப்பாவின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, கண்ணீர் பொங்கிய முகத்தோடு வார்த்தைக்குத் தவித்தாள் வித்யா.

அந்த மைதானத்தில் நெட் பிராக்டீஸ் செய்து கொண்டு இருந்தான் விவேக்.

தூரத்தில் பல இரண்டு சக்கர வாகனங்களுக்குத் தள்ளி, ஒரு டாடா சியாரா நின்றுகொண்டு இருந்தது. அதன் அருகில் வெள்ளை யூனிஃபார்ம் அணிந்த டிரைவர் நின்று கொண்டிருந்தான்.

விவேக் பிராக்டீஸ் முடித்துவிட்டு, பொங்கிய வியர்வையுடன் புல்வெளியில் அமர்ந்தான்.

அருகில் வந்து அமர்ந்த முரளி, "ரொம்ப நேரமா அந்த வண்டி நிக்குது... யாரு வந்திருக்கிறது அதுல...? என்றான் சுட்டிக்காட்டி.

"தெரியலை, அதைவிடு... கூடிய சீக்கிரம் உங்களுக்குகெல்லாம் கிராண்ட் பார்ட்டி தரப்போறேன். என் காதல் நைன்ட்டி பர்சன்ட் சக்சஸ்!

வித்யாவோட அப்பா கிட்டத்தட்ட சம்மதிச்சுட்டாராம். வர்ற ஸண்டே அவர் வீட்டுக்குப் போய்ப் பேசறேன்."

“வெரிகுட்... கைகொடு மாப்ளே!"

இப்போது அந்த டிரைவர், இவர்களை நோக்கி வந்தான்.

விவேக்கிடம் வந்து, “ஐயா உங்க கூட பேசணும்னு சொன்னார்... ஒரு நிமிஷம் வாங்க..." என்றான்.

இப்போது டாடா சியாராவிலிருந்து கோட், டை அணிந்த நபர் இறங்கி நின்றிருக்க... எதுவும் புரியாமல் அவரை நோக்கி நடந்தான் விவேக்.

“ஹலோ மிஸ்டர் விவேக்... ஐயாம் பூபேஷ் குப்தா..." என்று கைகுலுக்கின அவரின் விரல்களின் வைரங்கள்.

“என்ன சார் விஷயம்...?

“நான் ஒரு இண்டஸ்ட்ரியலிஸ்ட்.. ஏழு கம்பெனி இருக்கு. நீங்க பிராக்டீஸ் பண்றப்போ தொந்தரவு பண்ண வேணாமேனுதான் வெயிட் பண்ணேன். நான் உங்ககிட்ட பர்சனால பேசணும் மிஸ்டர் விவேக். இது என் வீட்டு அட்ரஸ். ஏழு மணிக்க நான் உங்களை எதிர் பார்க்கறேன்..." என்று விசிட்டிங் கார்டு கொடுத்தார்.

“என்ன விஷயம் சார்...? இப்பவே சொல்லுங்களேன்..."

“நோ! நீங்க டயர்டா இருக்கீங்க... நிறுத்தி நிதானமா பேசணும். உங்களைக் கடத்தி வெச்சுக்கிட்டு யாருக்கும் லெட்டர் அனுப்பப் போறதில்லை. உங்க எதிர்காலம் பத்திதான் பேசணும். அவசியம் வாங்க..."

புன்னகைத்து அவன் தோளில் தட்டி விட்டு டிரைவரைப் பார்க்க, அவன் கதவைத் திறந்து விட்டான்.

கார் சென்ற பிறகும் குழப்பமாக நின்றிருந்தான் விவேக்.

விலாசத்தைச் சரிபார்த்துக் கொண்டு அந்த பிரம்மாண்டமான பங்களாவைப் பார்த்து மிரண்டான் விவேக்.

பைக்கை ஓரமாக நிறுத்திவிட்டு, கேட் அருகில் இருந்த கூர்க்காவை நெருங்கித் தகவல் சொன்னான்.

கூர்க்கா தனது கூண்டுக்குள்ளிருந்த உள் தொலைபேசியில் பேசிவிட்டு வந்து உள்ளே அனுமதித்தான்.

போர்ட்டிகோவில் அவனை டை கட்டிய இளைஞன் வரவேற்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்.

தரைமுழுக்க மார்பிளும் திரும்பிய பக்கமெல்லாம் கிரானைட்டுமாக பல விவேக்குகளைப் பிரதிபலித்துக் கொண்டு இருக்க...

பங்களாவின் பின்புறத்தில் இருந்த சிறிய நீச்சல் குளமருகில்

புல்வெளியில் நாற்காலி போட்டு அமர்ந்திருந்த அவரை நெருங்கிய விவேக் அறிமுகப் புன்னகையுடன், “குட் ஈவினிங் சார்...” என்றான்.

“குட் ஈவினிங் விவேக்!” என்று கை குலுக்கி நாற்காலி காட்டி, “ஸாரி, நான் டிரிங் பண்ற சமயம் இது...” என்று கையிலிருந்த கோப்பையைக் காட்டி, “ஜாய்னிங் வித் மீ...” என்றார்.

“நோ சார்... கோக் போதும்...”

அவர் பார்வையில் டை ஆசாமி விலகினான்.

“விவேக். ஸ்ட்ரைட்டா வந்துடறேன். என்னோட ஒரே டாட்டர் ஸ்வாதி. எம்.பி.ஏ. படிச்சிட்ருக்கா. என் எல்லா கம்பெனிகளோட நிர்வாகத்தையும் அவதான் பொறுப்பு எடுத்துக்கப்போறா... முதல்ல அறிமுகப்படத்திடறேன்...”

அவர் கார்ட்லெஸ் போன் எடுத்து, “டாட் பேசறேன்... ஸ்விம்மிங் பூல் பக்கத்துல வாம்மா... யெஸ்! விவேக் வந்திருக்கார்...” என்றார்.

யூனி்ஃபார்ம் அணிந்த பணியாள் வந்து பவ்யமாக கோக் டின்னை விவேக் முன்பாக வைத்து, சில டிஷ்யூ காகிதங்களும் வைத்துவிட்டு விலகினான்.

விநாடிகளில் ஒரு வாசனைப் பூங்கொத்து ஏந்திய தென்றலாக அங்கே வந்த ஸ்வாதி, “ஹலோ!” என்ற புன்னகைத்தது கவர்ச்சியாக இருந்தது.

“இவளைத்தான் உங்களுக்கு அறிமுகப்படுத்தணும். உங்களை இவளுக்கு நல்லா தெரியும்...”

“மூணு வருஷம் முன்னால பெங்களூர் ரஞ்சி ட்ரோபிக்கு நீங்க ஆடின முதல் மாட்ச்லேர்ந்து தெரியும்!” என்றாள் ஸ்வாதி.

விவேக் ஆச்சரியப்பட்டான்.

“ஓ.கே! நீ போம்மா... நான் பேசிக்கறேன்... என்று அவர் சொன்னதும் அவள் மீண்டும் புன்னகைத்து “பை பை, ஸீ யூ லேட்டர்!” என்ற சிக்கனமாக விரலசைத்து சென்றாள்.

“மிஸ்டர் விவேக். என் பொண்ணு ஆசைப்பட்டு, நான் எதையும் நிறைவேத்தாம இருந்ததில்லை. எனக்குத் தெரியாத வி.ஐ.பீ-ஸ் இல்லை. டெல்லி போனா, எந்த மினிஸ்டர் வீட்ல டின்னர் சாப்பிடறதுன்னு சங்கடமா போயிடும். இப்போ என் பொண்ணுக்கு ரெண்டு ஆசைகள். ஒண்ணு... நல்ல திறமைசாலியான உங்களை இண்டியன் டீமுல சேர்க்க வைக்கணும்...”

விவேக்கின் கண்கள் பிரகாசத்தில் அகன்றன.

“இன்னொரு ஆசை... உங்களைக் கல்யாணம் செய்துக்கணும்...”

சின்னதாக அதிர்ந்து, “சார்!” என்றான்.

“இருங்க... அவசரப்பட்டு எதுவும் சொல்ல வேணாம். நான் பேசி முடிச்சிடறேன். அவளோ முதல் ஆசையை ரொம்பச் சுலபமா என்னால நிறைவேத்திட முடியும். ரெண்டாவது ஆசைக்கு, உங்க சம்மதம் தேவைப்படுது. நீங்க, ‘சரி’னு ஒரே ஒரு வார்த்தை சொன்னா போதும்.."

“இல்லை சார். வந்து... நான்... ஏற்கனவே..."

“விவேக். எந்த பதிலா இருந்தாலும் நாளைக்குச் சொல்லுங்க... உங்களுக்கு இதுல எந்தப் பிரச்சனை இருந்தாலும் என்னால சரிபண்ணிட முடியும். எனக்கு ஸ்வாதி முக்கியம். ஸ்வாதிக்கு நீங்க முக்கியம். அதனால, இப்ப நீங்க எனக்கு முக்கியம். காலைல உங்களை மைதானத்துல மீட் பண்றேன்..." என்றவர். ஒலித்த போனை எடுத்துப் பேசத் துவங்கினார்.

அலைகளை அலைகள் துரத்த...

திடுக்கிட்டு, “என்ன சொல்றீங்க விவேக்...?" என்றாள் வித்யா நம்ப முடியாமல்.

‘தயவுசெஞ்சு என்னைப் புரிஞ்சுக்கோ வித்யா... பெரிய கிரிக்கெட்டரா வரணுங்கறது என்னோட வாழ்க்கை லட்சியம். அதுக்கு ஒரு கோல்டன் வாய்ப்பு கிடைச்சிருக்கிறப்போ... அதைப் பயன்படுத்திக்கலைன்னா நான் முட்டாள் இல்லையா...?

“அப்போ என்மேல வெச்சிருந்த காதல்...?

“கஷ்டமாத்தான் இருக்கு வித்யா... என்ன பண்றது...? ஒண்ணை இழந்தாதான், ஒண்ணை அடைய முடியும். என்னை மன்னிச்சிடு..."

வித்யா அழத்துவங்க.

விவேக் மெதுவாக விலகி நடக்கத் துவங்கினான்.

விவேக் பைக்கை நிறுத்திவிட்டு பங்களாவின் கேட்டை நெருங்க... இப்போது வேறு வாட்ச்மேன் உள்ளே அனுமதிக்க மறுத்தான்.

“உள்ளே ஷூட்டிங் நடந்துக்கிட்டிருக்கு சார்... யாரையும் விடக்கூடாதுன்னு டைரக்டர் சொல்லி இருக்காரு..."

“ஷூட்டிங்கா...? நான், மிஸ்டர் பூபேஷ்குப்தாவைப் பார்ககணும். போய்ச் சொல்லுப்பா. நான் யாரு தெரியுமில்லை? இந்த பங்களா ஓனர் பூபேஷ்குப்தாவோட மருமகனாகப் போறவன்..."

“என்ன சார் உளர்றீங்க...? இந்த பங்களாவோட ஓனர் கஸ்தூரிரங்கன்... அவருக்குப் பொண்ணே கிடையாது. இது ஷூட்டிங்குக்கு வாடகைக்கு விடற பங்களா... தப்பா வந்துட்டீங்க..."

விவேக் குழப்பத்துடன் தன் பையிலிருந்து விசிட்டிங் கார்டை எடுத்துப் பார்க்க...

“அது உங்களுக்காக பிரிண்ட் செஞ்ச கார்டு விவேக்..." என்ற

வித்யாவின் குரலுக்கு அதிர்ந்து திரும்பிப் பார்த்தான்.

அவனருகில் வந்த வித்யா, "நேத்து நைட்டுதான் எங்கப்பா எல்லாம் சொன்னார். நீங்க என்மேல வெச்சிருக்கிற காதல் எவ்வளவு தூரம் அழுத்தமானதுனு தெரிஞ்சுக்கிறதுக்காக, எங்கப்பா இந்த பங்களாவை ஒரு நாளைக்கு வாடகைக்கு எடுத்துத் தன்னோட நாடக ட்ரூப்புல உள்ளவங்களை வெச்சு நடத்திப் பார்த்த நாடகம் இது" என்றாள்.

"வித்யா!" என்றான் அதிர்ச்சியுடன்.

"காதலுக்காக அசைவத்தை விட்டுக் கொடுத்தீங்க. நம்பினேன். ஆனா, லட்சியத்துக்காக காதலையே விட்டுக் கொடுத்தீட்டீங்களே! எந்தக் காரணத்துக்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாத விஷயம்தான் விவேக் காதல்! உங்களைச் சரியா எனக்குப் புரிய வெச்ச எங்கப்பாவுக்கு நான் ஆயுள் முழுக்க நன்றி சொல்லணும்... வர்றேன். குட்பை!"

வித்யா விலகி நடந்தாள்!

---

7

# நடக்கும் என்பேன், நடக்கும்!

போன வருஷ அக்டோபரில் என்னை உங்களுக்குத் தெரியாது. நான் அப்போது பிரபலமே இல்லை. பெட்டிக் கடையில் சிகரெட்டை வாங்கிப் பற்ற வைத்தால், யாரும் கைகாட்டிப் பேசிக் கொண்டதில்லை. நானே காசு கொடுத்து எடுத்துக் கொண்டபோது கூட என்னை ஒழுங்காய் யாரும் புகைப்படம் எடுத்ததில்லை.

இப்போது என்னடாவென்றால் பேப்பரைப் புரட்டினால் நான் சிரித்துக் கொண்டிருக்கிறேன். வாக்கிங் போனால், 'அடடா, நீங்க நடந்து வாக்கிங் போலாமா?" என்று காரில் அள்ளிப் போட்டுக்கொண்டு ட்ராப் செய்கிறார்கள். எங்கள் பத்திரிகையில் ஒரு தொடர் கட்டுரை எழுத முடியுமா என்று ஒரு வாராமாக ஒரு நிருபர் வந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். டெலிவிஷன்காரர்கள் ஒரு ப்ரோக்ராம் செய்ய தேதி கேட்கிறார்கள். மதுரையில் ரசிகர் மன்றம் துவங்கியிருப்பதாக ரோஸ் கலரில் நோட்டீஸ் அனுப்பி அன்னதானத்திற்கு நிதியுதவி கேட்கிறார்கள். என்னை வைத்து நான்கு டாக்டர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

திடீரென்னு நான் ஒரு அதிசய மனிதனாக, அபூர்வ பிறவியாக மாறிவிட்டேன்.

உங்களுக்கு ஈ.எஸ்.பி. என்றால் தெரியுமா! எக்ஸ்ட்ரா சென்சரி பெர்ஸப்ஷன்!

என் பெயர் வைத்தீஸ்வரன். பிறந்தவுடன் முகம் தெரியாத என் அப்பா

அந்தப் பெயரைச் சூட்டி ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, அதே வேகத்தில் எங்கள் விட்டுக்கு பால் ஊற்ற வந்தவளுக்கும் ஒன்ற கொடுத்து அம்மாவை அம்போவென்ற விட்டுவிட்டு அவளோடு ஓடிப் போய்விட்டார்.

ஆஸ் யூஷுவல் என் அம்மா என்னை வளர்த்து, பத்துப் பாத்திரம் தேய்த்து, பள்ளிக்கு அனுப்பி, எட்செட்ரா, ஒருநாள் மாலை என் மடியில் படுத்துக் கொண்டு, "நீ கல்யாணம் செய்துகிட்டா கடைசி வரைக்கும் உன் பொண்டாட்டியை கண் கலங்காம காப்பத்தணும்ப்பா" என்று சொல்லி நான் சரியென்று தலையாட்டு முன் செத்துப்போய் விட்டாள்.

நான் பட்டணம் வந்தது. ரிக்ஷா ஓட்டியது, போஸ்ட்டர் ஓட்டியது. காதலித்து அவள் கல்யாணத்துக்குச் சென்று பரிசளித்துவிட்டு சுட்டு விரலால் ஒற்றைத் துளிக் கண்ணீரைச் சுண்டிவிட்டு நடந்தது. பத்திரிகை ஆபீசில் புரூஃப் திருத்தம் வேலையில் சேர்ந்தது... இதெல்லாம் இந்தக் கதைக்கு அவசியமில்லை. (இதுவே நாவல் என்றால் ரொம்ப அவசியம் - கோல்! கோல்! சேம் சைட் கோல்!)

ஈ.எஸ்.பி. பற்றி பேசிக் கொண்டிருந்தோமில்லையா? அதாவது சிக்கல் செய்யாமல் சொல்வதானால் 'நடக்கப் போவதை முன்கூட்டியே உணரும் சக்தி!'

அந்த சக்தி எனக்குள் ஆரம்பத்தில் ரொம்ப லேசாகத்தான் சுரக்கத் துவங்கியது.

ஜானகிராமன் என்று எனக்கு ஒரு அறை நண்பன். படு கஞ்சன். தீர்ந்து போன பேஸ்ட் ட்யூபுகளை எல்லா அறைகளிலும் கலெக்ட் செய்து, நசுக்கி நசுக்கி பத்து நாள் ஓட்டி விடுவான்.

அவனிடம்தான் முதலில் நான் இந்த மாதிரி என்ற விபரமாகச் சொன்னேன். மெடிட்டேஷன் செய்தால் சரியாய்ப் போய்விடும் என்று இதை ஏதோ வரக்கூடாத வியாதி போல வைத்தியம் சொன்னான். மனப்பிரமை, டிப்ரஷன் என்று என்னைக் குழப்பினான்.

"நாளைக்குக் காலைல நம்ம ராயர் மெஸ்ல என்ன டிபன். சொல்லு பார்க்கலாம். அப்ப உன் சக்தியை ஒப்புக்கறேன்." என்றான் சவால் போல.

"முட்டாள்! நானா ஒரு விஷயத்தை யூகிக்க முடியலைடா. ஆனா திடீர்னு என் மனசுல ஒரு மின்னலா யூகம் வருது. அது அப்படியே நடக்குது" என்றேன்.

"நிரூபி" என்றான்.

"அடுத்த தடவை அப்படி ஃப்ளாஷ் வர்றப்ப சொல்றேன்." என்றேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையில் அவனுடைய பைக்கில் அலங்கார் தியேட்டருக்குப் போய்க் கொண்டிருந்தபோது மௌண்ட்ரோட்டில் எங்களுக்கு முன்னால் ஒரு பைக்கில் கணவனும், பட்டுப் புடவை

கட்டின அவன் மனைவியும் சென்று கொண்டிருந்தார்கள்.

நான் சொன்னேன். "ஜானகி, அந்த பொண்ணுக்கு வலது தொடையில ஒரு மச்சம் இருக்குதுன்னு எனக்குத் தெரியுது."

"பாவி! நீ எப்படா பார்த்தே?"

"சேச்சே! அவளை நான் இதுக்கு முன்னாடி பார்த்ததில்லை."

"பின்னே எப்படி?"

"மைகாட்! அந்த பைக் சக்கரத்தின் அவ புடவை சிக்கப் போகுது."

"உளறாதே! தலைப்பை இழுத்து இடுப்புல செருகியிருக்கா பாரு. அப்புறம் எப்படிச் சிக்கும்?" என்ற அவன் கேட்டு முடிப்பதற்குள் இடுப்புச் செருகல் தானாக நழுவி, எதிர்காற்றில் தலைப்பு பறந்து, அவள் அதை அவசரமாகப் பிடிக்க, அது தணிந்து ஆனால் முனை பின் சக்கரத்தில் சிக்கி, அய்யோ என்ற அலறிக்கொண்டு கீழே விழுந்தாள்.

சற்றுத் தள்ளிச் சென்றுதான் அவனால் பைக்கை நிறுத்த முடிந்தது. அதற்குள் பைக்கோடு இழுத்து வரப்பட்ட அவளின் சேலை, உள் பாவாடை எல்லாம் அங்கங்கே கிழிந்து போக...

அவள் வலது தொடையில் மச்சம்!

அன்றைக்கு ராத்திரி தன் கைகளின் முடிகள் எல்லாம் விறைத்து கொண்டு நிற்க, ஜானகிராமனுக்கு தூக்கமே வரவில்லை.

"எப்படிடா கரெக்டாச் சொன்னே?" என்று நூறு தரம் கேட்டான்.

"திடீர்னு தோணிச்சுடா" என்றேன்.

"இன்னும் கொஞ்சம் முன்னாடியே நீ சொல்லியிருந்த அந்த இக்கட்டிலேர்ந்து அவங்களைக் காப்பாத்தியிருக்க முடியோமான்னு தோணுது."

"ம்கூம். நடக்கப்போறதைத்தான் நான் உணர்றேன். இதுவரைக்கும் எனக்கு மனசுல தோண்ணதெல்லாம அப்படியே நடந்திருக்கு" என்றேன்.

இப்படியாகப் பல சம்பவங்கள். திடீரென்று என்னை பிரபலமாக்கிய பெருமை இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் டெஸ்ட் மேட்ச்தான்.

சென்னையில் அதன் டெஸ்ட் மேட்ச் துவங்க நான்கு தினங்கள் இருந்தபோது, என் மனதில் டெஸ்ட் மேட்ச் முடிந்த பிறகு உள்ள ஸ்கோர் போர்டையே படிக்க முடிந்தது அன்று

கிடுகிடுவென்று பேப்பர், பேனா எடுத்து எழுதத் துவங்கினேன். எந்த ஆட்டக்காரர் எத்தனை ரன், எந்த பவுலர் எத்தனை விக்கெட், மொத்த ரன்கள், வெற்றி, தோல்வி அத்தனையும் எழுதினேன். ஜானகிராமனிடம் காட்டினேன்.

"நமக்குள்ளே பொழுது போக்கா விளையாடிக்கிட்டது போதும். உன்

சக்தியை ஊர், உலகம் தெரிஞ்சுக்க வைக்கணும். அதை நான் செய்யறேன்" என்ற ஜானகிராமன் என் சார்பாக ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்பை ஒரு ஹோட்டலின் மொட்டை மாடியில் ஏற்பாடு செய்தான்.

என் முந்தைய அனுமானங்கள் நிகழ்ந்ததைச் சொல்லி, நான் எழுதி வைத்த ஸ்கோர் விபரங்களைப் பிரதியெடுத்து எல்லோருக்கும் விநியோகித்து, நிச்சயமாக ஒரு இம்மி மாற்றமும் இல்லாமல் ஆட்டத்தின் போக்கு அமையும் என்றான்.

இருபத்தி எட்டு பத்திரிகைகளில் இருந்து வந்த நிருபர்களில், என் விஷயத்தைப் பொருட்டாக மதித்தது இரண்டே பேர்தான் - தங்கள் இதழ்களில் செய்தி வெளியிட்டு, ஸ்கோர் விபரங்களையும் வெளியிட்டிருந்தார்கள்.

டெஸ்ட் மேட்ச் முடிந்தது. என் அனுமானத்தில் தப்பேதும் இல்லை. உடனே பத்திரிகையாளர்கள் என் வீட்டிற்குப் படையெடுத்தார்கள்.

அன்றைக்கு முதல் என் புகழ் கன்னா பின்னாவென்று பரவி வருகிறது. அரசியல்வாதிகள் கார் போட்டுக் கொண்டு வந்து தேர்தலில் ஜெயிப்பேனா என்று கேட்கத் துவங்கினார்கள்.

இஃது இவ்வாறு இருக்க,

நேற்று அதிகாலையில், கொசுக் கடியால் உறக்கம் கலைந்து புரண்டு படுத்தபோது கதவிடுக்கின் வழியே நுழைக்கப்பட்டிருந்த செய்தித் தாளைப் பார்த்தேன்.

திடீரென்று என் மனதில் பேப்பரின் தலைப்புச் செய்தியைப் படிக்க முடிந்தது.

‘அமைச்சர் பலராமன் உடல் தகனம்!"

செய்தித்தாளின் தேதி 19 என்றும் இருந்தது.

மேற்கொண்டு எதுவும் தெரியவில்லை. நான் விசுக்கென்று எழுந்து கொண்டேன். எழுந்து சென்று பேப்பரை எடுத்துப் பார்த்தேன். விமானம் வெடித்து விபத்து என்று வேறு தலைப்புசெய்தியிருந்தது. தேதி 17.

உடனே நான் உறங்கிக் கொண்டிருந்த ஜானகிராமனை எழுப்பி சேதி சொன்னதும், வழக்கம் போல சிலிர்த்தான்.

“இது சின்ன விஷயமில்லைப்பா. வா என்னோட" என்றான். நேற்று காலை பத்து மணிக்கெல்லாம் இருவரும் கமிஷனர் அலுவலகத்தில் இருந்தோம்.

விபரங்களைச் சொன்னதும், கடகடவென்று சிரித்தார். “இதெல்லாம் சும்மா குருட்டாம் போக்கில சொல்றதுநான் நம்ப மாட்டேன்" என்றார்.

“சார், இதுவரைக்கும் என் யூகம் பொய்ச்சதில்லை. நாளன்னைக்கு காலைல பேப்பர்ல அப்படி ஒரு சேதி வரத்தான் போகுது. அதாவது

நாளைக்கு ராத்திரிக்குள்ளே அவர் சாகத்தான் போறார்" என்றேன்.

ரொம்ப யோசனைக்குப் பிறகு எங்களை அழைத்துக் கொண்டு அமைச்சர் பலராமன் வீட்டுக்கு வந்தார் கமிஷனர்.

நான் சொன்னதுமே அவருக்கு மயக்கம் வந்து விட்டது. நடுங்கிப் போய் விட்டார் அமைச்சர்.

“கமிஷனர், இந்த தம்பியைப் பத்தி ஏற்கனவே பேப்பர்ல பல சேதிகள் படிச்சிருக்கேன். எனக்கு பயமா இருக்கு. நான் உடனே என் உடம்பை தரோவா செக் பண்ணிக்கறேன். எனக்கு பக்காவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துடுங்க" என்றார் பதட்டத்துடன் அமைச்சர்.

“இதெல்லாம் ஏமாத்து வேலைன்னு உங்க விஷயத்தில நிரூபிச்சிக்காமிக்கிறேன் சார். யோவ், வைத்தீஸ்வரன், நாளன்னைக்கு வரைக்கும் நானும் இந்த வீட்லதான் இருக்கப்போறேன். நீயும் இங்கேயேதான் இருந்தாகணும்" என்றார் கண்டிப்பாக கமிஷனர்.

டெலிபோனை எடுத்து விடுவிடுவென்று உத்தரவுகள் இட்டார். அப்பல்லோ மருத்துவமனைக்குப் புறப்பட்ட அமைச்சரைத் தடுத்து, டாக்டர்களை அவர் வீட்டுக்கு வரவழைத்து சோதனை செய்தார்.

அவர்கள் முழுமையாகப் பரிசோதித்துவிட்டு மிக ஆரோக்கியமாக இருப்பதாகச் சொன்னார்கள். எல்லா ஸ்பெஷலிஸ்ட்டுகளும் கொண்ட ஒரு டாக்டர்கள் டீமை பங்களாவின் ஒரு அறையில் தயாராய் வைத்தார்.

பங்களாவைச் சுற்றி ஆயுதமேந்திய போலீஸ், வயர்லெசுடன் ம.்.ப்டி போலீஸ், வீட்டுக்குள்ளும் போலீஸ் என்று நபர்ளை இறைத்தார்.

குறிப்பிட்ட பிரபல பத்திரிகைகளின் நிருபர் குழுவை மற்றொரு அறையில் தங்க வைத்தார்.

மாடியில், குளிர் அறையில் அமைச்சர் பலராமன், கமிஷனர், நான் மூவர் மட்டுமே இருந்தோம்.

ஒவ்வொரு வேளை உணவையும் இவர் பூனைக்குப் போட்டு சோதித்து அதன் பிறகே அமைச்சரைச் சாப்பிட அனுமதித்தார். அமைச்சருக்கு புல்லட் புரூ.்.ப் ஜாக்கெட் அணிவித்து, தனது ரிவால்வரை இடுப்பில் தயாராக வைத்துக் கொண்டு இருந்தார் கமிஷனர்.

இப்போது இன்றைக்கு மணி மாலை ஆறு. நேற்று முதல் சிறைக் கைதி மாதிரி நான் வந்து மாட்டிக் கொண்டேன்.

இன்னும் சில மணிநேரங்கள் போனால் இன்றைய தினம் முடிந்துவிடும். அதற்குள் ஏதாவது ஒரு வகையில் அமைச்சருக்கு மரணம் ஏற்படும் என்பது என் யூகமாய் இருந்தாலும், நேற்றிலிருந்து கமிஷனரின் ஏற்பாடுகளைப் பார்த்து வருவதில் இந்தமுறை எனக்கே சற்று சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

“பேப்பர்ல அதுக்கப்புறம் உள்ள வரிகள் எதுவும் உன் மனசில படிக்கலையா மேன்?" என்றார் கமிஷனர் கிண்டலாக.

“சார், நான் ஒரே ஒரு வரி தலைப்புச் செய்தியை மட்டும்தான் மனசில படிச்சேன். கிண்டல் செய்யாதீங்க அமைச்சர் ரொம்ப நல்லவர்ன்னும் நிறைய நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வந்தவர்ன்னும் எனக்கும் தெரியும். அவர் சாகணும்னு நான் ஆசைப்படுவேனா? ஒரு உயிர் என்ன சாதாரண விஷயமா? என் யூகசக்தி இந்த தடவை பொய்யாய்ப் போகணும்னுதான் நானும் மனசில வேண்டிக்கிட்டிருக்கேன்’ என்றேன்.

திடீரென்னு என் மனதில் பேப்பரில் மற்றொரு செய்தி வரி ஓடியது.

“சார், சார்" என்று பரபரத்து என் யூகத்தைச் சொன்னேன்.

‘நான்சென்ஸ்! இது நடக்கப் போறதில்லை. இந்த ரூம்ல என் ஒருத்தன்கிட்டேதான் துப்பாக்கி இருக்கு. நான் அவர் பாதுகாப்புக்காக வந்திருக்கேன். நானே அவரை சுடுவேனா?" என்ற கமிஷனர் தனது ரிவால்வரை எடுத்து அமைச்சரிடம் காட்டினார். “இந்தாங்க, இதை நீங்களே வச்சிங்க."

அமைச்சர் ரிவால்வரை வாங்கி ஜிப்பாவை உயர்த்தி இடுப்பில் செருகிக் கொண்டார். வியர்த்த முகத்துடன்.

எட்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, விட்டத்தில் இருந்து சொத் என்று ஒரு பல்லி அவர் தோளில் விழுந்து கீழே குதித்துப் போனதும், அருசையுடன் பாத்ரூம் சென்று கழுவிக்கொள்ள எழுந்த அமைச்சரைத் தடுத்தார் கமிஷனர்.

“நான் பக்கெட்ல தண்ணியும், டவலும் கொண்டு வர்றேன். இங்கேயே துடைச்சுங்க" என்று கமிஷனர் சென்றதும், அமைச்சர் தன் ஜிப்பாவைக் கழற்றினார்.

‘அவரின் வெற்று மார்பில் சிவப்புத்தோலுக்கும் அதற்கும் ‘வியாசர்பாடி மங்களம்’ என்று பொடி எழுத்துக்களில் பச்சை குத்தப்பட்டிருப்பதைத் தெளிவாக என்னால் படிக்க முடிந்தது.

நான் எழுந்து அவர் அருகில் வந்து, “யார் சார் அது வியாசர்பாடி மங்களம்?" என்றேன்.

“அது பழைய கதை. என்னோட முதல் பொண்டாட்டி... அசிங்கமா இருப்பா. நாகரிகமே கிடையாது. சகிச்சுக்க முடியாம ஓடி வந்துட்டேன் அவளை விட்டு" என்று அவர் சொல்லி முடிப்பதற்குள், இடுப்பில் செருகின ரிவால்வரை உருவினேன் நான்.

“உன்னைத்தாண்டா பாவி நான் இத்தனை வருஷமா தேடிட்டிருக்கேன். நான்தான் அந்த மங்களத்தோட மகன்" என்ற நான் முகத்திலேயே நன்கு குண்டுகளைச் செலவழித்தேன்.

தற்சமயம் மத்திய சிறைச்சாலையில். எனக்கு ஆயுளா, தூக்கா என்று யூகம் எதுவும் வந்து தொலைக்க மாட்டேனென்கிறது.

-------------------------

# 8

# புலி வருது!

**ச**த்தியமங்கலம் காட்டிலாகா அலுவலகம் முன்பாக திடீரென்று ஜீப்பில் வந்து கலெக்டரே இறங்குவார் என்ற அதிகாரிகள் யாரும் எதிர் பார்க்கவில்லை

“இதோட எட்டு பேர் செத்தாச்சு. என்னதான் பண்ணிட்டிருக்கீங்க நீங்க?" கத்தினார் கலெக்டர்.

“சார், கிராமத்துக்காரங்களே ஒரு குழு அமைச்சி தினம் பத்து பேர்னு தீப்பந்தம் கொளுத்திக்கிட்டு ஊரைச் சுத்தி வந்து காவல் காத்திக்கிட்ருக்காங்க. நாங்க ரெண்டு ஆபீசர்ஸ் ஜீப்புல துப்பாக்கியை வெச்சிகிட்டு அலைஞ்சிட்டுக்கோம். இனிமே எந்த பிராப்ளமும் வராது சார்."

“என்ன இப்படிப் பொறுப்பில்லாமல் பேசறீங்க? எட்டு பேரைக் கொன்னிருக்கு. மனுஷ ரத்தத்தோட டேஸ்ட் பார்த்து வெறி பிடிச்சி சுத்திட்டுருக்கு அந்தப் புலி. இனிமே வராதுன்னு எப்படிச் சொல்றீங்க?"

“ஒரு தடவை சுட்டதில மிஸ் ஃபயர் ஆயிடுச்சு சார். ஆனா அதில மிரண்டு அது டீப் ஃபாரெஸ்ட் போய்டுச்சி, இனிமே வராது."

“என்னால ஒத்துக்க முடியாது. அந்தப் புலியை கொன்னுடச் சொல்லிதான் உத்தரவு போட்டுட்டேனே. ரிஸ்க் வேணாம். அதைக் கொன்னுடணும் அமைச்சர் மெட்ராஸ்ல உக்காந்துகிட்டு போன்ல கெட்டவார்த்தை எல்லாம் சொல்லி திட்டறார்ய்யா, உங்கள்ள யாருக்கம் அந்தப் புலியைக் கொல்றதுக்குத் திறமை இல்லையா? அதான் உண்மையா?"

“சார், ஃபாரெஸ்ட் ஆபீசர் கதிர்வேலு இதில எக்ஸ்பர்ட் சார். அவர் லீவுல போயிருக்கார். அவர் வந்ததும்..."

“மனுஷ உயர் செத்துக்கிட்டுருக்கு அந்த கிராமத்துல ஒவ்வொரு ராத்திரியும் உசுரைக் கைல பிடிச்சிட்டு பயந்துக்கிட்டுருக்காங்க. வந்ததும், போனதும்னு பேசிட்ருக்கீங்களே... அவரோட லீவைக் கேன்சல் பண்ணுங்க, உடனே வரச் சொல்லுங்க, புலியைக் கொன்னுட்டுதான் என்னை வந்து பார்க்கணும்னு சொல்லுங்க."

“எஸ் சார்."

ஜீப் புறப்பட்டுப் போனதும், எல்லோரும் பெருமூச்சு விட்டார்கள்.

“என்ன அமுதா முட்டாள்தனமாப் பேசறே? ஃபுட்பால் மேட்ச்சா நடக்கப் போகுது, வந்து வேடிக்கைப் பார்க்கறேன்று சொல்றே? புலி வேட்டைம்மா, உயிரைப் பணயம் வெச்சு இறங்கறேன்" என்றான்

கதிர்வேல் தனது துப்பாக்கியைத் துடைத்தபடி.

“ப்ளீஸ் கதிர்... ப்ளீஸ்... ப்ளீஸ் கதிர், நீ அந்தப் புலியைச் -சுடறதை நான் உன் பக்கத்துல இருந்து பார்க்கணும்ப்பா. எவ்வளவு த்ரில்லிங்கா இருக்கும். ப்ளீஸ் கண்ணா." அவன் தாடையைப் பிடித்துக் கொண்டு கொஞ்சினாள் அமுதா.

“ரொம்ப டேஞ்சர் அமுதா."

“டேஞ்சர் எனக்கு மட்டும்தானா? உனக்கில்லையா? நான் யாரு? உன்னோட சுகதுக்கங்கள்ல பங்கெடுத்துக்கப் போறவ. உனக்கேற்படற அபாயத்திலேயும் பங்கெடுத்துக்கக் கூடாதா?"

கதிர்வேல் அவளைப் பார்த்தான். யோசித்தான்.

“அவசியம் வரணுமா?"

“வந்தே ஆகணும்."

“சரி, வா." என்றான்.

புலி வேட்டைக்கான ஆயத்த ஏற்பாடுகளுடன் அவளையும் அழைத்துக் கொண்டு அந்த கிராமத்திற்கு வந்து சேர்ந்தான்.

முதல் கட்டமாக அந்த கிராமத்தில் புலி அடித்து பலியான குடும்பத்தினர். புலியைப் பார்த்தவர்கள் என்று எல்லோரையும் விசாரித்து, புலி காட்டின் எந்தப் பகுதியிலிருந்து வருகிறது, எந்தத் திசையில் திரும்பி ஓடுகிறது என்கிற தகவல்களைச் சேகரித்தான்.

அந்தத் தகவல்களின் அடிப்படையில் பகலில் காட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுந்து ஒரு உயரமான மரத்தின் மேல் பரண் ஒன்றை அமைத்தான்.

ஒரு ஆடு வேண்டும் என்ற கேட்டு, கொண்டு வந்து அந்த மரத்திற்கு அருகாமையில் மற்றொரு மரத்தில் கட்டிப் போட்டான். டவுனில் இரத்த வங்கியிலிருந்து மனித ரத்தம் ஒரு பாட்டில் வாங்கி வந்து ரெ ஃப்ரிஜிரேட்டரில் வைத்துக் கொண்டான்.

“உன் பிளான் என்ன கதிர்?" என்றாள் அமுதா.

“இன்னையிலேர்ந்து தினம் ராத்திரி அந்தப் பரண்ல போய் உக்கார்ந்து இருப்பேன். ரத்தத்தை அந்த ஆட்டு மேல தெளிச்சு வெச்சிடுவேன். ஊர்ல தீப்பந்தம் கொளுத்திட்டு காவலுக்கு சுத்தறதை நிறத்தச் சொல்லப்போறேன். துப்பாக்கியோட தயாரா இருப்பேன். மனித ரத்தத்தோட சுவையைப் பார்த்துட்ட அந்தப் புலி அந்த ஆட்டைத் தேடி வரும். அது ஆட்டு மேல பாயறப்ப என் துப்பாக்கி குண்டு அதுமேல பாயும்“ என்றான் கதிர்.

“ஃபெண்டாஸ்டிக், உன்னோட அந்த பரண்ல நானும் இருப்பேன் இல்லையா?" என்றாள் அமுதா.

“கொஞ்சம் யோசித்துப் பாரேன் அவசியமா?"

“அவசியம்! புலியை நீ சுட்டதும் உனக்கு ஒரு தித்திக்கம் முத்தம் கொடுக்கறதுக்கு நான் உன் பக்கத்தில இருந்தாத்தானே முடியும்?"

“சரி, வந்து தொலை" என்றான்.

“ம்...ம்...மே..." என்றது ஆடு. ரத்தம் தெளிக்கப்பட்டிருந்தது. மரத்தின் பரண்மேல் கதிர்வேலும், அமுதாவும் இருந்தார்கள். கதிர்வேலின் கையில் ஒரு அடக்கமான டார்ச்லைட். அதையும் அவன் அணைத்து விட, ஒரே இருட்டு.

அடர்ந்த மரங்களென்பதால் நில வெளிச்சம்கூட கசிந்து வரவில்லை. ஏதேதோ பறவைகளின் சத்தங்கள், கொஞ்சம் பயமாக இருக்கவே அவனைக் கட்டிக் கொண்டாள் அமுதா.

“என்ன, பயமாக இருக்கா?"

“கொஞ்சம்."

“நான் தான் சொன்னேன்ல, வரவேணாம்னு. பயப்படாதே, கைல துப்பாக்கி இருக்கு."

“புலி மரத்துமேல ஏறி வராதா?"

“ஏறாது, அதிலயும் இவ்வளவு உயரம் ஏறாது."

“ஏன் கதிர், குறி தவறாம சுட்டுடுவியா நீ?"

“இதுவரைக்கும் ஒன்பது புலி சுட்டுருக்கேன்."

“ஒரே தடவை சுட்டதும் செத்துடுமா?"

“அது குண்டு எங்கே பாயுதுன்றதைப் பொறுத்தது. ஆனா ரெண்டு மூணு தடவை சுடணும். அதோட துடிப்படங்கற வரைக்கும் சுடணும்."

“குண்டு பட்டதும் பயங்கரமாகக் கத்துமில்லை."

“இல்லை. பி.எஸ்.வீரப்பா மாதிரி சிரிக்கும். கேக்கறியே கேள்வி."

“சமயத்துல செத்தது மாதிரி நடிக்குமா?"

“இதோ பாரு. உனக்கு ரொம்ப பயமா இருந்தா, இறங்கு. கொண்டு போய் விட்டுட்டு வந்துடறேன்."

“இறங்கின சமயம் பார்த்து புலி வந்துட்டா?"

“இவ்வளவு பயம் இருக்குல்லே, எதுக்கு பிடிவாதம் பிடிச்சே!"

“ஒரு ஆசைதான். ஆனா நீ பெரிய தைரியசாலி தான் கதிர். நமக்குப் பொறக்கற பையனும் படு துணிச்சலா வருவான்."

“அதுக்கு இப்ப என்ன? இன்னும் கல்யாணமே நடக்கலையே."

“அதனால என்ன? நடக்க வேண்டியதுதான் நடந்துடுச்சே. என் வயத்துலே நம்ம பையன் கண்ணு முழிச்சுட்டான்ப்பா. பீரியட் தப்பிருக்கேன்."

“ஏய்! நிஜமாவா? விளையாடாதே!"

“இதிலென்ன விளையாட்டு? நிஜமா! என் கையைப் பிடித்து நாடி பாரேன். இரட்டைத் துடிப்பு கேக்கும்."

“ஏன் எங்கிட்ட சொல்லலை நீ?"

“சமயம் வர்றப்ப சொல்லலாம்னு பார்த்தேன். அதான் சொல்லிட்டேனே!"

கதிர்வேல் மௌனமானான். அவன் முகம் கறுத்துப் போனதை இருட்டு காரணமாக அவளால் பார்க்க முடியவில்லை.

கர்ப்பமாகி விட்டதால் இனி கல்யாணத்திற்கு நச்சரிப்பாளே! இருநூறு பவுன் நகை, பைக், மூன்று ஏக்கர் நிலத்துடன் பெண் நிச்சயம் செய்து வைத்திருப்பதை எப்படிச் சொல்லி இவளை கழற்றி விடுவது என்று யோசித்துக் கொண்டிருக்கையில்... இப்படி ஒரு பிரச்சினையா?

‘உர்ர்ர்ர்ர் என்று புலியின் உறுமல் தூரத்தில் கேட்டது.

“அதோ, புலி வருது."

“ரொம்ப பயமா இருக்கு கதிர்" என்ற அவனை மேலும் இறுக்கிக் கொண்டாள்.

“கையை விடு முதல்ல. எப்படி நான் சுடறது?" என்று அவளை விலக்கி நிறுத்தி டார்ச் லைட்டை ஆகாயம் நோக்கிக் காட்டி, லீக்கான வெளிச்சத்தில் கீழே பார்த்தான். மெதுவாக அந்த ஆட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது புலி.

“அமுதா, அதோ பாரு புலி!"

“ம்ம்ம். நான் பார்க்க மாட்டேன்" என்று தன் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

புலி ஆட்டுக்கு மிகப் பக்கமாக வந்த சமயம்... கதிர்வேல் பரணின் விளிம்பில் நின்றிருந்த அமுதாவை சட்டென்ற கீழே தள்ளி விட்டான்.

அமுதா ஒரு கிளையில் மோதியதால் நேராக தரையில் விழுந்து சிதறாமல் குதித்தமாதிரி கீழே விழுந்து, உடனே எழுந்து பிரமையில் ஒரு வினாடி நின்றிருக்க...

அந்த நேரம் அங்கே பாய்ந்து வந்த கரடி ஒன்று ஆட்டின் மேல் தாவியது. அதே நேரம் புலியும் பாய்ந்தது.

சுதாரித்த அமுதா காட்டுக்கு வெளியே ஓடத் துவங்கினாள்.

ஆட்டை முன்னிட்டு கரடியும், புலியும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. அதில் ஆடு எப்போதோ உயிரை விட்டு இழுபட்டுக்

கொண்டிருக்க, ஒரு கட்டத்தில் புலி ஆட்டைக் கவ்வியிழுத்துக் கொண்டு காட்டுக்குள்ளே பாய்ச்சலாய் ஓடியது.

ஆட்டைக் கோட்டை விட்ட கோபத்தில் திரும்பிய கரடி மரத்தின் மேல் கதிர்வேல் இருப்பதைப் பார்த்தது. ஒரே பாய்ச்சலாக மரத்தின் மேல் ஏறத் துவங்கியது.

அமுதாவைத் தள்ளி விட்டபோது ஏற்பட்ட தடுமாற்றத்தில் தன் துப்பாக்கியைத் தவற விட்டிருந்த கதிர்வேல் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமுமாகத் தள்ளாடி பரபரத்துக் கொண்டிருக்க...

மரத்தல் ஏறிய கரடி அந்தப் பரணை சமீபித்தது.

(இதனால் சகலமானவருக்கும்... 'கெடுவான் - கேடு நினைப்பான்' என்கிற நீதி மற்றும் ஒருமுறை சொல்லப்படுகிறது.)

-------------------------

9

# காதல்னா என்ன பிரகாஷ்?

ரயிலில் இருந்து இறங்கியதும், அவனைத் தான் தேடினாள்.

"நான் இங்கே இருக்கேன்ம்மா?" என்றான் டிரைவர்.

"ரெண்டு சூட்கேஸ் இருக்கு. எடுத்து கார்ல கொண்டு பேய் வை."

மறுபடி தேடினாள். எங்காவது ஒளிந்து கொண்டிருகிறானோ? திடீரென்று வந்து இடுப்பைக் கிள்ளுவானோ?

வரவில்லை.

உதடுகள் துடித்தன. எத்தனை தூரம் வலியுறுத்தி லெட்டரில் எழுதி இருந்தேன். "உங்களை... நேரில் பேசிக் கொள்கிறேன்" என்று பற்களைக் கடித்தாள்.

காரில் ஏறி வீட்டுக்கு வந்து, "ஹலோ டாடி", சொல்லி நேராக ரூமிற்கு வந்து டெலிபோனை எடுத்தாள்.

"ஹலோ, சரஸ் பேசறேன்."

"ஹாய்! எப்ப வந்தே!"

"விளையாடுறீங்களா?"

"போன்ல எப்படி முடியும்?"

"லெட்டர் வரலை?"

"என்ன லெட்டர்? எழுதி இருக்கியா? வரலையே?"

“வரலை?"

“நிஜமா வரலைடா?"

“பொய். ஸ்டேஷன்ல உங்க மேல, எனக்கு எவ்வளவு கோபம் தெரியுமா? அந்த லெட்டர்ல, ஸ்டேஷனுக்கு கண்டிப்பா வரணும்னு எழுதியிருந்தேன்."

“அதான் வரலைன்னு சொல்றேனம்மா. வந்திருந்தா அதைவிட என்ன வேலை எனக்கு? சரி, எப்படி இருக்கே?"

நல்லா இருக்கேன். உங்களுக்கு ஒண்ணு வாங்கிட்டு வந்திருக்கேன்."

“லைட்டர்?"

“இல்லை."

“பனியன்."

“ஊகூம்“

“நீயே சொல்லிடு. என்ன?"

“சொல்ல மாட்டேன். காட்டறேன் நேர்ல!"

“சரி. எத்தனை நாளாச்சி? ஒண்ணு கொடேன்."

“மாட்டேன். இன்னும் பல்விளக்கலை."

“டெலிபோன் வழியா துர் நாற்றம் அடிக்காது."

“நீங்க மொதல்ல கொடுங்க."

“நீ மொதல்ல."

“நீங்க மொதல்ல."

“சரி, ரெண்டு பேரும் ஒரே சமயத்திலே ரெடி ஒன், டூ, த்ரி."

“முத்..."

“...தம்“

“வீட்லதானே இருக்கீங்க?"

“வீட்லயேதான் இருக்கேன். பத்துநாளா?"

‘பத்து நாளாவா? ஏன்-?"

“உடம்பு சரியில்லை சரஸ். ப்ளூ ஜுரம் வந்து... இப்ப தேவலாம். டாக்டர் ரெஸ்ட்ல இருக்கச் சொல்லி இருக்கார்."

“இடியட்! ஏன் எனக்கு எழுதலை?"

“எழுதினா என்ன செஞ்சிடப் போறே. டெல்லியிலேர்ந்து?"

“உடனே புறப்பட்டு வந்திருப்பேன்."

“உடம்பு சரியில்லாம போறது சகஜம்தானே சரஸ். இதைப் போய் எழுதிக்கிட்டு, உன் மூடை ஏன் கெடுக்கணும்னு நினைச்சேன். லீவிலே போயிருக்கிற உன் ட்ரிப்பும் வீணாகிறதை நான் விரும்பலை."

“இன்னும் ஒரு மணிநேரத்திலே வர்றேன் அங்கே."

“வா. அப்புறம்... ஒரு விஷயம்..."

“என்ன பிரகாஷ்?"

“இன்னிக்கு நான் உன்னைப் பார்க்க முடியாது."

“ஏன்?"

“உன் கூடப் பேசுவேன். ஆனா பார்க்க வரமாட்டேன்."

“புரியலை."

“இன்னிக்கு என்ன தேதி?"

“ஜுன் 12"

“இதைப் பத்தி உன்கிட்டே சொன்னதில்லைன்னு நினைக்கிறேன். இன்னிக்கு எங்கப்பா இறந்த தினம். அவர் ஃபாக்டரியிலே வேலை பார்த்தப்போ கம்பிகள் சரிஞ்சி இவர் மேல விழுந்து உடம்பெல்லாம் குத்தினதோட இல்லாம, ரெண்டு கண்ணையும் இழந்தார்.

“பதினைஞ்சு நாள் துடிச்சிட்டு இறந்துவிட்டார். ஒவ்வொரு ஜுன் 12ரூந் தேதியும் கண்ணைக் கட்டிக்கிட்டு அன்னிக்கு முழுக்க மௌன விரதம் மாதிரி. ‘பார்க்கா விரதம்’ இருப்பேன்."

“வெரி சாரி பிரகாஷ். இதைப்பத்தி நீங்க சொன்னதேயில்லை. ஒரு நாள் பூரா கண்ணைக் கட்டிக்கிட்டிருக்கிறதுன்னா ரொம்பக் கஷ்டமாயிருக்குமே?"

“கஷ்டம்தான்."

“சரி, நாம நேர்ல பார்ப்போம்."

சரஸ் வந்தபோது, கட்டிலில் படுத்து இருந்தான். பிரகாஷ் கைகளை மார்பின் குறுக்கே கட்டி இருந்தான். முகத்தில் இரண்டுவார வயதான தாடி. கண்களின் மேல் ஒரு துண்டு கட்டப்பட்டிருந்தது.

“பிரகாஷ். நான் வந்துட்டேன்."

“தெரியும். சென்ட் சொல்லிடுச்சி."

எழுந்து அமர்ந்தான். கையை நீட்டினான். கொடுத்தான். அருகில் இழுத்து கட்டிலில் அமரச் செய்தான்.

“என்ன பிரகாஷ். இப்படி துரும்பாயிட்டீங்க?"

“யாருக்காவது பல் குத்த உதவலாமேன்னு நினைச்சேன் துரும்பாயிட்டேன்."

“எப்பவும் கிண்டலா? உடம்பிலே பாதியைக் காணோம்."

“பேப்பர்ல விளம்பரம் கொடுப்போமா?"

“இன்னும் காய்ச்சல் இருக்கா?"

“இல்லை. களைப்பு மட்டும் தான்.

“டாக்டர் சொன்னபடி மருந்தெல்லாம் சாப்பிடறீங்களா?"

“தவறாம."

“உதவிக்கு யார் இருக்கா.

“வேலைக்காரன்."

“ஊர்லேந்து அம்மாவை இல்லை தங்கச்சியை வரவழைச்சு இருக்கலாம் இல்லே..."

“அந்த அளவுக்கு அவசியமாபடலை. இப்போ நான் ஓ.கே. வேற பேசேன். டெல்லி ட்ரிப் எப்படி இருந்திச்சி?’

“ஃபைன், உங்களுக்கு வாங்கிட்டு வந்தது என்ன தெரியுமா?"

“சொல்லிடு."

“கூலிங் கிளாஸ். கிளை மேட்டுக்குத் தகுந்த மாதிரி, நாலு கலர்ல மாறிக்கும்."

வாங்கி தடவிப் பார்த்தான்.

“நல்ல செலக்ஷன்."

“அப்புறம் என்ன புக் படிச்சீங்க... சமீபத்திலே?"

“தியாகின்னு ஒரு தமிழ் நாவல் படிச்சேன். பிரமாதமான நாவல்."

“சுருக்கமா சொல்லுங்களேன்."

“ஒரு இளம் தம்பதிகள். திடீர்னு புருஷன் ஒரு விபத்திலே சிக்கி, இரண்டு காலும் எடுக்க வேண்டியதாய் போய் ஆண்மையையும் இழந்துடறான். சில மாதங்களில் சலிச்சுப் போயிடுது. வாழ்க்கை.

“அந்த சந்தர்ப்பத்திலே, எதிர்த்த வீட்டில குடி வர்ற, ஒரு வாலிபனை பார்க்கிறா. மனசு தன்னையறியாம அவனை விரும்ப ஆரம்பிக்குது. அந்த வாலிபனே, ஒரு நாள் ஒரு சந்தர்ப்பத்திலே இவகிட்டே, ‘ஐ லவ்’ யுன்னு சொல்றான்.

“இவளால் திருப்பி, ‘ஐ லவ் யு’ன்னு சொல்லாம முடியாம, அறைஞ்சிடறா, என் புருஷன் மேல எனக்கு சலிப்பு இருக்கு; ஆனா வெறுப்பு இல்லை. நிச்சயமா துரோகம் பண்ணமாட்டேன்னு சொல்றா.

அவன் போனதும் ரூமுக்குள்ளே போய் கதறி அழறா!"

“கதை!" என்றாள் சரஸ்

“என்ன சொல்றே?"

“கதையில் லட்சியம் இருக்கு. பண்பாடு தெரியுது. ஆனா யதார்த்தம் இல்லை. மனசை தொட்டுச் சொல்லுங்க இந்த முடிவு சரியா?"

“வெல். அதைத்தான் நானும் சொல்லணும்னு இருந்தேன். நீயே சொல்லிட்ட..."

“இப்பல்லம் ஆணா இருந்தாலும், பெண்ணா இருந்தாலும், உறவுகளை விட உணர்வுகள் முக்கியமாயிடுச்சி. பெண்களைப் பொருத்தவரைக்கும் அவங்களுக்கு தீவிரமாக விரும்பவும் தெரியும். தீவிரமாக வெறுக்கவும் தெரியும். கதையில் அந்தப் பொண்ணு திரும்ப நானம் உங்களை விரும்பறேன்னு சொல்லி அவனோட ஓடிப் போயிந்தா, அது பண்பாடு மீறினதா இருக்கும். ஆனா என்வரைக்கும் அதுதான் சரியான தீர்வா நினைக்கிறேன். ஒவ்வொரு ஜீவனும் தனக்காக அதிகமா வாழணும்ங்கறது என் கருத்து."

படபடவென்று கைதட்டினான்.

பிறகு...

பிரகாஷ் மவுனமாயிருந்தான்.

“என்ன மவுனமாயிட்டிங்க?"

“கொஞ்சம் பேசப் போறேன். அதுக்கு முன்னாடி மனசுக்குள்ளே ஒத்திகை பார்த்துகிட்டேன்."

“என்ன சொல்லுங்க. நாம வாதிக்கலாம். எனக்கு வாதம்னா ரொம்ப பிடிக்கும்."

“இது வாதிக்க வேண்டிய விஷயமில்லை சரஸ். தீர்மானிக்க வேண்டிய விஷயம்."

“புதிரா? விடுகதையா?"

“இல்லை வாழ்க்கை. இப்போ கொஞ்சம் பேசினியே. ஒவ்வொருத்தரும் தனக்காக அதிகமாக வாழணும்னு. இது ஊருக்கான அறிவுரையா? இல்லை உன் சொந்த எண்ணமும் அதுதானா?"

“என் சொந்தக் கருத்து. நானும் அப்படித்தான் வாழ்வேன்."

கொஞ்சம் தயங்கினான்.

“என்ன பிரகாஷ் சொல்லுங்க"

“அப்போ நீ என்னை மறந்துடறதுதான் நல்லது"

“ஏய் இதென்ன புது விளையாட்டு."

“விளையாட்டு இல்லேம்மா. வினை. இன்னிக்கு அப்பா இறந்த தினம். விரதம் அது, இதுன்னு சொன்னதெல்லாம் பொய் சரஸ்."

“நீ ஊருக்குப் போன மறுநாள். பைக்கிலே போய்க்கிட்டிருந்தப்போ, இரும்பு கம்பியை ஏத்திக்கிட்டுப் போன ஒரு கை வண்டி மேல மோதி, என் உடம்புலே கண்லே எல்லாம் கம்பி குத்தி... இப்போ என் முகத்திலே குழிகள் தான் இருக்கு."

துண்டை அவிழ்த்தான். இரண்டு கண்களைச் சுற்றிலும் காய்ந்து போன ரத்தமும், அடர்த்தியாய் கண்கள் மேல் பஞ்சுவைத்து அதன்மேல் பாண்டேஜும் போடப்பட்டிருக்க, சட்டையக் கழற்றினான். மார்பில், வயிற்றில் தனித்தனியாக பாண்டேஜ்கள்.

“பிரகாஷ்!" என்று கதறி விட்டாள்.

வெடித்தாள். விம்மினாள். அவன் மடியில் விழுந்து அழுதாள்.

“பிரகாஷ். என் வாழ்க்கையிலேயே இப்படி நடக்கும்னு நான் எதிர்பார்க்கலை. நோ. என்னால உங்களை விலக்க முடியாது. மறக்க முடியாது. எத்தனை தூரம் உங்களை விரும்புறேன் தெரியுமா? நீங்க எப்படி இருந்தாலும் உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்" என்று வெறிபிடித்தவள் மாதிரி கத்தினாள்.

“அவசரப்படாதே சரஸ். நிதானமாக யோசிச்சு ஒரு முடிவுக்கு வா."

அழுது கொண்டிருந்த அவள் தலையைக் கோதினான்.

மறுநாள் சரஸ் வரவில்லை.

அதற்கும் அடுத்தநாள் தான் வந்தாள்.

அதே அறை. அதே கட்டில். புது பேண்டேஜோடு படுத்திருந்தான் பிரகாஷ். வாசனை வந்து, வாசல் பக்கம் திரும்பினான்.

“வா சரஸ்!" என்றான்.

அமைதியாய் வந்து ஸ்டூலில் அமர்ந்தாள்.

“ஸாரி பிரகாஷ். நேத்து என்னால வரமுடியலை."

“பரவால்லை. என்ன சாப்பிடறே?"

“ஒண்ணும் வேணாம்."

அமைதி. அவள் பேச, அவன் காத்திருக்க ஹாலின் சுவர்க் கடிகாரத்தின் “டிக், டிக்“ துல்லியமாய் கேட்டது.

சரஸ் விசும்பினாள்.

“ஏய், சரஸ்! ப்ளீஸ் அழாதே! நீ அழுதா எனக்கும் அழுகை வரும். என் மனசு ரொம்ப பக்குவப்பட்டது. என்னால எந்தப் பிரச்சனையையும் எல்லாக் கோணத்திலேர்ந்தும் பார்க்க முடியும்."

சரஸ், அழுகையை நிறுத்தி மெதுவாய் பேசினாள்.

“என்னை மன்னிச்சிடுங்க... பிரகாஷ் உங்களுக்கு கடைசி வரைக்கும், ஒரு நல்ல தோழியா இருக்கேன். ப்ளீஸ்! என் வாழ்க்கையையே கேட்காதீங்க. உங்களை எந்த அளவுக்கு விரும்புறேனோ, அதைவிட கொஞ்சம் அதிகமா, நான் என்னையே விரும்புறேன். நான் முதல் முதல்ல உங்களை சந்திச்சப்பபோ, உங்களை இந்த நிலையிலே பார்த்திருந்தா என் மனசிலே நிச்சயமா காதல் தோன்றி இருக்காது. கருணைதான் ஏற்பட்டு இருக்கும்."

“காதல்ங்றது இரு உள்ளங்கள் சம்பந்தப்பட்டதுங்கறது; நம்மையே நாம் ஏமாத்திக்கிற, ஏராளமான அபத்தங்கள்ல ஒண்ணு. உடல், அழகு இதிலே மயங்கி விரும்பி, அப்புறம் பேசிப் பழகினதுக்கப்புறம் தான், உள்ளத்துக்கு வர்றோம்."

“என் கோணத்திலேர்ந்து யோசிக்க, உங்களால முடியும் பிரகாஷ். நான் உங்களை விரும்புறேன். அனா எனக்கு என்ன இன்பம் இருக்கு இந்த வாழ்க்கையிலே? என் அழகை பார்க்கிறது யாரு? நான் யாருக்காக, மேக்கப் செஞ்சிக்கணும்? தெரிஞ்சி, வலுக்கட்டாயமா வேதனைகளிலே என்னை சொருகிக்கணுமா?’ நான் சுயநலக்காரிதான். ஆனா அதுக்காக வருத்தப்படலே!"

அமைதி. இப்போது பிரகாஷின் உடல் லேசாய் குலுங்கியது. உதட்டைக் கடித்தான்.

“சரஸ்! நீ எடுத்த முடிவு ரொம்ப சரி. ஆனா ஒரே ஒரு சின்ன சந்தேகம் மனசிலே. நாம காதலிச்சோமே, அது உண்மையான காதல்தானா?’

“காதல்ங்கிறது ஒன்மோர் அபத்தம். காதல்ன்னா என்ன பிரகாஷ்? இதோ வடக்கே இதுவரை, தெற்கே இதுவரைன்னு வயலுக்கு வேணும்னா எல்லை போட்டு காட்ட முடியும். உங்களால் இதுதான் காதல்ன்னு எல்லை போட்டு காட்ட முடியுமா?’

காதலைப் பொறுத்தவரைக்கும், ஒவ்வொரு மனுஷக்கும் அது ஒவ்வொரு அர்த்தம். கொஞ்சம் வியப்பு, கொஞ்சம் ஆச்சரியம், கொஞ்சம் கனிவு, கருணை, புகழ்ச்சி, அன்பு, காமம் எல்லாம் கலந்த கலவை அது."

“காதல்ல தோல்வி அடையற அத்தனை பேரும் ரயிலுக்கு முன்னாடி பாய்ஞ்சிடறதில்லை. எத்தனையோ பேர் மெளனமாக முழுங்கிடறாங்க. முடியக் கூடியதுதான் இது."

“மெதுவா, நிதானமா என் கோணத்திலேர்ந்து யோசிச்சா, எல்லா உணர்வுகளுக்கும் சரியான அழுத்தம் கொடுத்துப் பார்த்தா, என்னைப் புரிஞ்சுக்குவிங்க வர்றேன் பிரகாஷ்."

வேகமாகச் சென்றாள் சரஸ்.

மேஜைமேல், முந்தாநாள் அவள் வாங்கி வந்து வைத்த கூலிங்

கிளாஸ், இரண்டு கால்களால் அமர்ந்திருந்தது.

--------------------------

## 10

# எங்கே போனாய்?

எப்போ வருவாய்?

2080-ம் வருடம் வெளிவர வேண்டிய கதை இது. அவசரக் குடுக்கைத்தனமாக இப்போதே எழுதப்பட்டு... 'அதே'த்தனமாக இப்போதே வெளியிடப்பட்டுவிட்டது.

செக்ஷன் ஹெட் அழைத்தார். சென்றான் சிவா. "கமின்" என்றது கம்ப்யூட்டர் (செக்ஷன் ஹேட்) "யெஸ் சார்" "மிஸ்டர் சிவா உங்களுக்கு இந்த வருடத்திய விடுமுறை நாட்கள் நாளை துவங்குகின்றன. 71 நாட்கள். கம்பெனியின் அன்பளிப்பாக 53,400 ரூபாயை கேஷ் கவுண்டரில் பெற்றுக் கொண்டு செல்லலாம். விஷ்யு நைஸ் டேய்ஸ்" என்றது. "டுர்... டர்.... என்று சத்தம் போட்டு ஒரு சின்ன கார்டை வெளியே தள்ளியது. "மெர்ஸி" என்று அதை எடுத்துக் கொண்டு சென்று கேஷ் கவுண்டரின் வாயில் திணித்தான்சிவா. வயிறு திறந்தது. பணம் இருந்தது. எடுத்துக் கொண்டு கம்பெனியின் மொட்டை மாடிக்குச் சென்று 'று' வரிசையில் இரண்டாவது டிராக் வந்து தன் ஸ்பேஸ் காரில் ஏறினான். சில வினாடிகளில் சிவா மேகங்களிடம் 'ஹலோ' சொல்லிக் கொண்டிருந்தான். ஆட்டோ டிரா∴பிக் சிக்னல் சிவந்தது. எரிச்சலுடன் காரை சென்று கொண்டிருந்த காரை ஒரு ஹைஜம்ப் செய்து ஓவர் டேக் செய்தான்.

மூன்று நிமிடம் கழித்து தன் குவார்ட்டர்ஸின் மொட்டை மாடியில் 'ணு' டிராக்கில் இறக்கிவிட்டு, லி∴ப்டில் ஏறி கீழிருந்து நூற்றிப்பதினாலாவது ∴ப்ளோருக்கு வந்தான்.

கதவைத் திறந்தான்.

அப்பா பேப்பர் ரீடரில் நியூஸ் கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்தக் குள்ளமிஷின் அன்றைய தினசரி உள்ளேத் தள்ளப்பட்டதும், 'கிங்களி கால் குலேடர்ஸ் ஆல்த பெஸ்ட்...' என்ற விளம்பரத்தில் ஆரம்பித்து வானத்தில் இரண்டு ராக்கெட்டுகள் மோதிக் கொண்ட சாதாரண செய்தியில் துவங்கி வரிவரியாய்ப் படித்துக் கொண்டிருந்தது.

"டாட்" என்றான்.

மிஷினை நிறத்தி "எஸ்" என்றார்.

"நாளைக்கு எனக்கு ஹாலிடேஸ் தொடங்குது. 'ஸ்பேஸ் - முடு6' வேணும்."

“எங்கே போகப் போறே? மூன்? மார்ஸ்?"

“ரெண்டும் இல்லை. எய்ம்லெஸா போய்க்கிட்டே இருக்கப் போறேன்."

“போய்ட்டு வா." என்று ரீடரைத் தட்டினார்.

சிவா தன் அறைக்குச் சென்று விண்வெளி உடை அணிந்து, உணவு டேப்லெட்ஸ் டின் ஒன்றை எடுத்துக் கொண்டு ஷெட்டிற்குப் போனான்.

‘ஸ்பேஸ் - முடு6’’ ‘வா’ என்றது.

உள்ளே சென்று அமர்ந்து.

“ஹலோ சுபாஷ்" என்றான் பேசும் கம்ப்யூட்டரிடம்.

“ஹலோ சிவா" என்றது அது.

“ப்யூல் இருக்கிறதா சுபாஷ்?’

“ஷ்டேஷன் 7 வரை போகலாம்."

சிவா ஒரு பட்டனை அழுத்த கிளாஸ் டோர்ஸ் அவனைச் சூழ்ந்து கொண்டது. அடுத்த பட்டனை அழுத்தினான்.

ஷெட்டை விட்டு வெளியே வந்து... கொஞ்சம் சாய்வாய் பறந்து பின் செங்குத்தாய் மேலே மேலே பறந்தது.

அந்தரத்தில் பிரம்மாண்டமான கூடு. அதன் ஸ்டேஷனின் உள்ளே நுழைய அனுமதி கேட்டு நுழைந்தான். சிவா.

“ஃபுல் டாங்க்“ என்றான் சிவா.

டாங்க் நிரப்பப்பட்டதும்

“நெக்ஸ்ட் ஸ்பேஸ் ஸ்டேஷன் எது?" என்றான் சுபாஷிடம்.

“இதுதான் பைனல். இனிமேல் வானம். நோ ஸ்டேஷன்ஸ்."

“இங்கிருந்து நிலாவுக்குப் போக எவ்வளவு நேரமாகும்?’

“59 நிமிஷம் 22 வினாடி ஆகும். ஆனால் அங்கே எல்லா டிராக்ஸும் ரிசர்வ்ட். நம் கப்பல் நிற்கக் கூட இடமில்லை.

“நாம் நிலாவுக்குப் போகவில்லை. மேலே மேலே போய்க் கொண்டே இருக்கப் போறோம். கிளம்புவோமா?"

ஸ்பேஸ் - முடு6 கிளம்பியது.

“சுபாஷ். நம் கப்பலின் வேகம் என்ன?"

“70,000 கிலோ மீட்டர் பெர் செகண்ட்."

மேலே மேலே சென்று கொண்டிருந்தது.

“சுபாஷ்! வாட் ஈஸ் திஸ்! அதோ பார் ஒரு ஸ்பேஸ் ஸ்டேஷன்" என்ற

கத்தினான் சிவா.

“ஆமாம். இங்கே எப்படி ஸ்டேஷன் வந்தது? நம் ஸ்டேஷன் செவனுக்கும் இதற்கும் நடுவில் 17,644,000,000 கி.மீ. எனக்கே புரியவில்லை!"

சிவாவிற்கு ஆர்வம் அதிகரிக்க கப்பலை நிறுத்தினான்.

“எப்படியும் அதற்குள் செல்ல வேண்டும்."

“கதவு மூடியிருக்கிறது. செய்தி அனுப்பினேன். நம் மொழிகள் எல்லாம் புரியவில்லை. ‘ஹவ்லி ஸா’ என்று செய்தி வருகிறது."

“அப்படி என்றால்?"

“ஒரு வினாடி. என் டிரான்ஸ்லேடிங் மிஷின் மொழி பெயர்த்துவிட்டது. ‘பாஸ் வேண்டும்’ என்கிறார்கள். நம்மிடம் பாஸ் இல்லை சிவா."

“எனக்கு தெரியாது. நீ என்ன செய்வாயோ, நாம் அதற்குள் நுழைந்தே ஆக வேண்டும்."

சில விநாடிகளில் ஸ்டேஷனில் கதவுதிறக்க... உள்ளே கப்பலுடன் நுழைந்தார்கள்.

“சுபாஷ், சுபாஷ்! என்ன செய்தாய்?"

“கதவுக்கருகில் காவல் நிற்பது முட்டாள் கம்ப்யூட்டர். நான் போலி பாஸ் தயாரித்துக் காட்டிவிட்டேன்."

“சரி நீ இங்கேயே இரு" என்ற கீழே இறங்கினான்.

சுற்றிப் பார்த்தான்.

யாரையும் காணோம்.

அடுத்த வினாடிகளில் சர் என்ற கார் போன்ற ஒரு ஊர்தி வேகமாய் வந்து நிற்கஒரு பெண் இறங்க...

சிவா அதிர்ந்தான்.

அந்தப் பெண் மேலே ஒன்றுமே அணியவில்லை.

இவன் பார்ர்ர்ர்த்தான்.

அவள் கவலையே படவில்லை.

“ஹூக் ஷீர்ரகன் ஸாரிடன்’ என்றான்.

இதென்ன மொழி! ஸாரிடன் மாத்தி¬¬¬ கேட்கிறாளா?

சுபாஷின் நினைவு வரவே கம்ப்யூட்டரிடம் ஓடினான்.

“நண்பா, உதவுடா, இதென்ன மொழி?"

“ஹூக்லு..."

“நான் எப்படி அவளிடம் பேசுவது?"

“என் ட்ரான்ஸ்லேடிங் மிஷினை கழற்றித் தருகிறேன். அவள் சொல்வதை அதில் பதவு செய்து பின் அதனிடம் உனக்கு எந்த மொழியில் மாற்றம் தேவையோ, அந்த மொழியின் பெயரைச் சொல்லி 'ON' பட்டனை அழுத்து"

“நீ கில்லாடி."

சுபாஷ் சின்னதாய் சத்தம் கேட்டு ஒரு கேஸட் அளவிற்கான மெஷினைத் தந்தான். அதை எடுத்துக் கொண்டு அவளிடம் வந்தான்.

அவள் மறுபடி 'ஹகூஷீர்ரகன் ஸாரிடன்' என்றாள்.

சுபாஷ் சொன்னபடி செய்து 'தமிழ்' என்று சொல்லி பட்டனை 'ON' பட்டனை அழுத்த...

“இங்கே விண்வெளி உடை தேவையில்லை. நீ யார்?" என்றது.

“நான் பூமி மனிதன். நீ யார்?" என்றான். அவளிடம் மெஷினை நீட்டினான்.

அவள் புரிந்து கொண்டு 'ஹூக்லு' சொன்னாள். மெஷின் 'ஹேஹவ்ரி ஹனிதஸ் ஸாரிடன்' என்றது.

பின்னர் அவர்கள் அந்த முறையில் பேசத் தொடங்கினர்.

“நான் காமியைச் சேர்ந்தவள்" என்றாள்.

“காமி என்றால்?"

“பூமி என்றால்?"

பூமி என்றால் அது ஒரு கிரகம். அங்கு மனிதர்கள் வாழ்வார்கள்."

“காமி என்றால் ஒரு கிரகம். நான் அங்குதான் வசிக்கிறேன். அங்கும் மனிதர்கள் வாழ்கிறார்கள்."

அட! பூமியைப் போல இன்னொரு கிரகமா? அங்கும் மனிதர்களா? வாட் எ சர்ப்ரைஸ்...

“உன் பெயரென்ன?" என்றான்.

“ஹோலி"

“எங்க நாட்ல அப்படி ஒரு பண்டிகை இருக்க."

“உன் பெயர்!"

“சிவா."

“ஷீவா"

“எப்படி வேணும்னாலும் கூப்பிட. மொதல்ல உங்க காமியை எனக்குக்

காமி. உங்க உலகத்திலே எத்தனை பேர் இருப்பீங்க?"

“என் கம்ப்யூட்டரைக் கேட்டுச் சொல்கிறேன்."

“சரி, நாம உங்க பேரிக்காவுக்குப் போகலாமா?"

“போகலாம். கொஞ்சம் பொறு" என்றாள். சென்றாள். பொறுத்தான்.

ஒரு வினோத வடிவ ஸ்பேஸ் கப்பலைக் கொண்டு வந்தாள்.

“ஏறு" என்றாள்.

“கொஞ்சம் பொறு" என்று சுபாஷிடம் சென்று, “நண்பா, நான் காமி கிரகத்திற்குப் போகிறேன். அங்கே மனிதர்கள் வசிக்கிறார்கள். விபரங்கள் வந்து சொல்கிறேன்." என்றான் சிவா.

“நண்பா, நீ வரும் வரை நான் காத்திருக்கிறேன்" என்றது சுபாஷ்.

ஹோலியுடன் ஏறிக் கொண்டான்.

உடனே கிளம்பியது.

“எவ்வளவு நேரமாகும் போய்ச் சேர?"

“ரெண்டு மணி நேரம் ஆகும்."

“ஒண்ணு கேக்கறேன். கோவிச்சுக்காதே. ஏன் ஹோலி இப்படி காத்து வாங்க விட்டிருக்கியே. உனக்கு வெக்கமா இல்லை?"

“அப்படி என்றால்?"

“சரியாப் போச்சு! நீ அழகா இருக்கே."

“ஷீவா, நீங்களும்தான்."

“நான் உன்னை தொடட்டுமா"

“தொடேன்."

“இப்படி உடனே ஒத்துக்கிட்டா அதிலே த்ரில் இல்லை. எங்க தமிழ்ப் பெண்களைப் பத்தியெல்லாம் உனக்குத் தெரியலை."

நட்சத்திரங்களுக்கு நடுவே பிரயாணம் தொடர்ந்தது.

“ஹோலி, ஐ லவ் யு" என்றான்.

“ஷீவா, நானும்தான்" என்றாள்.

காமியில்... பேரிக்காவின் பெரியநகர் ஒன்றின் ‘ராக்கெட் போர்ட்’டில் அவர்களின் கப்பல் இறங்கியது.

அதே போல கட்டிடங்கள், அதே போல கார்கள். அதே போல கடல், (சுண்டல் இல்லை) அதே போல மனிதர்கள், (எல்லா பெண்களும் டாப்லெஸ்)

எல்லாம் பூமி போல.

மொழி ஒன்றுதான் புரியவில்லை. ஹூக்லு!

ராக்கெட் போர்ட்டில் கப்பலை விட்டுவிட்டு வெளியே வந்து ஒரு காரில் ஏறி கொஞ்ச தூரம் சென்றதுமே ஹோலியின் வீடு வந்தது.

இருவரும் உள்ளே சென்றார்கள்.

உள்ளே ஒருவர் தனியாக என்னவோ ஒரு விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார். ஹோலி அவர் அருகே சென்று அணைத்துக் கொண்டாள்.

“ஹூல ஹவ்சப் ஸிஷேகோ" என்றாள்.

சிவாவிற்கு ‘சுரீர்’ என்றது. சுற்றும், முற்றும் தேடினான்.

எங்கே அந்த டிரான்ஸ்லேட்டிங் மிஷின்?

அய்யய்யோ! அந்த விண்வெளி கப்பலிலேயே விட்டு விட்டு வந்தாச்சே...

“என்னோட டிரான்ஸ்லேடரைக் காணோம்’ என்றான்!

அவள் “ஹசடே?" என்றாள்.

“ஆமாம். நான் அசடுதான். எவ்வளவு முக்கியமானதை விட்டு விட்டு வந்துட்டேன். இரு இதோ வர்றேன்" என்று வாசலுக்குப் பாய்ந்து காரில் ஏறினான்.

அவள் புரியாமல் நின்றாள்.

வந்த வழியே ஒட்டி ஒரு நிமிடத்தில் ராக்கெட் போர்ட்டை அடைந்த போது...

அவர்கள் வந்த விண்வெளிக் கப்பலை நாலுபேர் சுற்றி நின்று எரித்துக் கொண்டிருந்தார்கள்.

அடப்பாவிகளா! வேகமாக ஓடினான்.

“என் டிரான்ஸ்லேடர் இருக்குடா. அது இல்லைன்னா நான் ஒண்ணுமே பேச முடியாதுடா" என்று கத்தி அவர்களின் கையைப் பிடித்து இழுத்தான் சிவா.

அவர்கள் ‘ஹூக்லு’ பாஷையில் கத்தினார்கள்.

கொஞ்சம் பதட்டம் ஏற்பட்டு... பதினைந்து வினாடிகளில் ஒரு ஜீப் வந்தது. நாலு சிகப்பு உடை அணிந்தவர்கள் சிவாவை நெருங்கி கோழியைப் போல அமுக்கி உள்ளே உட்கார வைத்தார்கள்.

இதென்னடா பேஜார்? ஒரு தடவை உபயோகிச்ச கப்பலை மறுபடியும் உபயோகிக்காம எரிச்சுடுவாங்க. போலிருக்கு. இவங்க யார்? போலீசா? இப்ப என்ன செய்வாங்க? நம்ம ஹோலியோட அட்ரஸ் என்ன?

அய்யய்யோ! இதென்ன வம்பு? என்னை என்ன செய்யப் போறாங்க?

சிவா சில அதிகாரிகள் முன் நிறுத்தப்பட்டான்.

அவர்கள் ஹூக்லுவில் என்னவோ கேட்டார்கள்.

இவன் விழித்தான்.

“நான் பூமி மனிதன்" என்றான்.

அவர்கள் தங்களுக்-குள் என்னவோ பேசிக் கொண்டார்கள்.

அந்த அதிகாரிகளில் ஒருவன் தன் இடுப்பிலிருந்து ரிவால்வர் எடுத்தான்.

என்னை உளவாளி என்று நினைத்து விட்டார்களா? இந்த வேறு உலகத்தில் என்னை அறிந்த ஒரே ஜீவன் ஹோலி! ஹோலி! நீ எங்கே?

அய்யோ நான் என்ன செய்வேன்?

சிவா கத்தினான். “என்னை சுட்டுடாதீங்க!"

கைகளால் சைகை காட்டினான். கெஞ்சினான். கதறினான்.

ஆனாலும், அந்த அதிகாரி அவனை சுட்டான்.

-------

அந்த ஸ்பெஷல் ஸ்டேசனில் கம்ப்யூட்டர் சுபாஷ் “நண்பா, நீ எங்கே போனாய்? எப்போ வருவாய்?" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு சிவாவிற்காகக் காத்திருந்தது.

---------------------------

11

# அனாமிகா

லக்கேஜ் பிரிவில் ஹெல்மெட் ஒப்படைத்து பிளாஸ்டிக டோக்கன் வாங்கி பத்திரப்படுத்தி விட்டு, மனைவி எழுதிக் கொடுத்த லிஸ்ட்டை எடுத்துப் பார்த்தேன். டிராலி அவசியமில்லை என்ற பட்டது. பிளாஸ்டிக் கூடை ஒன்றை எடுத்துக் கொண்டு முதலில் பிஸ்கெட்டுகள் அடுக்கின பகுதிக்குச் சென்றேன்.

புதிதாக அறிமுகமாயிருந்த க்ரீம் பிஸ்கெட் பாக்கெட்டை எடுத்துப் போட்டுக் கொண்டேன். சரவணனுக்கு க்ரீம் பிஸ்கெட் இருந்தால் டிபன்கூடத் தேவையில்லை. சின்னவன் திவாகருக்கு ‘லிட்டில் ஹார்ட்ஸ்’ தான் இஷ்டம் அதிலும் ஒன்று எடுத்தேன்.

மளிகைப் பிரிவுக்கு வந்து மலர்விழியின் லிஸ்ட்படி வெள்ளைப் பட்டாணி, கோதுமை ரவை, குலோப்ஜாமூன் மிக்ஸ், மிக்ஸட் ஃப்ரூட்,

ஜாம், டொமேட்டோ சாஸ், நூடுல்ஸ் பாக்கெட்ஸ் என்று ஒவ்வொன்றாக எடுத்துப் போட்டுக் கொண்டு திரும்பிய போது தான் அழகு சாதனங்கள் பிரிவில் அவளைப் பார்த்தேன்.

பின்புறமாகத் தான் தெரிந்தாள் என்றாலும் எனக்கு அறிமுகம் உள்ளவள் என்று மூளையின் நினைவு அடுக்கிலிருந்து தகவல் வந்தது.

வாளிப்பான தேகம், பளீரென்று நிறம், படகுக் கழுத்து வைத்துத் தைக்கப்பட்ட ஜாக்கெட். அதிலும் உயரம் குறைவான ஜாக்கெட். அதனால தேகத்தின் வனப்பு சந்தேகத்திற்கு இடமில்லாமல் பிரகடனப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்க, சரேலென்ற இடுப்புச் சரிவு.

சந்தேகம் இல்லை. இவள் எனக்குத் தெரிந்தவள். யார்? நிச்சயமாக ஆ்ஃபீஸ் பெண் இல்லை. ஆபீஸில் ஏழு பெண்கள். ஏழு பேரும் நாற்பதைக் கடந்தவர்கள்.

இவளுக்கு முப்பதுக்கு உள்ளேதான் இருக்கும்.

அவளின் முகத்தை உடனேப் பார்த்தாக வேண்டுமென்கிற உந்துதல் ஏற்பட்டது. அடேய்! நீ இரண்டு குழந்தைகளுக்கு அப்பா என்ற உள்ளே ஒரு குரல் ஒலிக்க.. "சேச்சே! தெரிந்தவளாகப் படுகிறதே யாரென்று பார்க்கிற ஆர்வம் மட்டும்தான்" என்று பதில் சொல்லிக் கொண்டேன்.

நான் அழகு சாதனப் பொருள்கள் இருந்த பகுதிக்கு வர, அவள் தன் டிராலியைத் தள்ளிக் கொண்டு பில் போடும் பகுதிக்கு நடந்தாள். இன்னும் முகம் தெரியவில்லை.

"மேடம். இந்த லிப்ஸ்டிக்கை விட்டுட்டீங்க"

பணிப்பெண் குரல் கொடுக்க, பாப் செய்த நெளிக் கூந்தலை சிலுப்பலாகத் திருப்பியபடி வந்த அவள் முகத்தைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமுமாகப் பொங்கியது.

மை காட்! அனாமிகாவா இவள்?

பத்து வருடங்களுக்கு முன் அழகி, இப்போது... பேரழகி!

வாசனையாக சமீபித்து அந்த லிப்ஸ்டிக் எடுத்துக் கொண்டு மீண்டும் பில் கவுண்ட்டருக்கு அவள் நடப்பதற்குள் அவள் பாதங்களில் கொஞ்சின வெள்ளிக் கொலுசு, பாலிஷ் பூசப்பட்ட நகங்கள், ட்விஸ் செய்யப்பட்ட புருவங்கள், டாலர் கோர்த்த தங்கச் செயின், கறுப்பு உள்ளாடை, லோ ஹிப்பில் சேலை, என்ற அத்தனை விஷயங்கள் கவனித்தற்காக மானசீகமாக மலர்விழியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

அனாமிகா இந்த ஊரில்தான் இருக்கிறாள் என்பதோ, இதோ இருபதடி தள்ளி சூயிங்கம் மென்றபடி பில்லுக்கு கிரெடிட் கார்டை நீட்டுகிறாள் என்பதோ என்னால் இன்னும் நம்ப முடியவில்லை.

கும்பகோணத்தற்கு போன மாதம் போயிருந்த போது இவள் அண்ணன்

சங்கரனைச் சந்தித்தபோது, "அனாமிகாவைப் பத்தி ஒரு தகவலும் தெரியலிங்க சார், அவ எங்க இருக்கான்னே தெரியலை. ஒரு வேளை இருக்காளோ, இல்லை விபத்து கிபத்துல செத்துதான் போய்ட்டாளோ" என்று அலுப்பாகப் பேசினான்.

"ஏன் அப்படியெல்லாம் சொல்றீங்க?"

"பின்னே என்ன சார்? இந்த பத்து வருஷத்தில எங்க குடும்பத்தில நல்லதும் கெட்டதுமா எவ்வளவு நடந்துடுச்சி. எதுக்காவது வந்தாளா? முதல்ல அப்பா செத்தாரு. பேப்பர்ல அத போட்டோ போட்டு விளம்பரம் கொடுத்தோம். வரலை. என் தம்பிக்கு கல்யாணம் நடந்துச்சி. அம்மா செத்துப் போனாங்க. எதுக்கும் வரலையே."

"இதெல்லாம் அந்தப் பொண்ணுக்குத் தெரியாமலேயேப் போயிருக்கலாம் இல்லையா?"

"அதான் சார் எங்களுக்கும் புரியலை. கோவமா இருக்க வேண்டியது நாங்கதான். என்ன தான் சினிமால காதலை ரசிச்சாலும் வாழ்க்கைன்னு வர்றப்ப அவ்வளவு சுலபமா ஏத்துக்க முடியாது சார். எங்கப்பா, அம்மா ரெண்டு பேருமே அவளோட காதலை எதிர்த்தாங்க. லெட்டர் எழுதி வெச்சிட்டு அந்தப் பையனோடவே ஓடிப் போய்ட்டா, எல்லாரோட கோபமும் தணிஞ்சதும் புருஷனோட ஆசீர்வாதம் வாங்க வருவான்னு எதிர்பார்த்தோம். வரவே இல்லை. எவ்வளவு கல் நெஞ்சம் பாருங்க?'

"உங்க ஆதங்கம் புரியுது. கவலைப்படாதீங்க. கூடிய சீக்கிரம் உங்க சிஸ்டர் பத்தி நல்ல தகவல் உங்களுக்குக் கிடைக்கும்."

ஒரு ஆறுதலுக்காக இவள் அண்ணனிடம் சொல்லி விட்டு வந்த நானே அவளை இப்படி இங்கே சந்திப்பேன் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

ஆக... உயிரோடுதான் இருக்கிறாள். தங்கச் செயின், மோதிரம், விலை உயர்ந்த செருப்புகள், கிரெடிட் கார்டு இதெல்லாம் பார்க்கும்போது செழிப்பாகவும் இருக்கிறாள் என்பது புரிகிறது.

எங்கே தங்கி இருக்கிறாள்? எத்தனைக் குழந்தைகள்? ஏன் தன் குடும்பத்தைத் தொடர்பே கொள்ளாமல் இருந்து விட்டாள்?

இப்போது இந்தக் கேள்விகளுக்கு எனக்கு விடைகள் தேவை.

அவளிடம் நேராகச் சென்று கேட்பதில் எனக்குத் தயக்கம் இருக்கிறது. காரணம், என்னை அவளுக்கு அறிமுகம் கிடையாது. நான்தான் அவளை பலமுறைப் பார்த்திருக்கிறேன்.

அப்போது கும்பகோணத்தில் அவள் வீட்டுக்கு மூன்றாவது ஃபிளாட் பில்டிங்கில் இரண்டாவது மாடியில் என் வீடு. என் அறையின் ஜன்னலைத் திறந்தால் அவள் வீட்டின் வாசல் தெரியும்.

"மூணாவது வீட்டுல இருக்குமே அனாமிகான்னு ஒரு பொண்ணுஅது

லெட்டர் எழுதி வெச்சுட்டு வீட்டை விட்டு ஓடிப் போயிடுச்சாம்“ என்று என் அம்மா என் அப்பாவிடம் சொன்னபோது, என் மனம் துக்கப்பட்டது உண்மை.

அனாமிகா ஓடிப் போன பிறகுதான் அவள் அண்ணனுடன் டென்னிஸ் கிளப்பில் அறிமுகம். அப்புறம் எனக்கு சென்னையில் வேலை கிடைத்தது. குடும்பத்துடன் இங்கே வந்தாயிற்று.

எனக்குத் தெரிந்த, என்னைத் தெரியாத அந்த அனாமிகாவிடம் என்னவென்று சொல்லி அறிமுகப்படுத்தி கொண்டு எப்படி கேட்பது என்ற எனக்குள் பலவிதமாக ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்க.. அனாமிகா தன் பொருள்கள் போட்டுத் தரப்பட்ட இரண்டு கேரி பேகுடன் வாசலை நோக்கி நடக்க... நான் அவசரமாக பில்லிங் பகுதி வந்து எனது கூடையின் பொருள்களைக் கவிழ்த்து பார்வையை மட்டும் அவள் முதுகை விட்டு விலக்காமலிருந்தேன்.

தவற விட்டு விட்டால் மறுபடி அவளைச் சந்திப்பேனா, மாட்டேனோ?

அவசரமாகப் பணம் கொடுத்து பாக்கி வாங்கி, பொருள்கள் கொண்ட பையுடன் ஓட்ட நடையால் ஹெல்மெட் பெற்றுக் கொண்டு வெளியே வந்தேன்.

பிஸியான அந்த சாலையின் பிளாட்பாரத்தின் தூரத்தில் அவள் போய்க் கொண்டிருக்க, நான் அவசர நடையாய் அவளைத் தொடர்ந்தேன்.

எப்படி அறிமுகப்படுத்திக் கொள்வதென்பதில் இன்னும் ஒரு தீர்மானத்திற்கு வராத காரணத்தால் அவளைத் தொடர்ந்து செல்வதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை.

ச்சை! பத்து வருடத்திற்கு முன்பும் பாழாய்ப் போன தயக்கம். இப்போதும் தயக்கம்.

அனாமிகா இப்போது ஒரு கடைக்குள் கதவு தள்ளி நுழைந்து மறைந்தாள். நானும் நுழைய முற்பட்டு தடுமாறி நின்றேன்.

அது பெண்களுக்கு மட்டுமான பியூட்டி பார்லர். பேசவோ, அறிமுகப்படுத்திக் கொள்ளவோ சரியான இடமில்லை.

நான் அருகில் இருந்த பெட்டிக்கடைக்குச் சென்று ஒரு சிகரெட் வாங்கி பற்றவைத்தபடி காத்திருந்தேன்.

இருபது நிமிடங்களுக்குப் பிறகு அவள் அந்த அழகு நிலையத்திலிருந்து வெளிப்பட்டாள். நான் அவளை நோக்கி நடந்தேன்.

நான் அவளை மிகவும் நெருங்கி தொண்டையையும் சரி செய்து கொண்ட நேரத்தில், பிளாட்பார ஓரத்தில் தேங்கி நின்ற ஒரு ஆட்டோவில் சட்டென்று அவள் ஏறி விட ஆட்டோ புறப்பட்டது.

ஸ்கூட்டரை கிளப்பி சாலையில் கலந்து விரட்டி மூன்று சிக்னல்களுக்குப் பிறகு அந்த ஆட்டோவைக் கண்டு விட்டேன்.

நிதானமாக ஆட்டோவைத் தொடர்ந்தேன்.

அரை மணி நேரப் பயணத்திற்குப் பிறகு ஆட்டோ அசோக் நகரில் ஒரு உள்நகரின் கிராஸ் தெருவில் குறிப்பிட்ட வீட்டின் முன்பாக நிற்க, நான் தூரத்திலேயே ஸ்கூட்டரை நிறுத்தினேன்.

அனாமிகா ஆட்டோவுக்குப் பணம் கொடுத்ததும் நேராக வீட்டின் வாசலுக்குச் சென்று சாவி போட்டுத் திறந்து உள்ளே சென்றாள். அவள் விளக்குகளைப் போட்டது ஜன்னல்களில் தெரிய நான் தைரியப்படுத்திக் கொண்டு அவள் வீட்டை நெருங்கினேன்.

அழைப்பு மணியை அழுத்தினேன். உள்ளே குயில் சங்கீதம் பாடியது.

கொலுசுக் கால்கள் சமீபித்தன. கதவு திறக்கப்பட்டது.

என்னைப் பார்த்ததும் புன்னகைத்தாள்.

“வாங்க, உள்ளே வாங்க" என்றாள்.

அப்போதே அவளும் என்னைப் பார்த்திருப்பாளோ, இன்னும் நினைவில் வைத்திருப்பது ஆச்சரியம்தான். நான் பிரமிப்புடன் உள்ளே சென்றேன்.

“உட்காருங்க சார். ஒரு வழியா விடாம என்னை ஃபாலோ பண்ணி வீட்டுக்கே வந்துட்டீங்க. அப்புறம்?’ புன்னகையோடு எதிரே அமர்ந்து “எனக்கு ஒண்ணும் பிரச்சினையில்லை. ஆனா நான் கொஞ்சம் காஸ்ட்லி! பரவாயில்லையா? ஃபைவ் தவுஸண்ட் ரூபிஸ் வைச்சிருக்கீங்களா?" என்றாள் அனாமிகா.

அதிர்ந்து போன எனக்கு அவள் அண்ணனின் கேள்விகளுக்கு விடை புரிந்த மாதிரி இருந்தது.

--------------------------------

## 12

# தேடல்

நடேசன் ஆழ்ந்த சிந்தனையுடன் மடக்கிக் கட்டின கைலியுடன் மொட்டை மாடியில் மெதுவாக உலாத்தினான்.

வீட்டு வாசலில் ரிக்ஷாவில் ஏறும் முன் ரமா, “டாடி... நான் ஸ்கூலுக்குப் போய்ட்டு வர்றன். பை!" என்றாள்.

“சரி! பை பை!" என்று கையசைத்தான். சிகரெட்டைப் பற்ற வைத்து மீண்டும் உலாத்தினான்.

காபியோடு படியேறி வந்த மாதவி.

“இது மூணாவது காபி. எப்ப குளிச்சி, எப்ப டிபன் சாப்பிடப் போறீங்க...? என்றாள்.

“என் பிரச்சனை புரியாமப் பேசாதே. என் மேல எவ்வளவு நம்பிக்கை இருந்தா சீதாராமன் இந்தப் பொறுப்பை ஒப்படைச்சிருப்பான்!"

“எதாச்சும் யோசனை தோணிச்சா இல்லையா?"

“இல்லையே மாதவி. ரொம்ப டென்ஷனா இருக்கு எனக்கு" என்று காபியைப் பருகினாள்.

“சீதாராமன் எப்போ வர்றதா சொல்லிருக்கார்?"

“நாளைக்குக் காலைல ஒம்போது மணிக்கு டாண்ணு வந்து நின்னிடுவான். அவனுக்கு என்ன பதில் சொல்றது? என்னைக் கேவலமா நினைக்கமாட்டான்?"

“அவர் சொன்னாருன்னு நீங்க ஏன் ஒத்துக்கிட்டீங்க?’

“முடியுங்கற நம்பிக்கைலை ஒத்துக்கிட்டேன்."

“சரி. நான் கீழேப் போறேன். நிறைய வேலை இருக்கு. சீக்கிரம் வந்து குளிங்க." என்று டபரா செட்டுடன் மாதவி சென்றாள்.

மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்து யோசிக்க ஆரம்பித்தான், நடேசன்.

வேலைக்காரி செண்பகம் பக்கெட் நிறைய துவைத்த துணிகளோடு வந்து, உதறி உதறி கொடியில் போட்டு கிளிப் வைத்துவிட்டு, “அய்யா!" என்றாள், தயக்கத்துடன்

“என்ன?"

“நீங்க பல தடவை புத்தி சொல்லியும் அந்த மனுஷன் கேக்கறதா இல்லீங்க. அந்தச் செறுக்கி வீடே கதின்னு கெடக்கறான்யா."

“இத பாரும்மா. நானும் எத்தனை தடவைதான் அவனுக்கு அட்வைஸ் பண்றது? சில ஜென்மங்களைத் திருத்தவே முடியாது. இனிமே உன் புருஷன்கிட்ட என்னைப் பேசச் சொல்லாதே!"

“அது இல்லிங்கய்யா. அவ வூட்டுக்குப் போவாதேன்னு சொன்னா அந்தாளு கேக்கப் போறதில்லைன்னு நல்லாப் புரிஞ்சிப் போச்சுய்யா. அவளை வெட்டி விடறதா இல்லை. மூணு கொழந்தைகளை வெச்சிக்கிட்டு அல்லாடுறேன்யா. எவகூடவோ இருந்துட்டுப் போவட்டும். தாலி கட்டுன பாவத்துக்கு செலவுக்கு பணம் கொடுக்கச் சொல்லுங்கய்யா..."

“இத பாரு! நான் வேற ஒரு டென்ஷன்ல இருக்கேன். இப்ப உன் குடும்பப் பிரச்சனைக்கு பஞ்சாயத்து பண்ணிட்டிருக்க நேரமில்லை. ரெண்டு நாள் கழிச்சி அவனை வந்து பார்க்கச் சொல்லு புரிஞ்சுதா?"

சிகரெட்டை மிதித்துவிட்டுக் கீழே சென்றான்.

நடேசன் குளித்து, டிபன் சாப்பிட்டு மற்றொரு காபியை ரசித்துக்

குடித்தபடி ஒரு வார இதழைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

“குட் மார்னிங் நடேசன்"

தலை முழுக்க நரைத்த ஏகாம்பரம். பக்கத்திலுள்ள காலனியில் குடியிருப்பவர். தினசரி ஓசிப் பேப்பருக்காகப் புன்னகையோடு குட்மார்னிங் சொல்லிக் கொண்டு வந்து விடுவார்.

“வாங்க சார்"

“என்ன சார் விசேஷம் பேப்பர்ல...?"

அமர்ந்து உரிமையுடன் புரட்டினார்.

“நான் இன்னும் பேப்பர் படிக்கலை சார்"

“ஏன்? அது சரி, உங்க கண்ணு ஏன் இப்படி சிவந்திருக்கு?"

“ராத்திரி சரியாத் தூக்கமில்லை."

“உடம்பு சரியில்லையா?"

“இல்லை. ஒரு யோசனையில் இருந்தேன்."

“நேத்து ராத்திரி நான் கூட ஒரு யோசனைல ரொம்ப நேரம் தூங்கலை."

“உங்களுக்கு என்ன யோசனை?"

“எங்க காலனில நேத்து ராத்திரி ஒரு திருடன் வந்துட்டான்."

“அப்புறம்?"

“அவனைக் கையும் களவுமாப் பிடிச்சிட்டாங்க. சின்ன வயசுப் பசங்க சேர்ந்து அவனை உதை பின்னி எடுத்துட்டாங்க. சத்தம் கேட்டு நான் பால்கனிலேர்ந்து பார்த்தேன். எட்டு பேர் சேர்ந்து அவனைப் பந்தாடறாங்க. அவன் ரத்த காயத்தோட பதர்றான். நான் ஓடிப்போயி எல்லாரையும் விலக்கினேன். முறையா போலீஸ் ஸ்டேஷன்ல ஒப்படைக்கிற பொறுப்பை நான் எடுத்துக்கிட்டேன். ஒரு துண்டுல அவன் கையைக் கட்டி ஒரு ஆட்டோல ஏத்தி கூட்டிட்டுப் போனேன்."

“போலீஸ்ல ஒப்படைச்சிட்டிங்களா?"

“அதான் இல்லை."

“ஏன்?"

“அவனுக்குப் பதினேழு பதினெட்டு வயசுகூட இருக்காது. ஆட்டோல போனப்போ பேச்சுக் கொடுத்தேன். ப்ளஸ் டூ படிச்சிருக்கான். மேல படிக்க வசதியில்லை. வேலையும் கிடைக்கலை. இதான் முதல் முயற்சியா திருடப் பார்த்திருக்கான். மாட்டிகிட்டான். ‘என்னைப் போலீஸ்ல ஒப்படைக்காதீங்க சார். இனிமே சத்தியமா திருடமாட்டேன்’னு கெஞ்சினான். பாவமா இருந்திச்சி. சரின்னு அவுத்து விட்டு போகச் சொல்லிட்டேன், காலனிக்கு வந்து போலீஸ்ல

ஒப்படைச்சிட்டதாப் பொய் சொல்லிட்டேன்."

“உங்க இரக்கத்தை சாதகமாக்கி அவன் தப்பிச்சிட்டான் சார். ஒரு திருடன் செய்யற சத்தியத்தைப் போயி நம்பியிருக்கீங்களே..."

“இதே மாதிரிதான் என் வைஃபும் சொன்னா. நான் செஞ்சது சரியா இல்லை அசட்டுத் தனமான்னு ராத்திரி பூரா யோசிச்சேன். சட்டத்தில் ‘பெனஃபிட் ஆஃப் தி டவுட்’ன்னு ஒண்ணு இருக்கு சார். ஒருவேளை அவன் கெஞ்சலும், சத்தியமும் உண்மையா இருந்தா? அப்படி நினைச்சி மனசை சமாதானப்படுத்திக்கிட்டேன்."

“எந்தக் காலத்தில சார் இருக்கிங்க நீங்க? எனக்கென்னவோ நீங்க ஏமாந்துட்டிங்கன்னுதான் தோணுது" என்றான், நடேசன்.

ஏகாம்பரம் பெருமூச்சு விட்டார்.

அவர் போன கொஞ்ச நேரத்தில் ரிக்ஷா வந்து யூனிஃபார்ம் கலையாமல் ரமா இறங்கி ஓடி வந்தாள்.

நெற்றியைத் தட்டி யோசித்தபடி இருந்த நடேசனிடம் வந்து, “டாடி, இன்னிக்கு எங்களுக்கு ஸ்கூல் லீவு" என்றாள்.

“ஏம்மா?"

“ஏழாம் கிளாஸ் ‘சி’ ல படிக்கற மரியாங்கிற கர்ள் புவனா டீச்சரை காம்ப்பஸால வெறித்தனமா குத்திட்டா. ரத்தம் ரத்தமா கொட்டி ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டு போய்ட்டாங்க. போலீஸ் எல்லாம் வந்து விசாரிக்குது. அதனால லீவு விட்டுட்டாங்க."

“அந்தப் பொண்ணு என்ன மென்ட்டலா? எதுக்கு டீச்சரைக் குத்தினா?"

“இல்லைப்பா. சமீபத்தில மரியாவோட அப்பாவும், அம்மாவும் டைவர்ஸ் பண்ணி பிரிஞ்சிட்டாங்களாம். அதில இவளுக்கு அம்மா மேல கோவமாம். டீச்சர் அம்மாவை மதிக்கணும்னு ஏதோ அட்வைஸ் செஞ்சதுக்கு இவளுக்கு வெறி வந்து ஏழு தடவை காம்பஸால குத்திட்டா. போலீஸ்காரங்க கேக்கறப்பா..."

“சரி, சரி போதும். டிரெஸ் மாத்திட்டுப் போய் ஏதாச்சும் படி. மிச்சக் கதை எல்லாம் உங்கம்மா கிட்ட சொல்லிக்க. டாடியை டிஸ்டர்ப் பண்ணாதே!" என்றான் நடேசன்.

“இருங்கப்பா. நான் ஃபுல்லா சொல்லிடறேன்."

“நான் ஏற்கனவே டென்ஷனா இருக்கேன்னு சொல்றேனில்ல..?"

நடேசன் அதட்டியதும் ரமா மிரண்டு விலகினாள்.

மாலை ஐந்து மணிக்கு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்திருந்தான், நடேசன்.

மாதவி அருகில் வந்து, “சீதாராமன் போன் செஞ்சாருங்க..." என்றாள்

“எப்போ?"

“நீங்க பால் வாங்கப் போயிருந்திங்களே, அப்போ?"

“ஏதாவது உளறித் தொலைசியா?"

“நான் என்ன உளறப் போறேன்? என்கிட்ட ஏன் கோபப்படறீங்க?"

“சரி, என்ன சொன்னான் அவன்?"

“நாளைக்கு ஒம்போது மணிக்கு வர்றதா சொல்லி இருந்தாரில்லையா, எட்டு மணிக்கே வர்றாராம்."

“கிழிஞ்சது. வந்தா என்னடி பதில் சொல்றது?"

“என்னைக் கேட்டா?’

“என் மரியாதை போயிடும் மாதவி?"

“இதை ஒத்துக்கறதுக்கு முன்னாடி யோசிச்சிருக்கணும்“ என்று நொடித்துவிட்டுப் போனாள் மாதவி.

தரையைக் கூட்டின செண்பகம் அருகில் வர, இரண்டு கால்களையும் உயர்த்தி நாற்காலி மேல் வைத்துக் கொண்டான்.

“அய்யா!"

“ம்...?"

“நீங்க அவருக்குப் புத்தி சொல்ல வேண்டியதில்லை"

“ஏன் திருந்திட்டானா?"

“இல்லை. என் பிரச்சனைக்கு நானே ஒரு முடிவு எடுத்துட்டேன்."

“என்ன செஞ்சே?’

“அந்த சரோஜாவைக் கொண்டாந்து என் வீட்லயே சேர்த்துக்கிட்டேன். அவளுக்கும் சேர்த்து பொங்கிப் போடறேன்று சொல்லிட்டேன். சக்காளத்தியோட அனுசரணையாய்ப் போயிடறதுன்னு முடிவு பண்ணிட்டேன்."

“எப்படி மனசு கேக்கும்?"

“என் மனசைப் பார்த்தா, பிஞ்சுங்க வயிறு காயுதேய்யா. என் மனசைவிட பசங்க வயிறு முக்கியமில்லையா?"

“சரி, ஏதோ பிரச்சனை தீர்ந்தா சரி"

நடேசன் தன் சொந்த யோசனையில் மீண்டும் இறங்கினான்.

காலை எட்டு மணிக்கு சீதாராமன் வந்ததும் அவனை மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்று அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான் நடேசன்.

“சீதாராமா, நீ சப்-எடிட்டரா வேலை பார்க்கற பத்திரிகைல சிறுகதை எழுதச் சொல்லி வாய்ப்புக் கொடுத்தது உன் பெருந்தன்மை. ஜோக்கும், துணுக்கும் எழுதிட்டிருக்கிற நான் ஜம்பமா எழுதித் தர்றேன்னு ஒப்புக்கிட்டேன். ஆனா பாரு, ரெண்டு நாளா நானும் மண்டையைப் போட்டு உடைச்சிக்கறேன். கதை எழுதறதுக்கு ஒரு சின்ன தீம் கிடைக்கமாட்டேங்குது. ஐ ம் ஸாரி. எனக்குக் கதை கிடைக்கலை" என்றான், நடேசன்.

-------------------------------

13

# எனக்குள் எதிரி!

ஜெயந்தன் சிந்தனையில் இருந்தான். விரல்களுக்கிடையில் சிகரெட் புகை காற்று இல்லாததால் ஒற்றை நூலாகி உயர்ந்து கலைந்து கொண்டிருந்தது.

தொலைபேசி ஒலிக்க அது அவனது கவனத்தைக் கலைக்கவில்லை தொலைபேசி தொடர்ந்து அழைக்க கிரைண்டரில் வழித்த மாவுக்கையை உயர்த்திப் பிடித்தபடி வந்த அம்மா, இடது கையால் ரிசீவரை எடுத்து, “ஹலோ, சொல்லுங்க... நான் அவன் அம்மாதான் பேசறேன்... அப்படியா? சரி, ரொம்ப சந்தோஷம் ஸண்டே அவனுக்கு செ கரியப்படுமான்னு கேட்டு நானே போன் பண்றேன்."

வைத்துவிட்டு அவனை பார்த்தாள் அம்மா.

“ஆர்த்தியோட அம்மா பேசினாங்கப்பா? ஆர்த்தியோட மாமா வந்து உன்னைப் பார்த்துப் பேசணுமாம். உனக்கு வர்ற ஞாயித்துகிழமை செ கரியப்படுமான்னு கேக்கறாங்க.

இங்க பாரும்மா... நானே டென்ஷன்ல இருக்கேன். என்னைத் தொந்தரவு பண்ணாதே. நீ போட்டு அரிச்சியேன்னுதான் உன்கூட பொண்ணு பார்க்க வந்தேன். இந்தக் கல்யாணத்தில் அவசரம் காட்டாதே!"

“அதெப்படி? நமக்கும் பிடிச்சிருக்கு. அவங்களுக்கும் பிடிச்சிருக்கு. நிச்சயம் பண்ண வேண்டிய சமயத்துல அவசரம் காட்டாதேன்னா எப்படி?"

“அம்மா, என் பிரச்சினை எனக்கு ஆறேழு மாசம் போகட்டுமே.."

“அப்படி என்ன பிரச்சினை உனக்கு?"

“சொன்னாலும் உனக்குப் புரியாது."

“அதெல்லாம் எனக்கு தெரியாது. ஸண்டே ஈவினிங் நீ வீட்டுல இருந்தாகணும். நான் போன் பண்ணிச் சொல்லிடறேன்."

ஜெயந்தனின் தோளைத் தொட்டு, “எக்ஸ்யூஸ்மீ... எனக்கொரு தாலி வாங்கித் தருவியா," என்று அந்தப் பெண் கெஞ்சலாக கேட்டதும், ஜெயந்தன் திடுக்கிட்டுப் பதிலுக்கு வார்த்தை தேடினான்.

“தப்பா எடுத்துக்காதீங்க தம்பி என் பொண்ணுதான் இங்க ட்ரீட்மெண்டுட்டுக்காக..." என்றார் அவளருகிலிருந்த பெரியவர்.

“பரவாயில்லை" என்றவன். அடுத்த நாற்காலிக்கு மாறி உட்கார்ந்து, டீப்பாயில் கிடந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டான்.

“ஜெயந்தன் யாரு?" என்றாள் வரவேற்பாளினி. காதுகளில் மகா வளையங்கள் ஊஞ்சலாட.

“நான்தான்..."

“டாக்டர் கூப்பிடறாரு. போங்க சார்" மீண்டும் ஊஞ்சல்.

அடுத்தவர் கால் மிதிக்காமல் அவசரமாக நடந்து, டாக்டர் கார்த்திகேயனின் பெயர் தாங்கிய கதவு தள்ளி உள்ளே வந்தான்.

மேஜைக்கு மட்டும் விளக்கு. டாக்டரின் தாடியில் நரை. சுவர்களில் ஆழமான ஆனால் புரியாத சித்திரங்கள்.

ஜெயந்தன் தயங்கி நிற்க டாக்டரின் விழிகள் புன்னகைத்தன. தாடிக்குள் உதடுகள் அசைவது தெரியவில்லை. ஆனால் ஓசை வந்தது. “யெஸ்" என்று.

அவன் உட்கார்ந்தான்.

“என் பேரு ஜெயந்தன்.

என் பிரச்சனை இதுதான் டாக்டர்... முன்னப்பின்ன அறிமுகமே இல்லாத சிலபேரை பார்க்கிறப்போ, இந்த ஆளை குத்திக் கொல்லலாமான்னு எனக்குள் ஒரு கில்லிங் இன்ஸ்டிங்ட் வருது டாக்டர். ஒரு கொலை இச்சை! ஏன் வெறின்னே கூட சொல்லலாம்..."

“இருங்க, நீங்களே வார்த்தைப் படுத்தாதீங்க. சமீபத்துல அந்த மாதிரி எண்ணம் உங்களுக்கு எப்ப வந்துச்சி? அந்த சமயத்துல நீங்க என்ன உணர்ந்தீங்கங்கிறதை மட்டும் எக்ஸ்ஸாக்டா சொல்லுங்க."

“நேத்துக்கூட டாக்டர், என்னோட ஸ்கூட்டருக்கு பங்க்ல பெட்ரோல் போட்டுட்டு இருந்தேன் டாக்டர். எனக்கு பக்கத்துல ஒரு கார். அந்த கார்ல இருந்தவனை நான் முன்னபின்ன பார்த்ததே கிடையாது. திடீர்னு அவன் சட்டையைப் பிடிச்சி இழுத்துப்போட்டு எதாவது ஒரு ஆயுதத்தால அவன் மண்டையைப் பொளக்கலாமான்னு தோணிச்சி டாக்டர்."

“இந்த மாதிரி எத்தனை நாளா இருக்கு?"

“ஒரு வருஷமாவே இருக்கு டாக்டர். முந்தியெல்லாம் எப்பயவாது ஒரு முறை வரும். இப்பல்லாம் அடிக்கடி வருது..."

“எந்த மாதரி நபர்களைப் பார்த்தா உங்களுக்கு அந்த மாதிரி தோணுது? குறிப்பாக ஆண்கள்தானா?"

“இல்லை டாக்டர். பெண்கள் கூட சமயத்துல சினிமால பார்க்கிற கதாபாத்திரங்கள் மேல கூட அப்படி ஒரு வெறி வருது..."

“ஐ ஸீ... நீங்க கொல்ல நினைக்கிற நபர்கள் எந்த ஏஜ் குரூப்ல இருக்காங்க?"

“அன்னிக்கு பனகல் பார்க்கல கைத்தடி ஊனிக்கிட்டு எழுபது வயசு தாத்தா வந்துட்டு இருந்தாரு. அவரோட கைத்தடியையே பிடுங்கி அவர் மண்டைல அடிக்கணும்னு தோணிச்சி. இவ்வளவு ஏன்? என்னோட சிஸ்டருக்குப் பொறந்த குழந்தையைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போனேன். பக்கத்து பெட்ல டோக்கன் நெம்பர் கட்டின ஒரு பிஞ்சுக் குழந்தையை அப்பதான் கொண்டாந்து படுக்க வெச்சிருந்தாங்க. நியூ பார்ன் பேபி. அந்தக் குழந்தை தலையில டார்ச் லைட்டால அடிச்சிக் கொன்னுட்டா என்னன்னு தோணிச்சி டாக்டர்..."

ஜெயந்தன் குற்றவுணர்வோடு தலை குனிந்தான். உள்ளங்கை ரேகையில் விரலை ஓட்டினான்.

“இந்த மாதிரி ‘தாட்’ என் மனசுல வந்திச்சின்னா நாலு நாளைக்க அப்செட் ஆயிடுறேன் டாக்டர். ஏன் டாக்டர் எனக்கு இப்படித் தோணுது? வாட்ஸ் ராங் வித் மீ?"

ஜெயந்தனின் தொண்டை அடைத்தது. வார்த்தைகள் பிசிறின.

“கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருங்க. நீங்க என்ன வேலை பார்க்கிறீங்க.?"

“பில்டிங் என்ஜினியர் டாக்டர்."

“ஐஸீ... சமீபத்துல எதாவது விபத்தை நீங்க கண்ணால பார்த்தீங்களா? இல்ல. உங்களுக்கே ஏதாவது விபத்து ஏற்பட்டிச்சா?"

“விபத்துன்னு ஒண்ணும் பெரிசா இல்ல டாக்டர். கதவுல சுண்டுவிரலை நசுக்கிக்கிட்டதை ஒரு விபத்துன்னு சொல்ல முடியாதுன்னு நினைக்கிறேன்.

அவனது நகைச்சுவையை டாக்டர் ரசிக்கவில்லை.

“ம்ம்... நீங்க என்ன மாதிரி படங்கள் பார்ப்பீங்க?"

“ஃபுல் அன் ஃபுல் காமெடி பிக்சர்ஸ்தான் எனக்குப் பிடிக்கும் டாக்டர். படிக்கிற புக்ஸ் கூட காமெடி புக்ஸ்தான்..."

“முதன் முதலா எந்த நபரைப் பார்த்தப்போ உங்களுக்கு ‘அந்த மாதிரி’ எண்ணம் வந்துச்சி. ஞாபகம் இருக்கா?"

“நல்லா ஞாபகம் இருக்கு டாக்டர். நான் சண்டிகர் போயிருந்தேன் டாக்டர். அங்க ‘ரோஸ் கார்டன்’னு ஒரு கார்டன் இருக்கு. அங்க சுத்திப் பார்த்துட்டு இருந்தேன். அப்ப ஒரு ஜோடி கேமிரா கொடுத்து,

அவங்களை ஜோடியா போட்டோ எடுக்கச் சொன்னாங்க. அவங்களை கேமிரா வழியா பார்த்தப்போ, ‘அந்த கேமிராவாலயே அவனை அடிச்சிக் கொல்லலாமா’ன்னு தோணிச்சி டாக்டர். அதான் முதல் தடவை...’

“அந்த மாதிரி எண்ணம் வர்றப்போ உங்களால கண்ட்ரோல் பண்ண முடியுது இல்லையா? ஒரு தடவையும் செயல்ல இறங்கினது இல்லைதானே?"

“இதுவரைக்கும் இல்லை. ஆனா இன்னிக்கு சிந்தனையில் இருக்கிற இந்த வெறி திடீர்ன்னு செயலா மாறிட்டா? பயமா இருக்கு டாக்டர். ஹெல்ப் மீ. எனக்குள்ளேயே இருக்கிற அந்த எதிரி யாரு? அவனைத் துரத்துங்க ப்ளீஸ்.."

“பயப்படாதீங்க. சரி பண்ணிடலாம். இது ஒரு வகை மெண்ட்டல் இம்பாலன்ஸ்! மனசு இருக்கே அது ஒரு அபூர்வமான, புதிரான விஷயம். சின்ன குழந்தைங்ககிட்ட ஒரு காரியத்தை செய்யாதேன்னு சொன்னாதான் அவங்க திரும்பத் திரும்ப அதைச் செய்வாங்க. அந்த மாதிரி முதல் முறையா தேவை இல்லாம ஒரு நெகட்டிவ் தாட். உங்க மனசுல வந்துச்சி. அதுக்கு உடனே நீங்க, ‘ஏன் இப்படி ஒரு எண்ணம் வந்துச்சி’னு கவலைப்பட்டு, அந்த எண்ணத்துக்க நீங்க எதிர்ப்பு தெரிவிச்சிங்க இல்லையா? அதனால அந்த எண்ணம் அடம் பிடிச்சி மறுபடி மறுபடி வருது. இது ஒரு வகையான அப்ஸெஸன்!"

பிரிஸ்கிரிப்ஷன் பேடை தன்னருகில் இழுத்துக் கொண்டார். பென் ஸ்டாண்டில் இருந்த பேனாவை உருவிக் கொண்டார் டாக்டர்.

“நீங்க சொன்னதுல ஒரு விஷயம் காமனா இருக்கு. யாரா இருந்தாலும் மண்டையில தாக்கணும்னு தாட் வருது. அதனால நான் மறுபடி கேக்கிறேன். யாராவது உருட்டுக் கட்டையால யாரையாவது மண்டைல தாக்கினதை நேர்ல பார்த்திருக்கிங்களா? நல்லா யோசிச்சி சொல்லுங்க..."

“அப்படி ஞாபகம் இல்லையே டாக்டர்."

“ஓ.கோ. நான் உங்களை ஜென்ரலா ஒரு செக்கப் பண்றேன். அதுக்கப்புறம் நான் உங்களுக்கு சில மனப் பயிற்சிகள் கொடுக்கறேன். அதைத் தொடர்ந்து செஞ்சிட்டு வாங்க. சில டாப்லெட்ஸ் எழுதித் தர்றேன்..."

டாக்டர் எழுதத் துவங்கினார்.

‘எவ்வளவு அடர்த்தியான மீசை’ ஆர்த்தியின் விரல் ஜெயந்தனின் புகைப்படத்தின் மீசையைத் தடவியது.

“அக்கா... மாமா வந்திருக்காரு..."

அழைத்துக் கொண்டு வந்த அனிதா, ஆர்த்தியின் கையிலிருந்த புகைப்படத்தை பார்த்தாள்.

“அய்... அத்தானோட படத்தை சைட் அடிச்சிட்டு இருக்கியா?"

“ஏய் சும்மா இரு வாலு!"

அவளை அதட்டியபடி புத்தகத்தினுள் புகைப்படத்தை வைத்துவிட்டு ஹாலுக்கு வந்தாள் ஆர்த்தி.

“வாங்க மாமா..."

என்றபடி அம்மாவின் அருகில் வந்து நின்று கொண்டாள் ஆர்த்தி.

“ஏன் அக்கா, மாப்பிள்ளை வீட்டில இருந்து வந்து ஆர்த்தியைப் பார்த்தாங்க. அவங்களுக்கு பிடிச்சிப் போச்சி. உங்க எல்லோருக்கும் மாப்பிள்ளையைப் பிடிச்சி போச்சி. அப்புறம் நான் வேற எதுக்குப் போய் மாப்பிள்ளையைப் பார்க்கணும்னு பிடிவாதம் பிடிக்கிறே?" என்றார் மாமா.

“நீ இல்லாம இந்த வீட்டுல எதாவது காரியம் நடந்திருக்கா? அவங்க பொண்ணு பார்க்க வந்தப்ப நீ ஊர்ல இல்ல. அதனாலதான் நீ ஒரு தடவை மாப்பிள்ளையைப் பார்த்துட்டு வந்துடுனு சொல்றேன். சரி சீக்கிரம் புறப்படு. ராகுகாலத்துக்குள்ளே நீ மாப்பிள்ளை வீட்ல இருக்கணும்". என்றாள் அம்மா.

அவர் எழுந்து கொண்ட போது ஓடி வந்தாள் அனிதா.

“மாமா அக்கா புக்குக்குள்ள மாப்பிள்ளையோட போட்டோ மறைச்சிவெச்சிருக்கா. பாருங்க."

“எங்கே கொண்டா! மாப்பிள்ளையை நேர்ல பார்க்கறதுக்கு முன்னாடி ஒரு தடவை போட்டோவ பார்த்துடறேன்..."

அனிதாவிடமிருந்து புகைப்படத்தை வாங்கியபடி,

“எனக்கென்னமோ நான் ஒரு தடவை போய் பார்க்கிறது தேவையான்னுதான் தோணுது" என்றார் மாமா.

“என்ன நீ புரியாம பேசிட்டு இருக்கே, நீ ஒரு சைக்யாட்ரிஸ்ட்டு ஆச்சே. நீ ஒருத்தரைப் பார்த்து பத்து நிமிஷம் பேசினாலே அவங்க மனப்போக்கு எப்படின்னு கரெக்டா கணிச்சி சொல்லிடுவியேன்னுதான் உன்னைப் போகச் சொல்றேன்" என்றாள் அம்மா.

“அதுவும் சரிதான்" என்று போட்டோவைப் பார்த்த மாமா கார்த்திகேயன் சட்டென்று அமர்ந்துவிட்டார். பெருமூச்சு விட்டார்.

“ஜெயந்தன்தானே இவன் பேரு? இவனை எனக்குத் தெரியும். இவன் என்னோட பேஷண்ட்டுக்கா. இவனுக்கு மனசுல ஒரு பிரச்சினை இருக்குக்கா. தொழில் ரீதியாப் பார்த்தா இதை நான் உங்ககிட்ட சொல்றது தர்மம் இல்லை. ஆனா சொல்லாம இருக்கிறது இந்தக் குடும்பத்துக்கு நான் செய்ற துரோகம் வேணாம்மா. இந்தப் பையன் வேணாம். வேற இடம் பார்க்கலாம்..."

போட்டோவை தன் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார்.

“ஓ.கே. நான் உங்களை ஜென்ரலா ஒரு செக்கப் பண்றேன். அதுக்கப்புறம் நான் உங்களுக்கு சில மனப் பயிற்சிகள் கொடுக்கறேன். அதைத் தொடர்ந்து செஞ்சிட்டு வாங்க. சில டாப்லெட்ஸ் எழுதித் தர்றேன்..."

“கட்!" என்றார் டைரக்டர் வெங்கட். கேமராமேனுக்கு அடுத்த ஷாட்டிற்கான குறிப்புகளைச் சொல்லி விட்டு தள்ளி நின்றிருந்த ஜெயந்தன் அருகில் வந்தார்.

“கையை கொடுங்க ஜெயந்தன். இந்த சீன்ல டயலாக் பிரமாதமா வந்திருக்கு. மெடிகல் டெர்ம்ஸ் எல்லாம் எப்படி கரெக்டா எழுதினீங்க?"

“எனக்கு அனுபவமே இல்லாத சீனு. மண்டையைப் போட்டு உடைச்சிக்கிட்டேன். கடைசில நானே ஒரு பேஷண்ட் மாதிரி ஒரு சைக்யாட்ரிஸ்டைப் போய்ப் பார்த்தேன். கதைப்படி ஹீரோவுக்கு உள்ள பிரச்சினையை என் பிரச்சினையா சொல்லி நடிச்சேன். அவரு கேட்ட கேள்விகளை அடிப்படையா வெச்சி டயலாக் எழுதிட்டேன் சார்..."

“கங்கிராஜுலேஷன்ஸ்... ஆ... மறந்துட்டேனே. நேத்து உங்க அம்மா கிட்ட போன்ல பேசினப்போ சொன்னாங்க. உங்களுக்கு பொண்ணு பார்த்திருக்காங்களாமே. ஆல் தி பெஸ்ட்" என்று கை குலுக்கினார் டைரக்டர்.

---------------------------

14

# இது ஒரு முற்றும் துறந்த கதை

9 -9-99

கம்ப்யூட்டர் துப்பிய கார்டில் அந்தத் தேதியைப் பார்த்த குமாஸ்தா கவுண்டரின் இந்தப் பக்கம் தவிப்புடன் காத்திருந்த என் முகத்தைப் பார்த்தான்.

“பரவாயில்லை சார். உங்களுக்கு இன்னும் ஒரு வருஷம் டைம் இருக்கு. இந்தாங்க"

அரசாங்க முத்திரை பதித்த அந்த அட்டையை என்னிடம் ஒப்படைத்தான்.

நான் வாங்கி தேதி பார்த்தேன். 9-9-99! மனம் பதறியது. கண்கள் கலங்கின. இளம் மனைவி. மூன்று பெண் குழந்தைகள். தெரிந்த எல்லா இடத்திலும் கடன். காதல் திருமணமென்பதால் உறவுகளோடு பகை. யாரும் உதவப் போவதில்லை. சாரதா என்ன செய்யப் போகிறாள்?

“தைரியமாப் போங்க சார். என்ன பண்றது. உங்களுக்கு முன்னாடி ஒருத்தருக்கு மூணே மாசம் அவகாசத்தோட தேதி வந்துடுச்சு.

இன்னும் கல்யாணம் கூட ஆகலையாம். இது முந்தி அவங்கவங்க விதியா இருந்தது. இப்போ அரசாங்க விதின்னு ஆனப்புறம் வருத்தப்பட்டு என்ன ஆகப்போகுது?" என்றார் க்யூவில் நின்ற ஒருவர்...

தளர்வாக வெளியே வந்தேன்

'உலகம் இருண்டது' என்று கதாசிரியர்கள் எழுதுவார்களே, அதற்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

அந்த அரசாங்கக் கட்டிடத்தின் வாசலில் நாட்டின் அதிபர் பொறுப்பை ஏற்ற இராணுவ ஜெனரலின் கட்அவுட் இருந்தது. அதற்கு நெருப்பு வைக்கலாமா என்ற ஆத்திரம் எழுந்தது.

என்ன முட்டாள்தனமான உத்தரவு! இரக்கமே இல்லாத இந்த அரசாங்கத்தை எதிர்க்க யாருக்குமே துணிவில்லையா?

இயந்திரத் துப்பாக்கிகளுடன் தலைவர்ங்க உலவினாலும், எதையும் பொருட்படுத்தாமல் குனிந்து ஒரு கல்லெடுத்து அந்த கட் அவுட் மேல் வீசிவிட்டு வேகமாக குறுக்குச் சந்துகளில் ஓடத் துவங்கினேன்.

களைத்துப் போய் ஒரு மர நிழலில் நின்று மூச்சு வாங்கியபோது என்தோளில் ஒரு கை!

அவன் முரட்டுத் துணியில் உடையணிந்து கண்கள் சிவந்திருந்தான்.

"நீ கல்லெடுத்து அடிச்சதை நான் பார்த்தேன். நானும் பாதிக்கப்பட்டவன்தான். என் தேதி என்ன தெரியுமா? 2-1-99 உன்னை மாதிரி ஆளுங்களைத்தான் நாங்க அணி திரட்டிக்கிட்டிருக்கோம். என்னோட வா"

"நாங்கன்னா?"

"வா, தெரியும்"

அந்தக் காட்டுக்குள் கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் நடக்க வைத்து என்னை அழைத்துச் சென்றான் அவன்.

பாறைகள் சூழ்ந்த ஒரு பகுதியில் கிட்டத்தட்ட நாற்பது பேர் கூடியிருந்தார்கள். அனல் பறக்க விவாதம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

நாங்களிருவரும் ஓரமாக நின்ற கவனித்தோம்.

"ஜனநாயத்தால் நம் நாட்டிற்கு உருப்படியான பலன்கள் இல்லை என்ற நாம் நொந்தது உண்மைதான். திடீரென்று இராணுவப் புரட்சி நடந்து ஆட்சிப் பொறுப்பு இராணுவத் தலைமையிடம் சென்றதை உள்ளுக்குள் வரவேற்கவும் செய்தோம். ஊழல் அரசியல்வாதிகளை கைது செய்து உடனடி விசாரணைகளில் மரண தண்டனைகள் வழங்கியபோதும் மகிழ்ச்சியாகத் தான் இருந்தது. தனி மனிதனுக்கு சொத்து உச்சவரம்பு கொண்டு வந்து அதிகப்படியான சொத்துக்கள் பிடுங்கப்பட்ட அதிரடி நடவடிக்கைகள் பிரமிக்கத்தக்கவை. ஆனால்... மக்கள் தொகையை அதிரடியாகக் கட்டுப்படுத்துவதற்காக கொண்டு வந்த மரணத் தேதித்

திட்டம்... மகா கொடுமை!

“வாக்காளர் பட்டியலில் உள்ளோர் எல்லாம் வரிசையில் நின்ற கம்ப்யூட்டர் தீர்மானிக்கும் மரணத் தேதியை வாங்கிக் கொள்வதாம். அந்த தேதி வரைக்கும் வாழ திட்டமிட்டுக் கொள்வதாம். குறிப்பிட்ட இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து எத்தனை லட்சம் பேர் இறந்துவிட்டார்கள்! மரணத்தை நினைத்து மனதளவில் செத்துப் போய் விட்டவர்கள் எத்தனை கோடி!"

“இனியும் இந்த அராஜக அரசாங்கத்தை நாம் எதிர்க்கவில்லை என்றால் நாம் உணர்ச்சியே இல்லாத ஜடங்கள் என்றுதான் பொருள். எப்படியும் நம் உயிர்களுக்குத் தேதி குறிக்கப்பட்டு விட்டன. இந்த மரணம் எப்போது நிகழ்ந்தால் என்ன? உயிரைப் பொருட்படுத்தாமல் இந்த இராணுவ ஆட்சியைக் கவிழ்க்க எதுவும் செய்ய உங்களில் தயாராக இருப்பவர்கள் மட்டும் கைகளை உயர்த்துங்கள்"

நானும் கையை உடனே உயர்த்தினேன். அப்போது...

வானத்தில் ஒரே சமயதில் பதினைந்து ஹெலிகாப்டர்கள் பறந்து வந்தன. அதில் இராணுவ வீரர்கள். அவர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் கீழ் நோக்கிச் சரிந்தன. சரம் சரமாகச்சுடத் துவங்க... நாங்கள் எல்லாத் திசைகளிலும் ஓடினோம்.

இராணுவ ஜீப்கள் நாலாப் பக்கங்களிலிருந்தும் எங்களில் உயிர் தப்பியவர்களைச் சூழ்ந்து கொண்டன.

நாங்கள் அந்த இராணுவ அதிகாரி முன்பாக நிறுத்தப்பட்டு, எங்களை ஒவ்வொருவராகத் தூக்கிடலிட உத்தரவிடப்பட்டு...

கால்கள் நடுங்க நான் மேடையேறினேன்.

“கடைசியாக ஏதாவது சொல்ல வேண்டுமா புரட்சி நாயே!"

“சாரதாவையும், என் புள்ளைங்களையும் நினைச்சிப் பார்க்காம நான் அவசரப்பட்டு புரட்சில இறங்கினது தப்புதான். ஏற்கனவே எனக்கு ஒரு வருஷ அவகாசத்திலே தான் மரணத்தேதி கிடைச்சிருக்கு. இந்த ஒரு வருஷமாவது நான் அவங்களோட வாழ்ந்துட்டு சாகறேன். தயவு செஞ்சி என்னை மன்னிச்சுடங்க அய்யா!"

“இங்கே மன்னிப்புக்கே இடமில்லை. ம்! ஆகட்டும்!"

என் முகத்தில் கறுப்புத் துணிமாட்டி, சுறுக்குக் கயிற்றை மாட்டி....

“சாரதா!" என்ற அலறினேன்.

“என்னங்க? என்னாச்சி? ஏன் இப்படிக் கத்தினீங்க?" என்றாள். பதட்டமான சாரதா என் உடம்பில் பூத்திருந்த வியர்வையைத் துடைத்தபடி.

இரவு விளக்கொளியில் என் மூன்று பெண்களும் தரையில் உறங்கிக் கொண்டிருக்க, நான் சாரதாவைப் பார்த்து, “ச்சே! நான் ரொம்ப்

பயந்துட்டேன் சாரதா. நம்ம நாடு மிலிட்டிரி கைல போயி... அவங்க மரணத் தேதித் திட்டம் அறிவிச்சி..." எல்லாம் சொன்னேன்.

“நல்ல கனவு கண்டீங்க போங்க! தண்ணி குடிச்சிட்டுப் படுங்க"

“ஏன் சாரதா, பேச்சுக்குக் கேக்கறேன். திடீர்னு நிஜமாவே நான் செத்துட்டா இந்தக் குடும்பத்தை நீ சமாளிச்சிடுவியா?"

“அய்யோ! என்ன பேச்சுங்க இது! உங்களுக்கு ஒண்ணும் இல்லை. இப்படி அர்த்தமில்லாம கேள்வி கேக்காதீங்க. காலைல கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிட்டு வரலாம்“ என்றாள் சாரதா.

அர்ச்சனை செய்துவிட்டு சாரதா நவக்கிரகங்களைச் சுற்றியபோது, நான் உண்டியலில் காசு போட்டுவிட்டு பிரகாரப் படிக்கட்டில் அமர்ந்தேன்.

பத்மநாபன் அருகில் வந்து, “என்னப்பா, எப்படி இருக்கே?" என்றான்.

“ம். நீ எங்கய்யா கோவிலுக்கு? அதிசயமா இருக்கே" என்றேன்.

“தொடர்ந்து நாற்பத்தெட்டு நாள் கோயிலுக்கு வந்து எலுமிச்சையில விளக்கேத்தணும். இது ஒரு பரிகாரம் தேவேந்திர சுவாமிகள் சொன்னாரு."

“யார் அது?"

“இன்னிக்கு நாடு பூரா அவரைப் பத்திதானே பேச்சு. உன் ஜாதகம் கூடத் தேவையில்லை. பிறந்த தேதி, நட்சத்திரம் சொன்னாப் போதும். ரெண்டே நிமிஷத்துல உன் பிரச்சினைக்கெல்லாம் தீர்ப்பு சொல்றார். அவர் சொல்றது அப்படியே நடக்குதுப்பா. பெரிய பெரிய அரசியல்வாதிகள்லாம் வந்துட்டுப் போறாங்க. என் வீட்டுக்குப் பக்கத்திலதான் இருக்கார். சாயங்காலம் வர்றியா?"

நான், சாரதா, பத்மநாபன் மூவரும் சுவாமிகள் எதிரில் அமர்ந்திருக்க... அவர் கண்களை மூடி தியானத்தில் இருந்தார்.

கண்களைத் திறந்த சுவாமிகள் சலனமின்றி தலையசைத்தார். பத்மநாபன் என்னை அறிமுகப்படுத்தினான். பிறந்த தேதி, நட்சத்திரம் கேட்டார். சிந்தனையில் ஆழ்ந்தார்.

“நீங்க இவர் மனைவியா?" என்றார் சாரதாவைப் பார்த்து.

“ஆமாம்“

“கொஞ்சம் வெளில இருங்கம்மா, தம்பி, நீயும்தான்" என்றார் பத்மநாபனைப் பார்த்து.

இருவரும் சென்றதும், “தம்பி மரணம் என்பது சுகமா? சோகமா?" என்றார் என்னைப் பார்த்து.

“தெரியலை சுவாமி, அனா எனக்கு மரணம் ஒரு பயம்“

“அதில் பயப்பட என்ன இருக்கிறது? தினசரி உறக்கம் ஒரு மரண

ஒத்திகைதானே? பரிபூரண விடுதலை அல்லவா அது! ரத்தமும் சதையும் கொண்ட இந்த உடலுக்கு மட்டும் தானே அழிவு?"

"என் குடும்பத்தை கடைசி வரைக்கும் காப்பாத்தணுமே சுவாமி. அதுக்கு என்ன பண்றது?" எனக்கு மூணு பெண் குழந்தைங்க. அவங்களை வளர்த்து, படிக்க வெச்சி, கல்யாணம் பண்ணிக் கொடுத்து...

சுவாமிகளின் புன்னகைக்குப் பொருள் விளங்கவில்லை.

"என் கணிப்புப்படி 9-9-99 அன்ற உன் வாழ்க்கை முடிகிறது தம்பி."

"அய்யோ! இன்னிக்கு தேதி 8-9-99ங்க சுவாமி. நிஜமாத்தான் சொல்றீங்களா?" அதிர்ந்தேன் நான்.

"என் வாக்கு பொய்த்ததில்லை. வீட்டிற்குச் சென்று இறைவனைத் துதித்தபடி இரு. கவலை வேண்டாம். மரணம் சந்தோஷமான விஷயம். போய் வா!"

பொம்மை போல எழுந்து வெளியே வந்தேன்.

"ஏங்க ஒரு மாதிரியா இருக்கீங்க? என்னங்க சொன்னார் சுவாமிகள்?"

"வீட்டுக்குப் போகலாம்" என்றேன் உணர்ச்சியே இல்லாமல்.

"ஏன் ஒரு மாதிரியாப் பேசறீங்க? ஏன் இப்படி வேர்த்திருக்கு?"

நான் மெ னமாக நடந்தேன்.

வீட்டில் பூஜை அறையில் அமர்ந்து சுவாமிப் படத்தையே பார்த்தபடி இருந்த என்னை அசைத்தாள் சாரதா.

"எனக்கு பயமா இருக்குங்க. என்னாச்சுங்க?"

"என்னோட எல்.ஐ.சி. பாலிசிரெண்டும் பேங்க் லாக்கர்ல இருக்கு சாரதா."

"அதுக்கென்ன இப்போ?"

"நீ தைரியமா இருக்கணும் சாரதா. என் ஆபீஸ்லயே உனக்கு வேலை தருவாங்க. குழந்தைங்களை நல்லாப் படிக்க வை"

"என்னென்னவோ பேசறீங்களே. சுவாமிகள் என்னங்க சொன்னார்."

"நாளைக்கு நான் செத்துடுவேனாம் சாரதா"

"அய்யோ! அதெல்லாம் நம்பாதிங்க. நீங்க நல்லாத்தான் இருக்கீங்க. நாளைக்க ஆபீசுக்கு லீவு போட்டுட்டு வீட்ல நல்லா ரெஸ்ட் எடுங்க. இந்த ஜோசியத்தைத் தூக்கி எறிஞ்சிடுங்க. முதல்ல மனசுல பலம் வேணும். நாளைக்கு உங்களுக்கு எதுவும் நடக்கலைன்னான உற்சாகமாயிடவீங்க இல்ல?"

"இல்லை சாரதா. கனவுலயும் அதே 9-9-99 நாளைக்கு 9-9-99 சுவாமிகளே சொல்லிவிட்டார். கந்த சஷ்டி கவசம் எடு"

“இந்தப் பேத்தலை நிறுத்தப் போறீங்களா இல்லையா?’ என்றுக் கத்தினாள் சாரதா.

மாலையில் பெரிதாக மழை வந்தது. இடி! மின்னல்!

ஒரு பலமான இடியில்... வீட்டின் கூரையில் சட்டென்று ஒரு விரிசல் தோன்ற... சில விநாடிகளில் டமடமவென்று சரிந்தது...

‘சாரதா?" என்று அலறினேன்.

“என்னங்க? என்னாச்சி? ஏன் இப்படிக் கத்தினீங்க?" என்றாள் பதட்டமமான சாரதா என் உடம்பில் பூத்திருந்த வியர்வையைத் துடைத்தபடி.

“ச்சே! நான் பயந்துட்டேன் சாரதா. நான் செத்துப் போறதா கனவு கண்டதா ஒரு கனவு. அந்தக் கனவுலயும் நான் செத்துப் போய்ட்டேன். சரி, நீபடு. நான் கொஞ்ச நேரம் டி.வி. பார்த்துட்டுப் படுக்கறேன்" என்றேன்.

டி.வி.யை ஆன் செய்தேன்

“சிறப்புச் செய்தி! விண்வெளியிலிருந்து பாதை விலகிய ஒரு விண்கல் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர் நேற்று கண்டுபிடித்திருக்கிறார். அவரின் கணிப்புப்படி இந்த விண்கல் வருகிற 9-9-99 அன்று பூமியைத் தாக்கும் என்றும் பூமியை விட மூவாயிரம் மடங்கு பெரிய கல்லான இது தாக்கினால் பூமி தூள் தூளாகிச் சிதறும் என்றும் குறிப்பிட்டுள்ளார்."

பின்குறிப்பு : இது ஒரு ‘முற்றும்’ துறந்த கதை.

----------------------------

# 15

# பூப்பூத்தல் அதன் இஷ்டம்

“இந்த நோட்சை இன்னிக்க நைட்டே காப்பி பண்ணிடுவேன். நாளைக்கு காலையில உங்க நோட்டைக் கொடுத்துடறேங்க" என்றான் பிரகாஷ்.

“சரி" என்ற நிஷா சற்று தள்ளி காத்திருந்த தன் தோழிகளோடு சேர்ந்து கொண்டு காலேஜ் கேண்டீன் நோக்கி நடந்தாள்.

வழியெல்லாம் மஞ்சள் பூக்கள் பூத்த மரங்கள் கிளைகளின் கூட்டணியில் நிழல் விரித்து வைத்திருந்தன.

கல்லூரிப் பூக்கள் எல்லாத் திசைகளிலும் உற்சாகமாக நடந்து கொண்டிருந்தன. சுடிதார் அணிந்த பூக்கள் ஜீன்ஸ் அணிந்த பூக்கள், டி-ஷர்ட் அணிந்த பூக்கள்.

கட்லெட் சாப்பிட்டப்படி கேண்டீனில் வினோதினி குனிந்து, “நிஷா, ஒரு ரகசியம் சொல்லட்டுமா?" என்றாள்.

சரிந்த துப்பட்டாவை சரி செய்து கொண்டு, “என்ன?" என்றாள் நிஷா.

“பிரகாஷ் உன்னை லவ் பண்ணிட்டு இருக்கான்"

“வாட் நான்சென்ஸ்?"

“நிஜமாதான் சொல்றேன். சரியான சந்தர்ப்பம் பார்த்து உன்கிட்ட சொல்லப் போறதா செந்தில்கிட்ட சொல்லியிருக்கான். நேத்து செந்தில் என்கிட்ட சொன்னான்."

“என்ன பேத்தல் இது? இது படிக்கிற வயசு! லவ் பண்ற வயசு இல்லை வினோ. நான் பிரகாஷ் கிட்ட ஃப்ரெண்ட்லியா தான் பழகிட்டு இருக்கேன்."

“காதல் நட்புல ஆரம்பிக்கக் கூடாதா?"

“எனக்கு அப்படி ஐடியா இல்லை. நான் நிறையப் படிக்கணும் ஐ.ஏ.எஸ். எழுதணும்னு பிளான் இருக்கு. என் எதிர்காலம் பத்தி நிறைய கனவுகள் வெச்சிருக்கேன். அதை நோக்கி என்னை தயார் பண்ணிக்கிட்டு இருக்கேன்."

“ஸோவாட்?"

“நீ செந்தில் கிட்ட சொல்லி பிரகாஷ் கிட்ட சொல்லச் சொல்லு!"

“என்னன்னு?"

“இது சரியா வராதுன்னு சொல்லு. அந்த எண்ணத்தை மாத்திக்கச் சொல்லு. எப்பவும் போல நட்பா பழகறதா இருந்தா பழகச் சொல்லு. இல்லைன்னா அந்த நட்புகூட தேவையில்லை."

“ஏன் இப்படி டென்ஷனாகறே? நீ ஆத்திரப்படறதுக்கு எதுவும் இல்லை. நீ சொன்னதை நான் செந்தில் கிட்ட சொல்லப்போறதில்லை"

“ஏன்?"

“திடீர்னு உன் மனசு மாறலாம்."

“நீ சொல்லாட்டி போ! பிரகாஷ் என்கிட்ட நேரடியா சொன்னா அப்போ நானே சொல்லிக்கிறேன். எனக்கு காதல், கீதல் எல்லாம் ரெண்டாம் பட்சம். இப்ப என் கவனம் முழுக்க படிப்புலதான்" என்றாள் நிஷா உறுதியாக.

-----

சாரதி தரையில் அமர்ந்து கேஸ் ஸ்டவ் அடுப்பின் ஓட்டைகளில் கம்பி நுழைத்து துடைத்துக் கொண்டிருக்க.... லலிதா கிரைண்டரில் இருந்து மாவு வழித்து பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்தாள்.

தன் அறையில் இருந்து வந்து அப்பா அருகில் அமர்ந்தாள் நிஷா. “நான் பண்றேன்ப்பா. நீங்க போங்க"

“பரவால்லை. நீ போய்ப்படிம்மா"

“அப்பா!"

“என்ன நிஷா?"

“நம்ம டி.விக்கு கேபிள் கனெக்ஷன் கொடுக்கலாம்ப்பா"

நிமிர்ந்து பார்த்தார். பார்வை அவளை துளைத்தது. சமையலறையில் இருந்து அம்மாவும் எட்டிப் பார்த்தாள்.

“எதுக்கும்மா?"

“நல்ல நல்ல விஷயங்கள் எல்லாம் வருதுப்பா, நாலெட்ஜ் இம்ப்ரூவ் ஆகும்."

“வி' சேனல்லயும், ‘எம்' டி.வி லயும் கண்ராவியா ஆடறதைப் பார்த்தா நாலெட்ஜ் இம்ப்ரூவ் ஆகுமா? என் ஃபிரண்டு சொன்னான். ஸ்டார் மூவிஸ்ல குடும்பத்தோட உக்காந்து படம் பார்க்க முடியலையாம். புதுசா எஃப் டி.வின்னு ஒண்ணுல ரொம்ப மோசமா நடந்து வர்றாங்களாம். இப்ப உனக்கு படிப்பு முக்கியமா? மனசைக் கெடுத்துக்கறது முக்கியமா?"

“அப்படி கேளுங்க! என்னடி ஆச்சு உனக்கு? உனக்கு படிப்தைத் தவிர வேற எதுலயும் மனசு திரும்பிடக் கூடாதுன்னு தானே நாங்களே சீரியல் பார்க்கற ஆசையை எல்லாம் கட்டுப்படுத்திகிட்டு கேபிள் கனெக்ஷன் கொடுக்காம இருக்கோம்!" என்றாள் லலிதா.

“எதுலயும் நல்லதும் இருக்கு. கெட்டதும் இருக்கு. எதை எடுத்துக்கணும்னு பக்குவம் நமக்கு வேணும்மா. அப்பா சொல்ற விஷயங்களை பார்க்கறதுக்காக நான் கேபிள் கனெக்ஷன் கொடுக்கச் சொல்லலை. டிஸ்கவரி சேனல், அனிமல் பிளானெட், நேஷனல் ஜியாகரபி சேனல்னு எவ்வளவோ பொது அறிவை வளர்க்கற சேனல்சும் இருக்கு. எல்லா சேனல்லயும் நல்ல புரோக்ராம்சும் இருக்கு. செலக்ட் செஞ்சி பார்க்கலாமேம்மா."

“நிஷா, என்ன நீ எதிர்த்துப் பேசுறே? ம்?" என்று அதட்டலாக சொன்ன சாரதி, “காலேஜுக்குப் போக ஆரம்பிச்சுட்டா பெரிய மனுஷின்னு நினைப்பா உனக்கு? பக்குவத்தைப் பத்திப் பேசறியே... உனக்கு என்ன பக்குவம் இருக்குன்னு எங்களுக்குத் தெரியும். படிக்கிற வேலையை மட்டும் பாரு." என்றார்.

இருவரையும் வெறுப்பாகப் பார்த்துவிட்டு மேற்கொண்டு எதுவும் பேசாமல் தன் அறைக்கு சென்றாள்.

“எரிக்கிற மாதிரி பார்த்துட்டுப் போறா பாருங்க. மரியாதையே குறைஞ்சு போச்சு இந்த விட்டுல" என்றாள் லலிதா.

கல்லூரியில் இருந்து திரும்பின நிஷா புத்தகங்களை மேஜைமேல் வைத்துவிட்டு, “அம்மா! காபி" என்றாள்.

“கொண்டார்றேன். உனக்கு லெட்டர் ஒண்ணு வந்திருக்கு. உன் ஃபிரண்டு பிரதிபா எழுதியிருக்கா. ரேடியோவுக்குப் பக்கத்தில வெச்சிருக்கேன் பாரு" என்று அம்மா குரல் கொடுத்தாள்.

நிஷா அந்த மூன்று ரூபாய் கவரை எடுத்துப் பார்த்தாள்.

அது ஓரம் கிழிக்கப்பட்ருந்தது.

கடிதத்தை எடுத்துப் படித்தாள்.

காபியோடு வந்த அம்மாவிடம், “இதை யாரும்மா கிழிச்சது?"

“ஏன்? நான்தான்."

“அவ என்னென்னவோ பர்சனலா எனக்கு எழுதிருக்கா. இதை எதுக்கும்மா நீ படிச்சே?"

“கவர்ல ஃப்ரம் அட்ரஸ் எதுவும் இல்லை. உன் பேருக்கு தபால் வந்திருக்க. பிரிச்சதுக்கப்புறம் தானே உன் ஃபிரண்டு எழுதினதுன்னு தெரிஞ்சது."

அப்படின்னா வேற என்னம்மா எதிர்பார்த்தே நீ?"

“வயசுப் பொண்ணை கண்கொத்திப் பாம்பு மாதிரிதானே பார்த்துக்க வேண்டியதா இருக்கு. என்னோட மல்லுக்கு நிக்காதே! உன் பேருக்கு என்ன தபால் வந்தாலும் பிரிச்சுப் படிச்சுட்டு அப்புறம் உன்கிட்ட கொடுக்கச் சொல்லி அப்பாதான் சொன்னாரு."

“ச்சே!" என்றாள் எரிச்சலோடு நிஷா.

-----

கல்லூரி முடிந்ததும் மரத்தடியில் அமர்ந்து தோழிகளோடு நிஷா பேசிக் கொண்டிருந்தபோது சியாமளா சிங்கப்பூர் டூர் போன அனுபவங்களை விவரித்தாள்.

திடீரென்று வாட்ச்சைப் பார்த்து பதறினாள் நிஷா.

“ஏய், டைமாச்சு. புறப்படலாம்."

அவர்கள் எழுந்து கொண்டபோது அவர்கள் அருகில் வந்து ஸ்கூட்டரை நிறுத்திய சாரதியின் முகம் சிவந்திருந்தது.

“நிஷா, ஏறு வண்டியில!" என்றார் உத்தரவாக.

வீட்டுக்கு வரும்வரை எதுவும் பேசவில்லை. வந்ததும்...

“என்ன நினைச்சிட்டிருக்கே உன் மனசுல? ம்? அஞ்சி மணிக்கு வீட்ல இருப்பே. இப்போ ஆறே கால்! பதறிப் போய்ட்டோம். காலேஜ்விட்டதும் நேரா வீட்டுக்கு வந்துடணும்னு சொல்லிருக்கேனில்ல!"

“இல்லப்பா, இன்னிக்கு எங்க செட்டுல ஒருத்தி சிங்கப்பூர் டூர் போயிட்டு வந்திருந்தா. அதைப் பத்தி சொல்லிட்டிருந்தா. அதில நேரம் போனது தெரியலை."

“இதை நான் நம்பணும். சினிமா மியூசிக், யாரு யாரை லவ் பண்றான்னு வெட்டி அரட்டையைத் தவிர வேற என்ன பேசப் போறீங்க நீங்க?’

“இல்லப்பா... நிஜமாதான்."

“எதிர்த்துப் பேசற பழக்கத்தை முதல்ல விடு! அப்போதான் நீ உருப்படுவே. எனக்கு தெரியாதா உங்களைப் பத்தி? பேசுறா பெருசா!"

உதடுகளைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள் நிஷா.

-----

கோபமாக வீட்டுக்குள் நுழைந்தார் சாரதி.

“எங்க? எங்கடி அவ! உன் செல்ல புத்திரி! கூப்புடு அவளை! நிஷா! நிஷா!"

“என்னங்க ஆச்சு!"

மொட்டை மாடியில் படித்துக் கொண்டிருந்த நிஷா பதற்றமாக இறங்கி வந்து மூச்சிரைத்து, “என்னப்பா?" என்றாள்.

“என்ன படிக்கிறே? லவ் புக்கா? பாட புக்கா?" அவள் கையிலிருந்து வெடுக்கென்று பிடுங்கிப் பார்த்தார்.

“என்னப்பா இது?"

“நேத்து மத்தியானம் நீ காலேஜ்ல கிளாஸ் அட்டெண்ட் செஞ்சியா?"

எச்சில் விழுங்கின நிஷா, “அது... வந்துப்பா..."

“கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு! அட்டெண்ட் செஞ்சியா?"

“இ... இல்லைப்பா"

“அடிப்பாவி! கிளாசுக்குப் போகாம எங்கடி போயிருந்தே? என்றாள் அம்மா.

“கேளு! நல்லாகேளு! என் ஃபிரண்டு பார்த்துட்டு வந்து சொல்லலைன்னா எனக்குத் தெரிஞ்சிருக்காது. ஏய்! நிஷா! எத்தனை தடவை இந்த மாதிரி கிளாஸை கட் பண்ணிட்டு சினிமாவுக்குப் போயிருக்கே? ம்?"

“அப்பா... நேத்துதான் முதல் தடவைப்பா... ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் ரொம்ப வற்புறுத்தி கூட்டிட்டுப் போய்ட்டாங்கப்பா."

“சினிமாவுக்கா போயிருக்கா?" என்றாள் அம்மா.

“அதுவும் என்ன படம்! டைட்டானிக்! காதல் காவியம்னு எல்லா பத்திரிகையும் எழுதினாங்க இல்ல, அதான் உன் பொண்ணு காலேஜை கட் பண்ணிட்டுப் போய்ட்டா!"

“மன்னிச்சிடுங்கப்பா. இனிமே இப்படி நடக்காது."

“தெரிஞ்சதால கேட்டேன். இந்த மாதிரி தெரியாம இன்னும் என்னவெல்லாம் நடக்குதோ...? இந்த லட்சணத்தல் ஐ.ஏ.எஸ். எழுதறதுதான் லட்சியம்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக்கிறா! காலேஜ் கிளாஸ்ல கிடைக்காத நாலெட்ஜ் உனக்கு டைட்டானிக்குல கிடைக்குதோ?"

கண்களில் கண்ணீர் பொங்க அமைதியாக நின்றாள் நிஷா.

-----

கல்லூரி மரத்தடியில் சாய்ந்து அமர்ந்திருந்த நிஷா அவள் அருகில் வந்து நின்ற பிரகாஷைப் பார்த்தாள்.

“என்ன?" என்றாள்.

“நிஷா! உங்ககிட்ட ரொம்பநாளா வெளிப்படையா ஒரு விஷயம் பேச நினைக்கிறேன். நீங்க எப்படி நினைச்சாலும் சரி! நிஷா! ஐ லவ் யூ!" என்ற அவன் - அவள் முகத்தைப் பார்த்தான்.

சில விநாடிகள் மௌனமாக இருந்த நிஷா பார்வையைத் தாழ்த்திக் கொண்டு, “நானும்தான்" என்றாள்.

---------------------------------------

## 16

# பரத் VS சுசிலா

கட்டிக்கொண்டிருந்த மேம்பாலத்தில் வெல்டு வைத்து, நெருப்புப் பூக்களை உதிர்த்துக் கொண்டிருந்தார்கள். வெட்டிப் போட்ட மணல்மேடுகளின் மேல் படகுகளாக அசைந்தசைந்து கார்கள் ஊர்ந்தன.

ஓர் ஏராள அசைவில் பரத்மேல் சரிந்து நிமிர்ந்த சுசிலா, “எத்தனை மணிக்கு வரச் சொன்னார் பரத்...?"

“மணியெல்லாம் சொல்லலை. உடனே வாங்கன்னார். அதனாலதான் உனக்கு பனியன் மாத்தக்கூட அவகாசம் கொடுக்க முடியலை...." என்ற பரத், சாலையின் சிக்கலிலிருந்து மீண்டு, கியர் மாற்றி, உதட்டில் சிகரெட் வைத்துக் கொண்டன். லைட்டர் கிளிக்கிப் பற்ற வைத்த சுசிலா, “அப்படியே இந்த மீசையையும் பொசுக்கிடணும்..." என்றாள்.

“அதென்ன தப்பு பண்ணிச்சு...?"

“ஹாஸ்டல்ல வெயிட் பண்ணிட்டிருந்தப்போ, கிராஸ் செஞ்ச

லாவண்யாகிட்ட என்ன கேட்டீங்க...?"

“நான் ஒண்ணும் தப்பா கேட்டுடலையே சுசி... ‘பெசன்ட் நகர்ல ஒத்தைக் காதுல கடுக்கன் போட்டு, முட்டிகிட்ட கிழிஞ்ச ஜீன்ஸ் போட்டு இருந்த பையனைக் கட்டிப் பிடிச்சிக்கிட்டு யமஹால போனியே... அது, உன்னோட பெரியண்ணன் தானே?"ன்னு கேட்டேன்..."

“திமிர்தானே உங்களுக்கு...?"

“இதுல திமிர் என்ன இருக்கு... ? நிஜம்மா அவளோட பெரியண்ணனை நான் பார்த்தது இல்லை. சரி, இதை ஒரு புகாரா உன்கிட்ட இத்தனை அர்ஜெண்ட்டா சொன்ன அவ, என்கிட்ட பதிலுக்கு என்ன கேட்டானு தெரியுமா...?

“என்ன கேட்டா...?"

.... ‘அந்தமாதிரி, நீங்களும் நானும் எப்போ போகலாம்?’னு கேட்டா...

“இதுக்குப் பேர்தான் ஹைவோல்டேஜ் புரூடா!"

“இல்லை... உன் மனசுல பத்து ஓனிக்ஸ் லாரி பொறாமை!"

“ஆமாம்! இவர் பெரிய மன்மத..." செல்போன் குறுக்கிட்டு சிணுங்க, பரத் எண் பார்த்து, “அவர்தான். ஹலோ சார். வி ஆர் ஆன் த வே... இன்னும் அஞ்சு நிமிஷத்துல வந்துடுவோம். மண்டபத்துல இருங்க..." என்று வைத்தான்.

நியான் விளம்பரங்களில் குறைந்த வட்டி, சுலபத் தவணைகளில் கார் வாங்கச் சொன்னார்கள். தவணை கட்ட என்ன வழி என்று சொல்லவில்லை.

“தேவராஜ் எதுக்காக வரச் சொல்லியிருக்கார் பரத்...?"

“தெரியலை... மற்றவை நேரில்னு சொல்லிட்டாரு..."

“சமீபத்துல கிரானைட் பிஸினஸ்ல அள்ளிக்கிட்டிருக்காரு. இவரோட ஷேர்ஸ் ஆகாசத்துல இருக்கு! ஏதோ ஒரு மேகஸின்ல பேட்டி கூடப் பார்த்தேன்..."

“ஆகாசத்துல இருக்கவேண்டிய ஒரு அயிட்டம். இவர் வீட்ல இருக்கிற உபரித் தகவலையும் சேர்த்துக்கோ..."

“அதென்ன...?"

“அந்த ஏஞ்சலுக்கு அபூர்வானு பொருத்தமான பேர் வெச்சதுக்காகவே முதல்ல கைகுலுக்கிடணும் சுசி..."

“அதனாலதான். இப்படி அர்த்த ராத்திரியில விவரம் கூடக் கேட்டுக்காம புறப்பட்டீங்களா...? எங்க பார்த்தீங்க...?"

ஃபேஷன் ஷோ..."

“கலந்துக்கிட்டாளா...?

“காம்ப்பியரிங் செஞ்சா! டாப்ஸ் கழுத்து என்னடா இவ்வளவு அபாயமா இருக்கேன்னு விசாரிச்சு வெச்சேன். ஆனாலும் ஒரு பெரிய சைஸ் ஹேண்ட் மைக்கைக் கையில பிடிச்சி இருந்ததால, தெரிஞ்சும் தெரியலை... அந்த அபூர்வாவை யாரோ கடத்திட்டுப் போயிருக்கலாம்னு நான் யூகிக்கிறேன்..."

அந்த மெகா சைஸ் கல்யாண மண்டபத்தின் வாசலில் காரை நிறுத்தி இறங்கியபோது, அங்கங்கே உழைப்பாளிகள் தொங்கிக் கொண்டு, சீரியல் விளக்குச் சரங்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஓரத்தில், குலை தள்ளிய வாழை மரங்கள் படுத்திருந்தன. லாரியிலிருந்து காய்கறிக் கூடைகள் கைமாற்றி சைடில் மறைந்தன.

உள்ளே நுழைய... ஜிகினா தோரணங்களைத் தூக்கிக் கொண்டு நடந்தார்கள். பிளாஸ்டிக் நாற்காலிகளை வரிசையமைத்துக் கொண்டு இருந்தார்கள். வாசலில் வைப்பதற்கு தெர்மாகோலில் எழுத்துக்கள் வெட்டிக் கொண்டிருந்தவனிடம் “யாருக்குக் கல்யாணம்...?" என்றான் பரத்.

“என் மகளுக்குத்தான்..." என்று ஓவர்லேப்பில் பதில் சொல்லி, அருகில் வந்து கைகுலுக்கிய தேவராஜ், ச்ஃபாரி அணிந்து மூன்று பேனாக்கள் குத்தியிருந்தார்.

சுசிலாவின் பனியனில் ‘Form convex to concave’ படித்து ஒரு விநாடி அர்த்தம் யோசித்தவர். அது அப்புறம் என்று ஒதுக்கி, “இப்படி வாங்க பரத்..." என்று தள்ளி அழைத்துச் சென்று நாற்காலிகளை இழுத்தார்.

உட்கார்ந்ததும் வெடவெட ஆசாமி ஒருவர், அந்த நேரத்திலும் டை கட்டி, இரண்டு காகிதக் கோப்பைகளில் காபி எடுத்து வந்து கொடுத்துவிட்டு, நூறு மீட்டர் விலகிச் சென்று நின்று கொண்டார்.

“என்ன சார் பிரச்சனை...?" என்றார் பரத். அவரின் செவ்வக மோதிரத்தில் மொத்தம் எத்தனை வைரக் கற்கள் என்று எண்ண முயன்றபடி.

தேவராஜ், தூரத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் மணவறை அலங்காரத்தில் பார்வையைப் பதித்து மௌனமாக இருந்தார்.

பரத் காபி குடித்து முடித்து, ‘வித் யுவர் பர்மிஷன்’ சிகரெட் பற்றவைத்துக் கொண்டு, “விடிஞ்சா கல்யாணம்... பொண்ணைக் காணலை... அதானே..?" என்றான்.

“சேச்சே! வீட்ல நிம்மதியா தூங்கிட்டிருக்கா. காலையில இந்தக் கல்யாணம் நல்லபடியா நடந்து, திட்டமிட்டபடி நாளைக்கு நைட் அவதன் புருஷனோட நியூயார்க் புறப்பட்டுப் போகணும். அதான் என் கவலை!"

“எதுக்குக் கவலை...? விசா வரலையா...? ஏதாச்சும் மாப்பிள்ளைக்கு

மொட்டைக் கடுதாசியா...? இல்லை, கெட்ட சொப்பணம் கண்டீங்களா...?

“அந்த படவா ராஸ்கல், இன்னிக்கு ஜெயில்லேர்ந்து விடுதலையாகியிருக்கான்னு கொஞ்சம் முன்னாடிதான் எனக்குத் தகவல் தெரிஞ்சது..."

“யாரு...? பேரே படவா ராஸ்கலா...?"

“அவன் பேரு ஜெரால்டு! எங்க ஏரியாவுல டூரூவீலர் மெக்கானிக் ஷாப் வெச்சிருந்த ரெடிப் பய... என் பொண்ணு காலேஜுக்குப் போறப்ப வர்றப்ப கலாட்டா பண்ணிட்டிருந்தான். அடிக்கடி தகராறு... லெட்டர் எழுதறது, போன் பண்ணித் தொந்தரவு பண்றதுனு தொல்லை தாங்கமுடியலை...

“அப்புறம்...?"

“ஒரு தடவை நானே நேர்ல போய் சட்டையைப் பிடிச்சு அடிக்கப் போயிட்டேன். ‘உன் பொண்ணுதான்யா எனக்குப் பொண்டாட்டி’னு சவால் விட்டுப் பேசியிருக்கான். ‘கம்ப்ளெயிண்ட் கொடுங்க, ஈவ்டீஸிங் கேஸ்ல உள்ளே தள்ளிடலாம்’னு வேண்டிய இன்ஸ்பெக்டர் கூடச் சொன்னாரு. வன்மம் வெச்சு வெளியில வந்து ஏதாச்சும் பண்ணிட்டா என்ன பண்றதுனு பொறுமையாகப் போனேன். எதேச்சையா, ஒரு அடிதடி கேஸ்ல உள்ளே தள்ளி, ஒரு வருஷம் போட்டுட்டாங்க. நிம்மதி ஆயிடுச்சு.."

“சரி..."

“அந்த படவா ராஸ்கலை நான் சுத்தமா மறந்து போயிட்டேன். அமெரிக்க மாப்பிள்ளை சார்... என் அந்தஸ்துக்குக் குறையாதவங்க... நாளைக்கு ஒம்போது பத்தரை முகூர்த்தம். மாப்பிள்ளைக்கு லீவு இல்லை. அதனால, நாளைக்கே புறப்படறாங்க... இப்ப வந்து, அந்தப் பொறுக்கிப் பயலைப் பத்தித் தகவல் சொல்லி பதற வெச்சுட்டாங்க சார்..."

“போன் எதுவும் செஞ்சானா...?’

“இல்லை... இந்தக் கல்யாணத்தை நடக்கவிடாம ஏதாச்சும் கலாட்டா செஞ்சிடுவானோனு எனக்குப் பயம். இதுதான் அவன் போட்டோ... அவன் இங்கே வந்துடக் கூடாது. எதுவும் நடந்துடக்கூடாது. நீங்க என்ன ஏற்பாடு வேணும்னாலும் செய்யுங்க... எத்தனை லட்சம் செலவானாலும் பரவாயில்லை... அட்வான்ஸா எவ்வளவு வேணும்...?"

தேவராஜ் தலையசைக்க, டை ஆசாமி சின்ன சூட்கேஸோடு ஓடிவந்து திறந்து அவர் பக்கம் நீட்ட.... பணம்... மேலும் பணம்!

அவசர அவசரமாக அத்தனை ஏற்பாடுகளிலும் இறங்கி, அதிகாலை நான்கு மணிக்கு பாம் ஸ்குவாட் வந்து, மண்டபத்தின் ஒவ்வொரு சதுர சென்டி மீட்டரும் தடவிப் பார்ததார்கள்.

ஒரே ஒரு நுழைவு வாசல் மட்டும் பயன்படுத்த உத்தரவிடப்பட்டு,

அங்கே பிரத்தியேக எலெக்ட்ரானிக் வாசல் நிறுத்தப்பட்டது.

“யாரா இருந்தாலும் இது வழியா நுழைஞ்சுதான் உள்ளே வரணும். கேட்டா, மினிஸ்டர்ஸ்லேர்ந்து பல வி.ஐ.பிஸ் வர்றதால இந்த ஏற்பாடுனு சொல்லுங்க. மக்கள் இப்போ இதுக்கெல்லாம் பழகிட்டதால புரிஞ்சுக்குவாங்க. சூட்கேஸ், பேக் கி்ஃப்ட் பார்சல் எது எடுத்துட்டு வந்தாலும் ஸ்கேன் செய்யாம அலோ பண்ணாதீங்க.

அங்கங்கே தனது ஏஜென்சி நபர்களை நிறுத்திப் பரபரவென்று உத்தரவுகள் கொடுத்துக் கொண்டிருந்தான் பரத்.

சி.சி.டி.வி. காமிராக்கள் எட்டு பொருத்தப்பட்டு, ஒரு அறை கண்ட்ரோல் அறையாக உருமாறி, அங்கே எட்டு மானிட்டர்களிலும் பல ஏரியாக்களின் காட்சிகள் நகர்ந்து கொண்டிருந்தன.

ஏழு மணியிலிருந்து உறவினர்களும், நண்பர்களுமாக வரத் துவங்கி, பார்க்கிங் பகுதியில் கார்களும் ஸ்கூட்டர்களுமாக நிறையத் துவங்கி, அத்தர் போட்ட வித்வான்கள் சந்தனப் பொட்டுகளுடன் இரட்டை நாயனத்தில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

கண்ட்ரோல் அறையில் காதுகளில் ஹெட் போன் மாட்டி அமர்ந்திருந்த பரத், உன்னிப்பாக ஒவ்வொரு மானிட்டரையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

ஜெரால்டின் புகைப்படங்கள் பிரதி எடுக்கப்பட்டு, ஸ்டாண்டில் பொருத்தி வைக்கப்பட்டு, பல உதவியாளர்களின் பாக்கெட்டுகளிலும் செருகப்பட்டிருந்தன.

கதவைத் தள்ளி கொண்டு உள்ளே வந்த சுசிலா, “என்னாச்சு பரத், சிக்கிட்டனா...?" என்று அமர்ந்தாள்.

“இல்லை... நீ போன விஷயம் என்னாச்சு...?"

“ஜெரால்டோட வீட்டு அட்ரஸ் விசாரிச்சுப் போறதுக்குள்ளே..."

“ஸ்டாப் இட்! மேட்டர் என்ன...?

“அவனோட வயசான அம்மா மட்டும்தான் இருந்தாங்க. நேத்து காலைல ரிலீஸானதும் ஜெரால்டு நேரா வீட்டுக்குத்தான் வந்திருக்கான். எதுவும் பேசலையாம். அவனோட ஃப்ரெண்டு ஒருத்தன் வந்து ‘அபூர்வாவுக்கு நாளைக்கு கல்யாணம்’னு தகவல் சொன்னதும், அவனையும் கூட்டிக்கிட்டு வெளியில போனவன்தான்... இந் நிமிஷம் வரைக்கும் வீடு திரும்பலை."

“அப்போ கண்டிப்பா வருவான் சுசி. அங்கே..."

“நம்மாளுங்க ரெண்டு பேரை நிறுத்தி வெச்சுட்டேன். அவன் வீட்டுக்குத் திரும்பினா உடனே மடக்கிடுவாங்க. ஆனா, ராத்திரி பூரா வீட்டுக்குத் திரும்பலைன்னா..."

“ஏதோ பிளான் பண்ணிருப்பான்னுதான் அர்த்தம். வரட்டும்... அவன்

எப்படி வந்தாலும் மடக்கிடலாம். ஒரு சின்ன சந்தேகம் வந்தாலும் ஒரங்கட்டி விசாரிக்கச் சொல்லியிருக்கேன். அறுபது பேர் நம்மாளுங்க இங்கே இருக்காங்க. கொஞ்சம் பேர் சாதாரணமா, கொஞ்சம் பேர் மாறுவேஷத்துல..."

“எந்த அசம்பாவிதமும் நடந்துடாம இந்தக் கல்யாணத்தை நடத்திக் காட்டிடணும் பரத்" என்றால் சுசிலா.

ஒன்பது மணிக்கு மண்டபத்தில் நாற்காலி இல்லாமல் ஓரங்களில் நிற்கத் துவங்கினார்கள். மண்டபத்தின் பார்க்கிங் பகுதியில் இடமில்லாமல் தெரு முழுக்க கார்களை நிறுத்தத் துவங்கினார்கள்.

ஒரு பக்கம் பாண்டு வாத்தியம், இன்னொரு பக்கம் நாதஸ்வரம் என்று சத்தம் நிரப்பி எல்லோரையும் கத்திப் பேச வைத்துக் கொண்டிருக்க, அமெரிக்க மாப்பிள்ளை அய்யர் சொல்லும் மந்திரங்கை உச்சரிக்க சிரமப்பட்டு கடைசி வார்த்தையை மட்டும் சொல்லி அக்னியில் நெய் ஊற்றிக் கொண்டிருந்தான். வயதான உதவி அய்யர் அரிசியில் மஞ்சள் கலந்து அட்சதையாக்கிக் கொண்டிருந்தார்.

கண்ட்ரோல் அறையில் டபிள்சும் மென்று கொண்டிருந்த பரத், மானிட்டர்களை மேய்ந்தபடி, “பட்டுப் புடவைல ஆபூர்வா படு அம்சம்! இல்லையா?" என்றான்.

“இன்னொருத்தன் பொண்டாட்டி பரத்" என்றாள் சுசீலா.

“இன்னும் ஆகலையே... தாலி கட்டற வரைக்கும் சைட் அடிக்கிற உரிமை இருக்கு. அதுக்காக கல்யாணமான பொண்ணுங்களை... ஏய்! இரு! இதோ பாரு... பாண்டு கும்பல்ல நாலாவதா நிக்கிற ஆளு திருதிருன்ன முழிக்கிறான். ஜெரால்ட் மாதிரியே மூக்கு! வந்துட்டேன்."

பரத் புறப்பட்டுப் போன வேகத்தில் இரண்டே நிமிடங்களில் திரும்பி வந்து, “அவன் இல்லை... புதுசா சேர்ந்தவனாம். இதான் முதல் கச்சேரி. அந்த டென்ஷன்... சுசி... எல்லோருக்கும் அட்சதை கொடுத்துக்கிட்டிருக்காரே அந்த அய்யர் தாத்தா, அவரோட தாடியை இழுத்துப் பார்த்துட்டு வந்துடறேன், இரு" என்றான். சென்றான்.

திரும்பி வந்து, “யாரைப் பார்த்தலும் சந்தேகம் வருது சுசி. இத்தனை செக்யூரிட்டி அரேன்ஜ்மெண்ட்ஸ் தாண்டி அந்த படவா ராஸ்கல் வருவான்னு எனக்கு நம்பிக்கை இல்லை" என்றான்.

முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அபூவர்வா அழைத்துவரப்பட்டு மணவறையில் அமர்ந்ததும் மாப்பிள்ளை சைடில் புன்னகைத்தான்.

நியூஸ்பிரிண்ட் காகித ரோல்கள் உருட்டி, இலைகள் போட்டு முதல் பந்திக்கு பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

தேவராஜின் நிறுவன ஊழியர்கள் அச்சடித்து வாழ்த்து மடல்களை (வலது மூலையில் சாக்லேட் இணைப்பு) இப்போதே விநியோகித்துக்

கொண்டிருக்க...

தட்டில் வைத்து வந்த மாங்கல்யத்தை முதல் வரிசை பெரிய மனிதர்கள் மட்டும் ஆசீர்வதித்து அனுப்ப... சாப்பிடாமல் திரும்பிப் போகும் ஜனங்களுக்கு கொடுக்க தாம்பூலப் பைகளை தயாராக வைத்துக் கொண்டு ரிசப்ஷன் கும்பல் காத்திருக்க...

அய்யர் உள் கையில் ரோமன் எண்கள் கொண்ட வாட்சில் நேரம் பார்த்துக் கொண்டு தலையை ஆட்டியபடி தேவராஜிடன் ஒரு மௌன ஆமோதிப்பு பெற்றுக் கொண்டு, “சகல வாத்தியம்!" என்றார்.

தட்டிலிருந்து தாலியை எடுத்து நீட்டி, மந்திரம் சொல்லி, அமெரிக்க மாப்பிள்ளை வாங்குவதற்கு முன்பாக திடீரென்று தாலியைப் பிடுங்கி அவசரமாக அபூர்வாவின் கழுத்தில் கட்டிவிட்டார் தாடி வைத்த வயதான உதவி அய்யர்!

அத்தனை பேரு உறைந்து போய்... வாத்தியங்கள் நின்று போய்... தாடியை உருவிப் போட்டான் ஜெரால்ட்.

“அடப்பாவி! நீ சுப்புணி அனுப்பி வெச்ச ஆளில்லையா?" என்றார் பெரிய அய்யர்.

ஜெரால்ட் மைக்கை எடுத்துக் கொண்டு, “எல்லாரும் என்னை மன்னிக்கணும். நானும் அபூர்வாவவும் உயிருக்குயிரா காதலிக்கிறோம். போலீஸுக்குப் பணம் கொடுத்து என் மேல் பொய் கேஸ் பேட்டு உள்ளே அனுப்பினார் இவளோட அப்பா. இந்தக் கல்யாண ஏற்பாடுகளுக்கு ஒத்துழைக்கிற மாதிரி நடிச்ச அபூர்வா ஜெயில்ல என்னை சந்திச்சுப் பேசினா. ரெண்டுபேரும் சேர்ந்து போட்ட திட்டம்தான் இது. இது மணமகளோட முழு சம்மதத்தோட உங்க எல்லோரட ஆசீர்வாதத்தோட நடந்திருக்கிற கல்யாணம்தான்" என்றான்.

அபூர்வா எழுந்து அப்பாவைப் பார்த்து, “என்னை மன்னிச்சிடுங்கப்பா. அவர் சொல்றது எல்லாம் உண்மைதான்" என்றாள்.

பல பெரிய மனிதர்கள் ரொம்ப நேரம் பேசி சமானதானப்படுத்திய பிறகு அவர்களை வேறு திசையில் பார்த்துக் கொண்டு ஆசீர்வதித்தார் தேவராஜ்.

காரில் மூன்லைட் டிடெக்டிவ் ஏஜென்சி நோக்கி வந்து கொண்டு இருந்த பரத்திடம் சுசிலா, “ச்சே! தேவராஜ் நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி எத்தனை கேள்விகள் கேட்டார். நூறு தடவை ஸாரி சொல்லி வழிஞ்சிங்களே... ரொம்ப அவமானம் பரத்." என்றாள்.

“பரவாயில்லை சுசி... என் கவனத்துக்கு வந்தும் இந்தக் கல்யாணத்தை நடத்த அனுமதிச்சேன்னு உண்மையைச் சொன்னா நம்ம மேல கேஸே போட்டுடுவாரே..."

“என்ன சொல்றீங்க?"

“அந்த அய்யர் காதுல பிரஸ் டைப் கடுக்கனைப் பார்த்ததுமே எனக்குச்

சந்தேகம். தனியா கூட்டிட்டுப போய் விசாரிச்சேன். எல்லாம் சொல்லி கால்ல விழுந்துட்டான். அலங்காரத்தில் இருந்த அபூர்வாவை சந்திச்சும் எல்லாம் உண்மைன்னு உறுதிப் படுத்திக்கிட்டேன். நமக்கு ஒரு கேஸ் தோற்கறதை விட ஒரு நிஜமான காதல் தோற்கறது கொடுமை சுசி. அங்கேயே ரெண்டு பேரையும் ஆசீர்வாதம் பண்ணிட்டேன்."

"ச்சே! என்கிட்ட கூட சொல்லாம..."

"அபூர்வாவை அணைச்சு ஆசீர்வாதம் செஞ்சதைக் கூடத்தான் சொல்லலை."

"ஏய்...?"

அவள் அவன் புஜத்தில் குத்தியதில் கார் கோணலாக ஓடி அவசரமாக சமாளித்து நேரானது.

------------------------------

## 17

# வில்லன் என்கிற கதாநாயகன்

எல்லாம் முடிந்துவிட்டது என்று நினைத்திருந்த வேளையில்தான் 'அது' ஆரம்பித்தது.

அதைத்தான் அறுபதுகளில் எழுதின கதாசிரியர்கள் 'விதி சிரித்தது' என்று வர்ணிப்பார்கள்.

முகேஷ், ஸ்வேதாவை முதன்முதலில் எங்கே சந்தித்தான், அவர்களுக்குள் காதல் எப்படி ஏற்பட்டது என்பதையெல்லலாம் இது நாவல் இல்லை என்பதால், கடந்து வந்து விடலாம்.

இன்னும் பதினைந்து நாட்களில் அவர்களுக்குக் கல்யாணம்.

பட்டுப்புடவை எடுத்தாயிற்று. பந்தலக்குச் சொல்லியாயிற்று. பத்திரிகை புரூஃப் பார்த்துக் கொடுத்தாயிற்று. பாயசம் என்ன என்ற முடிவெடுத்தாயிற்று.

முகேஷுக்கு உள்ளே ஒரு கன்றுக் குட்டி உதைத்துக் கொண்டுதான் இருந்தது. தினம் ஒரு முறை கேசவனிடம் கேட்டுக் கொண்டுதானிருந்தான்.

"கேசவா, இது தப்பில்லையா?"

"என்ன தப்பு?"

"ஒரு முக்கியமான உண்மையை மறைச்சுட்டு ஒரு பொய் சொல்லி நம்ப வெச்சிருக்கேனே..."

"உனக்கொரு பொன்மொழி தெரியுமா முகேஷ்?"

“ஆயிரம் பொய் சொல்லி... அதானே?"

“அதில்லை... யுத்தத்திலேயும் காதல்லயும் எதுவுமே தப்பில்லை..."

“எத்தனை நாளைக்குடா மறைக்க முடியும்? நாளைக்கு ஸ்வேதாவுக்கு உண்மை தெரியாமப் போயிடுமா?"

“தெரியட்டும். என்ன ஆகும்?"

“என்னை வெறுத்துட மாட்டாளா?

ஆத்திரப்படமாட்டாளா? என்னோட சண்டை போட மாட்டாளா?"

“எல்லா யுத்தங்களும் முதல் முப்பது நாட்களுக்குத்தான் பிரபலம்னு இன்னொரு பொன்மொழி இருக்கு. என்னதான் சண்டை போட்டாலும் உன் மனைவியாதான் சண்டை போடுவா, ஒரு விளிம்புல சமாதானமும் ஆயிடுவா."

‘எனக்கே ஒரு குற்ற உணர்ச்சி இருக்கேடா."

“சரி... அதுக்கு என்ன செய்யணும்னு சொல்றே?’

“ஸ்வேதாவைச் சந்திச்சு மனசு விட்டுப் பேசிட்டா என்ன?"

“அப்ப மட்டும் ஆத்திரப்படாம ஐஸ்க்ரீம் வாங்கிக் கொடுப்பாளா? ‘இப்படிக் கூசாமப் பொய் சொல்ற ஆசாமியை நான் கல்யாணம் செய்துக்கத் தயாரா இல்லை. குட்பை!"ன்னு சொல்லிட்டுப் போயிட்டா?"

இந்த மகா முக்கிய கேள்வியை கேசவன் எழுப்பியதும் முகேஷ் சைலண்ட்டாகி விட்டான்.

ஸ்வேதா செய்யக்கூடியவள்தான். கோபக்காரி. ரோஷக்காரி. அதுமட்டும் இல்லாமல் சினிமா என்பது அவளுக்கு ஒரு நான்சென்ஸ்!

“ஹாரிபிள் முகேஷ்! ஏதோ நூத்துல ஒரு சினிமாதான் வாழ்க்கையைச் சொல்லுது. மத்ததெல்லாம் ட்ராஷ்! வடிகட்டின குப்பை! அதை அழகா ஸல.்பன் காகிதம் சுத்தி ரிப்பன் கட்டி பொக்கேயோ கொடுக்கறாங்க. அந்தக் குப்பைக்காக வெயில்ல க்யூவுல நிக்கிற நம்ம ஜனங்களை என்னால புரிஞ்சுக்கவே முடியலை."

“ஸ்வேதா, நீ ஏன் சினிமாவைப் பத்தி இவ்வளவு கடுமையான ஒபினியன் வெச்சுருக்கே? ஆ.்ப்டர் ஆல் அது ஒரு எண்டர்டெய்ன்மெண்ட் மீடியா. ஏன் லைட்டா எடுத்துக்க மாட்டேங்கறே?"

“என்னால முடியாது முகேஷ். மாஸ் மீடியால இருக்கிறவங்க பொறுப்போட இருக்கணும். சினிமா ஒரு பயங்கரமான பவர்.்புல் மீடியா. அதுல தப்பு செஞ்சா சமுதாயம் பாதிக்கப்படும். கலாசாரம் பாதிக்கப்படும். அதையெல்லாம் யாரும் யோசிக்கிறதில்லை. இன்னிக்கு சினிமால என்ன செய்யறாங்க? ஒரு பயில்வானைக் கூப்பிட்டுப் புல்லு வெட்டச் சொல்ற மாதிரி இந்த மாஸ் மீடியாவோட பலத்தை வேஸ்ட்

பண்றாங்க."

‘ஒரு படம் எடுக்க எவ்வளவு செலவாகுதுன்னு தெரியுமா உனக்கு? ஹெவி இன்வெஸ்ட்மெண்ட் கமர்ஷியலா படமெடுத்தாதான் போட்ட பணத்தை எடுக்க முடியும். அதுக்கு நடுவுலயும் நல்ல படங்கள் வர்றப்போ சந்தோஷப்பட்டுக்கோயேன்."

“இரு... நானும் பல தடவை பார்த்துட்டேன். சினிமா பத்தி குத்தம் சொன்னா உனக்கு ஏன் கோபம் வருது? உனக்கும் சினிமாவுக்கும் எந்த விதத்துலயும் சம்பந்தம் இல்லை. அப்புறம் ஏன்?"

‘சம்பந்தம் இருக்கு ஸ்வேதா. நான் ஒரு நடிகன். தெலுங்குல இருபது படம் முடிச்சட்டேன். துண்டு துக்கடா ரோல்ல ஆரம்பிச்சு இப்போ வில்லன் காரெக்டர்ஸ் பண்ணிட்டிருக்கேன். ஒரு பிரேக் எதிர் பார்த்துட்டிருக்கேன். சத்யராஜ் மாதிரி, ரஜினி மாதிரி என் கேரியர்ல ட்விஸ்ட் வந்து பெரிய ஹீரோ ஆகப்போறேன். என் கனவு, லட்சியம் எல்லாம் அதுதான். அதுக்காகத்தான் ஊரைவிட்டு ஓடி வந்தேன். சென்னையில தங்கியிருந்தாலும் மாசத்துல பதினஞ்சு நாள் ஹைதராபாத் போயிட்டு வர்றது சினிமா ஷூட்டிங்குக்காகத்தான். நான் ஒரு சினிமா நடிகன்னு சொன்னா நீ என்னோட பழகமாட்டியோன்னு மெடிக்ல் ரெப்புன்னு பொய் சொன்னேன்’ என்று சொல்லிவிட ஒவ்வொரு தடவையும் நினைத்து, உடனடியாக விளைவுகளை யோசித்து கைவிட்டிருக்கிறான்.

இந்தச் சூழ்நிலையல்தானா ஸ்வேதாவின் தம்பி கிஷோர், கல்லூரி டூர் என்ற ஹைதராபாத் வர வேண்டும்? மியூஸியம் பார்க்க வந்தவன், பக்கத்து சாலையில் கும்பல் பார்த்து ‘நாகார்ஜுனா ஷூட்டிங்’ என்ற அறிந்து ஏன் வரவேண்டும்? அந்தச் சமயத்தில், முக்கிய வில்லன் முகேஷ் பைக்கில் நாகார்ஜுனாவைத் துரத்தியபடி துப்பாக்கியால் சுடுகிற காட்சியை ஏன் எடுக்க வேண்டும்?

அந்த ஷாட் முடிந்ததும் லன்ச் பிரேக் அறிவிக்கப்பட, எதிரில் வந்து அமைதியாக நின்ற கிஷோரைப் பார்த்து அதிர்ந்தான் முகேஷ்.

“விசாரித்தேன். தெலுங்குல நீங்க ரொம்ப பாப்புலர் வில்லனாமே. அக்காவையும், என் குடும்பத்தையும் அழகா நம்பவெச்சு ஏமாத்தீட்டீங்க. நல்ல வேளை, இன்னும் கல்யாணம் நடக்கலை."

“கிஷோர், இதோ பாரு... லெட் மி எக்ஸ்ப்ளைன். நான் பண்றதென்னவோ வில்லன் ரோல்தான். ஆனா..."

முகேஷ் வாக்கியம் முடிக்கும் முன்பாகவே கிஷோர் போய்விட்டான்.

அன்றிரவே ரயிலேறி மறுநாள் சென்னை வந்து ஸ்வேதா வேலை பார்க்கும் ஏற்றுமதி நிறுவனத்துக்கு போன் செய்து உயிரே இல்லாமல், “ஸ்வேதா, நான் முகேஷ் பேசறேன்" என்றான்.

“முகேஷ்னு சொல்லாதே... மனோஜ்னு சொல்லு. தெலுங்குல உன் பேர் அதானே? கிஷோர் தெலுங்கு சினிமா பத்திரிகை பத்து வாங்கிட்டு

வந்தான். பக்கத்து வீட்டுப் பையனைக் கூப்பிட்டு உன் படம் போட்டிருந்த எல்லா நியூஸும் படிச்சோம்."

"ஸ்வேதா, எனக்குத் தெரியும் நீ கோபப்படுவேன்னு. என் நிலைமை என்னன்னா?"

"நீ சொல்ல வேணாம். உன் நிலைமை என்னன்னு தான் படிச்சுத் தெரிஞ்சுக்கிட்டனே. போன வருஷம் சிறந்த வில்லன் நடிகர் அவார்டு! பொருத்தமான அவார்டுதான்."

"ஸ்வேதா, நான் உன்னை நேர்ல சந்திக்கணும்."

"ஏன், இதுவரைக்கும் நடிச்சுக் காட்டின லவ் ஸீன்ல பத்தாதா? ஏதாச்சும் ஸீன் நடிச்சுக்காட்டணுமா?"

"என்னைக் கொல்லாதே ஸ்வேதா. நான் உன்னை ரொம்ப சின்ஸியரா லவ் பண்றேன். என் உண்மையான தொழிலை மறைச்சது தவிர, வேறு எந்தத் தப்பும் நான் பண்ணலை."

"எவ்வளவு பெரிய பொய்!"

"தப்புதான். பெரிய தப்புதான். எப்படி மன்னிப்பு கேக்கணும்னு சொல்லு. கேக்கறேன். ஆனா, என்னை வெறுத்துடாதே. நான் உன் ஆபீஸுக்கு வர்றேன் நேர்ல..."

"வரவேண்டியதில்லை."

"ப்ளீஸ் ஸ்வேதா. என்னைப் புரிய வைக்கிறதுக்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் கொடு. நீ ஆத்திரப்படு... நியாயம். ஆனா அவசரப்படாதே! நான் வர்றேன். இப்ப வர்றேன்.'

மேற்கொண்டு அவள் மறுத்து சொல்லுமுன் போனை வைத்துவிட்டு பைக்கில் புறப்பட்டான்.

அந்தக் கட்டடத்தின் ஏழாவது மாடிக்கு லி்ஃப்டில் வந்தான். 'மொட்டை மாடியில் உனக்காகக் காத்திருக்கிறேன்' என்று எழுதிய சீட்டை பியூன் மூலம் ஸ்வேதாவுக்கு அனுப்பிவிட்டு கட்டடத்தின் மொட்டை மாடிக்கு வந்தான்.

சில நிமிடங்களில் துப்பட்டாவை சரி செய்தபடி வந்த ஸ்வேதா, அவனைப் பார்க்காமல் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றாள்-.

அருகில் வந்து கைகளைப் பிசைந்தாள்.

"ஸ்வேதா, சினிமாக்காரங்களை எட்டி நின்னு ரசிக்கிறதுக்குத் தயாரா இருக்கிற இந்த உலகம், நெருங்கி வந்து வாழ்க்கையோட சம்பந்தம் வெச்சுக்கிறதுக்கு மட்டும் ரொம்பத் தயங்கும். அந்தப் பயத்துலதான் நான் நடிகன்றதை மறைச்சுட்டேன். ஒரு நடிகனோட காதல் மட்டும் பவித்ரமா இருக்காதா ஸ்வேதா? ஆர் யூ நாட் மெச்சூர்ட்? புரிஞ்சுக்கமாட்டியா?"

“முகேஷ், எனக்கு உன் காதல் மேல சந்தேகம் இல்லை. ஆனா உன் நேர்மை மேல சந்தேகம் வந்துடுச்சு. என்னை ஏமாத்திட்டியே."

“காதலுக்காகத்தான் ஸ்வேதா, என் காதலுக்கு என் காதலியே எதிரியாயிடக் கூடாதுங்கறதுக்காகத்தான்."

“நிஜமாவா? என்னை நீ அவ்வளவு லவ் பண்றியா?"

“எப்படி நிரூபிக்கணும்னு சொல்லு!"

“நான் என்ன சொன்னாலும் செய்வியா?"

“சொல்லு, செய்றேன்."

“பயப்படாதே. இந்தக் கட்டடத்திலிருந்து குதின்னு அபத்தமா சொல்லமாட்டேன். உன்னால முடியும். செய்வியா?"

“என்ன?"

“எனக்குப் முகேஷைப் பிடிச்சிருக்கு. முகேஷோட காதல் பிடிச்சிருக்கு. அனா, முகேஷோட தொழில் பிடிக்கலை. யு நோ வெல், ஐ ஹேட் சினிமா? என் ஹஸ்பெண்ட் சினிமா நடிகனா! நோ... எனக்குப் பிடிக்கலை, அதுலயும் வில்லன் நடிகன்!"

“கூடிய சீக்கிரம் ஹீரோ ஆகப் போறேன் ஸ்வேதா."

“ஓ.கே. அதான் உன் லட்சியம்னா என்னை விட்டுடு! நீ எனக்கு மட்டும் ஹீரோவா இருக்கணும். நடிப்புக்காக இருந்தாலும் கண்டவளை நீ கட்டிப் பிடிக்கிறதை என்னால சகிச்சுக்க முடியாது. சினிமாவை நீ விட்டுடறேன்னா இந்தக் கல்யாணம் நடக்கும். என்ன சொல்றே?"

அமைதியாக நின்றான் முகேஷ்.

“ஸ்வேதா, நான் சின்ன வயசிலேர்ந்து..."

“நோ... எனக்கு எந்த விளக்கமும் வேணாம். உனக்கு நான் வேணுமா, சினிமா வேணுமான்னு மட்டும் முடிவெடு. நாளைக்கு ஈவினிங் ஆறு மணிக்கு நான் என் ஆபீஸ்ல வெய்ட் பண்றேன்."

“நாளைக்கு ஈவினிங் சென்னையிலயே ஷூட்டிங் இருக்கு ஸ்வேதா."

“நான் ஏழு மணி வரைக்கும் வெய்ட் பண்றேன். நீ வரலைன்னா உன் முடிவைப் புரிஞ்சுக்கறேன். நான் வேணும்னு முடிவெடுத்தா வா!"

ஸ்வேதா வேகமாகச் சென்ற படிகள் இறங்கினாள்.

----

தன் பாக்கெட்டில் சிகரெட் தீர்ந்து போயிருக்க, கேசவனின் சிகரெட் பாக்கெட்டிலிருந்து எடுத்துப் பற்ற வைத்தான் முகேஷ்.

“போடா பைத்தியக்காரா... அவ கண்டிஷன் போட்டாளாம். இவன் சினிமாவை விட்டுடறதுன்னு தீர்மானிச்சுட்டானாம். உன்னோட

கனவுடா அது! எத்தனை வருஷமா நாய் மாதிரி அலைஞ்சே... ஞாபகமிருக்கா? இப்பதான் நீ வளர்ந்துட்டு வர்றே பிரைட்ஃப்யூச்சர் இருக்கு. உன் கனவு நிறைவேறப் போற நேரம்! நாளைக்கு நீ பெரிய நடிகனானதும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க அழகான பொண்ணுங்க ஆயிரம் பேர் போட்டி போடுவாங்க" என்றான் கேசவன்.

“கரெக்ட்டுதான். அந்த ஆயிரம் பேர்லேர்ந்து எனக்கு ஒரு மனைவி கிடைப்பா! ஆனா, என் காதலி மனைவியா கிடைப்பாளா கேசவா? என்றான் முகேஷ்.

“ஸோ?"

“நாளைக்கு கார், பங்களா, பணம், புகழ் எல்லாம் அனுபவிக்க முடியும். ஆனா, சேர்ந்து அனுபவிக்க என் ஸ்வேதா இருக்கமாட்டா. காதல்ல தோத்துட்டு கனவை நனவாக்கிக்கறதுல ஒரு வெறுமை இருக்குடா. கனவைக் கலைச்சுட்டு காதல்ல ஜெயிக்கிறதுல ஒரு சுகம், நிம்மதி, சந்தோஷம் எல்லாம் இருக்குடா. புதுசா கனவுகளை உருவாக்கியிக்க முடியும். இன்னொரு தடவை புதுசா ஒரு காதலை உருவாக்க முடியாது. அது ஒரு தடவைதாண்டா அமையும்."

“சந்தர்ப்பமும் ஒரு தடவைதான் கிடைக்கும். சினிமா ஆசையோட தினம் எத்தனை பேர் ரயிலேறி வர்றான் தெரியுமா? ஒரு சின்ன ரோல் கிடைக்காதான்னு எத்தனை ஆயிரம் பேர் சுத்திக்கிட்டிருக்கான் தெரியுமா? உனக்கு மட்டும்தாண்டா வாய்ப்பு கிடைச்சது. மனசுக்குப் பிடிச்ச மனைவி அமையறது சொர்க்கமா இருக்கலாம். ஆனால் மனசுக்குப் பிடிக்காத தொழில் அமையறது நரகம்டா!"

“நீ என்னதான் சொல்றே?"

“சினிமாவைக் காதலுக்காக விடறத சரியில்லை. சினிமாதான் என் முதல் காதலின்னு பல தடவை நீயே சொல்லி இருக்கே. உன் ரெண்டாவது காதலிக்காக முதல் காதலியை ஏன் விடணும்? உன் முடிவால காதல்ல ஜெயிச்ச சந்தோஷம் மட்டும்தான் இருக்கும். காதல் மயக்கம் முடிஞ்சதும் மனசு பூரா ஏமாற்றம் இருக்கும். அவ வார்த்தையை நீ மதிக்கிறே. ஆனா, உன் லட்சியத்தை அவ மதிக்கலையே."

“மதிக்கணும்னு என்னடா அவசியம்? எனக்கு சினிமா பிடிக்கும். அவளுக்கு பிடிக்காது. பிடிக்காததைத் திணிக்க முடியாது. ஆனா, பிடிச்சதை விட்டுக் கொடுக்க முடியும். விட்டுக் கொடுக்கறதுதானே வாழ்க்கை! காதலுக்காக உயிரையே விடறாங்க. நான் என் கனவைத்தானே விடறேன்."

“இது யதார்த்தமான முடிவு இல்லை. எமோஷனலான முடிவு. எனக்குப் பிடிக்கலை. ப்ராக்டிக்கலா யோசி, ராத்திரி பூரா யோசி. அப்புறம் முடிவு செய்!"

“முகேஷ் மற்றொரு சிகரெட் பற்றவைத்துக் கொண்டு அறைக்குள்

உலவியபடி யோசிக்கத் துவங்கினான்.

---

மறுநாள் மாலை ஆறு மணிக்கத் தன் அலுவலகத்தில் காத்திருந்த ஸ்வேதா, ஒலித்த போனை எடுத்தாள்.

“ஸ்வேதா, நான் முகேஷ் பேசறேன். நான் ஒரு அட்ரஸ் சொல்றேன். நீ உடனே புறப்பட்டு அங்கே வா."

சொல்லப்பட் விலாசத்தைக் குறித்து கொண்ட ஸ்வேதா, “இது என்ன அட்ரஸ்?" என்றாள்.

‘இங்கதான் ஷுட்டிங் நடந்துட்டிருக்கு ப்ளீஸ்... வா! பேசணும்."

முகேஷ் வைத்துவிட, முகம் சிவந்தாள் ஸ்வேதா.

நான் அவ்வளவு தூரம் சொல்லியும் ஷுட்டிங்க் போயிருக்கிறான் என்றால். அவனுக்கு நான் முக்கியமில்லை என்றுதானே அர்த்தம்? இன்னும் பேச என்ன இருக்கிறது?

ஸ்வேதா ஆட்டோ பிடித்து வந்து சேர்ந்தாள்.

முகேஷ் கையில் கத்தி வைத்துக் கொண்டு, “ரேணு நின்னி சம்ப்பேஸ்த்தானு! நிஜம் செப்பு! செப்பே! என்று ஆக்ரோஷமாக ஒரு பெண்ணை உலுக்கி வசனம் பேசிக்கொண்டிருந்தான்.

அடுத்த ஷாட்டுக்கான இடைவெளியில் அவளருகில் வந்தான் முகேஷ்.

“என்ன? ‘என்ன மன்னிச்சுடு. என்னால சினிமாவை விட முடியாது!" - அதானே சொல்லப்போறே?" என்றாள் ஸ்வேதா.

“இல்லை,"

“பின்னே?"

உதவி இயக்குநர் வந்து, “சார், ஷாட் ரெடி! வாங்க, வந்து கொலை செய்யுங்க" என்றான்.

ஸ்வேதா, முகேஷைப் பார்ததாள்.

கண்ணெதிரே கத்தியைச் சுழற்றிக் காட்டியபடி, “இது என் கடைசிக் கொலை" என்ற சிரித்தான் அவன்.

முற்றும்